விலை: 20.00
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 சித்திரை 12 புதன்கிழமை (25.04.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 127

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## கடத்தல்கள், இனப்படுகொலைகள் மற்றும் பாலியல் வன்கொடுமைகளில் ஈடுபட்ட

# அதிகாரிகளின் பட்டியல் ஐ.நாவிடம் கையளிப்பு

**(ஜெனிவா) இலங்கையில் வெள்ளை வான் கடத்தல்கள், இனப்படுகொலைகள், பாலியல் வன்கொடுமைகள் உள்ளிட்ட மனித குலத்துக்கு எதிரான கொடூரங்களில் ஈடுபட்ட விசேட அதிரடிப்படை மற்றும் பொலிஸ் அதிகாரிகளின் பெயர் விபரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை சர்வதேச மனித உரிமைகள் அமைப்பொன்று ஐக்கிய நாடுகள் சபையிடம் கையளித்துள்ளது.**

இலங்கையில் எஸ்.ரி.எப் என்றழைக்கப்படும் விசேட அதிரடிப்படை பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட மனித குலத்திற்கு எதிரான கொடூரங்களுடன் தொடர்புடைய அதிகாரிகளின் பெயர் விபரங்கள் அடங்கிய பட்டியலொன்றை சர்வதேச மனித உரிமைகள் அமைப்பொன்று ஐக்கிய நாடுகள் சபையிடம் கையளித்துள்ளது.

ஐ.ரி.ஜே.பி என்ற இலங்கை நீதிக்கும் நியாயத்திற்குமான சர்வதேச அமைப்பு இந்த பட்டியலை வழங்கியுள்ளதுடன், அந்த அமைப்பு நேற்று முன்தினம் லண்டனில் வைத்து வெளியிட்ட அறிக்கையொன்றில், வெள்ளைவான் கடத்தல்கள், சட்டத்திற்கு புறம்பான படுகொலைகள் மற்றும் பாலியல் வன்கொடுமைகள் உள்ளிட்ட மனித 23☛

## முல்லைத்தீவில் 15 வயது சிறுவனை காணவில்லை

### பொலிஸில் முறைப்பாடு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுதந்திரபுரம் மத்தி 23☛

## பாடசாலை மாணவன் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவன் ஒருவன் வீட்டிலிருந்து நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளான். இச்சம்பவம் நேற்று நீர்வேலி தெற்கு பகுதியில் இடம்பெற்று 23☛

## விபத்தில் காயமடைந்த இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி சந்திக்கு அருகில் ஏற்பட்ட விபத்தில் படுகாயமடைந்த இளைஞர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் கிளவிதோட்டம் கரவெட்டியைச் சேர்ந்த திருவம்பலம் கவிராஜ் (வயது24) 23☛

### வெசாக் பண்டிகையை முன்னிட்டு

## மதுபான விற்பனை நிலையங்கள் ஒருவார காலத்துக்கு பூட்டு

(கொழும்பு)

வெசாக் உற்சவத்தினை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் ஒரு வாரத்திற்கு மதுபான விற்பனை நிலையங்களை மூடுவதற்கு இலங்கை மது வரித்திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இலங்கை மது வரித்திணைக்கள ஜெனரல் ஆர்.சேமசிங்கவின் ஆலோசனையின் கீழ் இவ்விசேட செயற்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. மது வரித்திணைக்களத்தினால் எடுக்கப்பட்டுள்ள இத் தீர்மானத்திற்கு எதிராக செயற்படுபவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவ 23☛

### வலி.வடக்கு மாவிட்டபுரத்துக்கு அண்மையில்

## பிள்ளையார் கோவில் காணிக்குள் அத்துமீறி இராணுவத்தினரால் விகாரை அமைப்பு

(யாழ்ப்பாணம்)


வலி.வடக்கில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கு அருகில் காணப்படுகின்ற பிள்ளையார் கோவில் காணிக்குள் அத்துமீறி விகாரை ஒன்று இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் மேற்படி காணி இருந்தபோது குறித்த விகாரை அமைக்கப்பட்ட போதிலும், தற்போது புனரமைப்புப் பணிகளை முன்னெடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த இந்து ஆயைத்துக்கு சொந் 23☛



## உரிய தீர்வு கிடைக்காவிட்டால் நாமே தேடிக்கொள்வோம்!

### கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன்



(கொழும்பு)

ஒன்றிணைந்த இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கு உரிய தீர்வு கிடைக்காவிட்டால் தமிழ் மக்கள் தமக்குரிய வழியினை வகுத்துக் கொள்வார்கள் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். 23☛

## புங்குடுதீவு மாணவி வித்தியாவின் சகோதரிக்கு தொழில்வாய்ப்பு



(கொழும்பு) படுகொலை செய்யப்பட்ட புங்குடுதீவைச் சேர்ந்த மாணவி வித்தியா 24☛

## பௌத்தர்களை கட்டுப்படுத்த கூட்டரசு முயற்சிக்கின்றது

### முன்னாள் ஜனாதிபதி மகிந்த குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டின் பெரும்பான்மையினமான சிங்கள பௌத்த மக்களையும் பௌத்த பிக்குகளையும் கட்டுப்படுத்துவதற்காக தற்போதைய மைத்திரி - ரணில் தலைமையிலான தேசிய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக 23☛



## கோத்தாவை கைது செய்யுமாறு கோரி கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற படுகொலைக்கு முழுக்காரணமாக இருந்த முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்யும்படி அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய இயக்கம் வலியுறுத்தியுள்ளது. 23☛



### போலி ஆவணங்களைத் தயாரித்து

## சிங்கப்பூர் செல்ல முயற்சித்த யாழ்.இளைஞன் கைது

(கொழும்பு)

போலி ஆவணங்களைத் தயாரித்து சிங்கப்பூர் செல்ல முயற்சித்த இளைஞர் ஒருவர் கட்டுநாயக்க விமானநிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பருத்தித்துறையைச் சேர்ந்த 25 வயதான இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞரின் பயணப் பொதியை பரிசோதித்த போது, அதில் சிங்கப்பூரிலிருந்து இங்கிலாந்து செல்வதற்கான விமான பயணச் சீட்டு ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த 23☛

## அரசாங்கத்தில் மாற்றங்களில்லை

### அமைச்சரவை கூட்டத்தில் முடிவு

(கொழும்பு)

இணக்கப்பாட்டு அரசாங்கத்தில் மாற்றங்களை ஏற்படுத்த அவசியமில்லை என நேற்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

புதுவருடத்தின் பின்னர் நேற்றைய தினம் அமைச்சரவை 02☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## தொழிற்சங்கம் மறுத்துள்ளது

வலம்புரி பத்திரிகையில் 22.04.2018 அன்று வெளிவந்த, யாழ்.மாநகரை சுத்தமாக்கும் பணி தென்னிலங்கை தனியார் நிறுவனத்திடம் ஒப்படைப்பு; சுத்திகரிப்பு தொழிலாளர்களின் கூட்டமைப்பு எச்சரிக்கை! என்ற செய்திக்கும் தங்கள் சங்கத்துக்கும் எந்த வித தொடர்பும் இல்லை என வட பிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கத்தின் தலைவர் தா.றொபின்சன் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார். (ம)

## சீ.வீ.கே.சிவஞானத்தின் மனைவி காலமானார்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் அவர்களின் மனைவி திருமதி சறோஜினிதேவி சிவஞானம் நேற்றுமுன்தினம் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இலக்கம் 904/5, பருத்தித்துறை வீதி, நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். (ம)

## அரசாங்கத்தில்...

முதல் முறையாக கூடியது.

கடந்த அமைச்சரவைக் கூட்டத்தைப் புறக்கணித்த அமைச்சர்களும் இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

நேற்றைய அமைச்சரவைக் கூட்டம் மிகவும் சுமுகமான முறையில் இடம்பெற்றதாக அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார். (ம)


வலம்புரி 021 221 7603,
விளம்பரத் தொடர்புகளுக்கு 021 567 1532

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளுக்கு துரித ரூபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-2275)

### வாகனங்கள் வாடகைக்கு தேவை

கார்கள், வான்கள் மாதாந்த வாடகைக்கு தேவை.
0710404978
(3747)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.பஞ்சாட்சரம் கணேசன்

B.Com (Spl), PGDE (Distinction), PGDEM (Merit), PGD.in.Pub. Admin, M.Ed, SLPS.1

Best Wishes

கடந்த 23.04.2018 அன்று கொழும்பு பத்தரமுல்ல இசுருபாய கல்வி அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் தரம் 1 அதிபர்களுக்கான பதவியுயர்வுக்கான நியமனக் கடிதம் வழங்கும் வைபவத்தில் கௌரவ கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் அவர்களிடமிருந்து நியமனக் கடிதத்தைப் பெற்றுக் கொண்ட எமது பாடசாலையின் முதல்வர் மதிப்பார்ந்த திரு.பஞ்சாட்சரம் கணேசன் அவர்களை மனமுவந்து பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் கல்விப் புலத்தில் மிளிர்ந்து பல சிறப்புக்களையும் பெற்றிட வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.

(3740)

## பாராட்டி

Best Wishes
வாழ்த்துகின்றோம்



வட்டக்கச்சி மத்திய கல்லூரி முதல்வர்

திரு.சவிரி பூலோகராஜா

(B.A (Hons), PGDE, M.Ed, PGDEM, S.L.P.S-I)

எமது கல்லூரியின் முதல்வர் திரு. சவிரி பூலோகராஜா அவர்கள் அதிபர் சேவை தரம்-1 (S.L.P.S-1) உயர்வு பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். மென்மேலும் பதவி உயர்வுகள் பெற இறையாசி வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:-
பாடசாலை நலன்புரி சங்கம்
வட்டக்கச்சி மத்திய கல்லூரி
(கு-2395)

## மரண அறிவித்தல்

### திருமதி சரோஜினிதேவி சிவஞானம்



நல்லூரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சரோஜினிதேவி சிவஞானம் அவர்கள் நேற்றுமுன்தினம் (23.04.2018) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மகாலிங்கம்-கமலாதேவி தம்பதிகளின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தையா-தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், சீ.வீ.கே.சிவஞானம் (வட மாகாண சபை அவைத் தலைவர்), அவர்களின் அன்பு மனைவியும், ஞானசுரபி (இலங்கை வங்கி, கோப்பாய்), ஞானசொரூபன் (லண்டன்), சிவப்பிரியா (ஆசிரியை-சென்.ஜோண்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், குலேந்திரராஜா (ஆசிரிய ஆலோசகர்), ஆனந்தசபேசன் (ஆசிரியர்-சென்.ஜோண்ஸ் கல்லூரி), பாசினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்வரஞ்சினிதேவி (பிரான்ஸ்), ஜெயராணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அபிசாலினி, திவ்யன், மேர்கவர்ஷினி, சர்வலக்ஷன், ஜீவிகா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.04.2018) வியாழக்கிழமை 904/5, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

904/5, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
T.P:-0212229702

தகவல்:
சீ.வீ.கே.சிவஞானம் (கணவர்)

## அகவை நிறைவில்

## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



(இ)

திரு. கணேசன் சைவஇறைமணி

ஆசிரியர். (B.A., Dip in Edu.)

இன்று அகவை அறுபதை நிறைவு செய்யும் எமது குடும்ப உறுப்பினர் கணேசன் சைவஇறைமணி அவர்களை மணி விழாக்காணும் இந்நன் நாளில் மனதார வாழ்த்து -வதுடன் அவர் தனது ஓய்வுக் காலத்தில் நீண்ட ஆரோக்கியத்துடன் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

"வாழ்க வளமுடன்"

துன்னாலை மத்தி, கரவெட்டி.

வாழ்த்துவோர்
குடும்ப உறவுகள்

## இந்தியாவிற்கு இடம்பெயர்ந்து தாயகம் திரும்பிய

# 25 குடும்பங்களுக்கு நிரந்தர வீட்டுத்திட்டம்

## 6 கோடி ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து இந்தியாவிற்குச் சென்று மீள யாழ். வந்த குடும்பங்களில் தெரிவு செய்யப்பட்ட 25 குடும்பங்களுக்கு ஆறு கோடி ரூபாய் செலவில் நிரந்தர வீடுகள் அமைத்துக்கொடுப்படவுள்ளன.

டோக்கியோ சுப்பர் சீமெந்து நிறுவனத்தினால் தொழிலதிபர் ஞானத்தின் நிதிப் பங்களிப்புடன் இவ் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இது தொடர்பாக நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவிக்கையில்,

இந்தியாவில் இருந்து மீள நாடு திரும்பியவர்களில் 1100 இற்கும் மேற்பட்டோர் யாழில் உள்ளனர். அவர்களில் மிகவும் வறிய நிலையில் காணியற்றவர்களாக 80 குடும்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில் அவர்களில் தெரிவு செய்யப்பட்ட 25 குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்துக்கொடுக்க மேற்படி நிறுவனமானது முன்வந்துள்ளது.

இதனடிப்படையில் உரும்பிராயில் காணிக் கொள்வனவு செய்யப்பட்டு அதில் தலா 1.8 மில்லியன் ரூபா செலவில் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. இதற்காக தெரிவு செய்யப்படும் 25 குடும்பங்களும் நேர்முகத் தேர்வு ஒன்றின் மூலம் பெண் தலைமைத்துவ குடும்பங்கள், அதிக சிறுபிள்ளைகளை கொண்ட குடும்பங்கள் என பல்வேறு அடிப்படையிலேயே தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் என்றார்.

இதேவேளை இவ் வீட்டுத்திட்டம் தொடர்பாக இவ் வேலைத்திட்டத்திற்கு அந் நிறுவனத்தினால் முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ள ரவீந்திரகுமார் தெரிவிக்கையில்,

தொழிலதிபர் ஞானத்தால் சுமார் 6 கோடி ரூபாய் செலவில் இவ் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. இதற்காக உரும்பிராயில் தனியார் ஒருவரது 32 பரப்புக் காணி கொள்வனவு செய்யப்பட்டு ஒரு குடும்பத்திற்கு ஒரு பரப்பில் வீடுகள் அமைக்கப் படவுள்ளன. காணியானது 60 இலட்சம் ரூபா செலவிலும், வீடுகளானது 5 கோடி ரூபா செலவிலும் அமைக்கப் படவுள்ளன.

இவ்வாறு அமைக்கப்படும் வீட்டுத் திட்ட தொகுதியிலேயே பல்வேறு விடயங்களை உள்ளடக்கவும் தீர்மானித்துள்ளோம். இவ் வீட்டுத் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு எதிர்வரும் மாதம் 5 ஆம் திகதி இடம்பெறும்.

ஒன்பது மாதங்களில் இவ் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு கையளிக்கப்படவுள்ளன. மேலும் இது போன்ற ஒரு வீட்டுத்திட்டம் ஏற்கனவே திருகோணமலை நிலாவெளியில் அமைத்துக் கொடுத்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4-9)

# பாராளுமன்ற புனரமைப்புக்கு 10 பில்லியன் உண்மைக்கு புறம்பான தகவல்

## சபாநாயகர் அலுவலகம் மறுப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் இவ்வருடம் 200 மில்லியன் ரூபாய் மாத்திரமே ஒதுக்கியுள்ளது. 10 பில்லியன் ரூபாய் ஒதுக்கியதாகக் கூறப்படுவது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என சபாநாயகர் அலுவலகம் அறிவித்துள்ளது.

அத்துடன் பாராளுமன்ற கட்டடமானது 30 வருடங்கள் பழைமையானது. மக்களின் பொதுவுடைமை என்ற வகையில் பாராளுமன்றத்தை மறுசீரமைக்க வேண்டியது அவசியமாகும் என்றும் சபாநாயகர் அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பாக பாராளுமன்ற சபாநாயகர் அலுவலகம் நேற்று ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக் கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது. (இ-7)

# தென்னை பயிர்ச்செய்கை சபையின் கரையோர தென்னை வளர்ப்புத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

தென்னை பயிர்ச்செய்கை சபை, மருதங்கேணி பிரதேச செயலகம் இணைந்து 2014 இல் சுனாமியால் பாதிக்கப்பட்டு குடியேறாத நிலையில் உள்ள மக்களுக்கு தென்னை தொடர்பான மானிய ஊக்குவிப்புகளும் தென்னை வளர்ப்பு முறைகள் தொடர்பாகவும் அறியப்படுத்தும் வேலைத் திட்டங்கள் அடங்கிய நிகழ்வு தென்னை பயிர்ச்செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தலைமையில் நேற்றுக் காலை 9 மணியளவில் மருதங்கேணி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில்



214 பயனாளிகளுக்கு தென்னை நடுகைக்குழி மானியத்திற்கான பண வவுச்சர்களும் சுமார் 114 ஏக்கருக்கான தென்னம் கன்றுகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கருத்து தெரிவித்த பிராந்திய முகாமையாளர், இத்திட்டமானது தென்னை வளர்ப்பிற்குரிய விசேட திட்டமாகும். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் தென்னை பயிர்ச்செய்கை சபை, மருதங்கேணி பிரதேச செயலாளரின் ஆலோசனைப்படி இத்திட்டத்தினை கரையோர பசுமைத் திட்டமாக கருதி செம்பியன் பற்று வடக்கு, மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, முள்ளியான் போன்ற 7 கிராமங்களை சேர்ந்த கற்பக தரு சங்க உறுப்பினர்கள் ஒன்றிணைந்து மேற்கொள்கின்றனர். மீனவ சமூகமாக இருப்பினும் தென்னை பயிர்ச் செய்கை சபையின் மானியத் திட்டங்களை பெற்று இலங்கைக்கான தென்னைசார் அந்நியசெலாவணியை கூட்டுமாறும் கூறினார். இவற்றிற்கு மேலதிகமாக இப்பிரதேசத்தில் நீர் வழங்கல் முறை, வேலிகள் அமைத்தல் தொடர்பில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வெற்றியானது அனைவரினதும் ஒற்றுமையிலும் ஊக்கத்திலுமே தங்கியுள்ளது எனவும் தற்போது வழங்கப்பட்ட தென்னைகளில் 5 வருடங்களில் கூடிய வளர்ச்சியை காட்டும் தென்னைகளுக்குரிய கிராம சேவையாளர்கள் மற்றும் கற்பகதரு சங்க உறுப்பினர்கள் கௌரவிக்கப்படுவர் எனவும் தெரிவித்தார். (இ-7)

# இனியும் இணைந்து பயணிக்க முடியாது

(கொழும்பு)

"தற்போது இணைந்து செயற்பட்டுக்கொண்டிருக்கும் தரப்புடன் இனியும் இணைந்து செயற்பட முடியாது" எனத் தெரிவித்துள்ள, ஐக்கிய தேசியக் கட்சி தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர், வெசாக் போயா தினத்துக்குப் பின்னர் புதிய தேசிய வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்: ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ள தேசிய சபையை நாடளாவிய ரீதியில் விரிவுபடுத்தி, நாட்டை உண்மையாக நேசிக்கின்றவர்களை ஒன்றுதிரட்டி மக்களை அணிதிரள வைப்பதே இந்தத் தேசிய வேலைத்திட்டத்தின் பிரதான நோக்கமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் நல்லதொரு கலாசாரம் மற்றும் நிலைத்திருக்கும் அபிவிருத்தியை ஏற்படுத்துவதே எமது ஒரே நோக்கம் எனவும் அத்துரலிய ரத்ன தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# நேர்முகத் தேர்வு வெள்ளியுடன் நிறைவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்று வரும் வேலையற்ற பட்டதாரிகளுக்கான நேர்முகத் தேர்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையுடன் நிறைவடையவுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கான நேர்முகத் தேர்வுக்காக 3 ஆயிரத்து 425 பேர் பதிவு செய்திருந்தனர்.

முதலில் பதிவு செய்வதை தவறவிட்டவர்களாக 779 பேர் பதிவு செய்தனர். மொத்தமாக 4 ஆயிரத்து 204 பேர் பதிவு செய்துள்ளார்கள்.

இவர்களுக்கான நேர்முகத் தேர்வுகள் அமைச்சிலிருந்து வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைய யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் பட்டதாரிகளுக்கான இந் நேர்முகத் தேர்வுகள் யாவும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையுடன் நிறைவடையவுள்ளது, என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## இராசி பலன்

**மீனம்:** சச்சரவைவிட்டு சாதித்துக் காட்டுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, உடல் நலனில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அகலும்.

**மேடம்:** பிள்ளைகள் குடும்ப பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், புதிய தொழில் தொடங்க எடுத்த முயற்சி கைகூடும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**இடபம்:** வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும் நாள், விருந்தினர் வருகையுண்டு, எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**மிதுனம்:** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**கும்பம்:** மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| புத | சூரி | சுக் | |
| | **இராசி பலன்** கிரகநிலை | | ராகு |
| கேது | சந்திராஷ்டமம் உத்தராடம், திருவோணம் | | சந் |
| சனி, செவ் | | குரு | |

**25.04.2018**

சித்திரை 12,புதன்கிழமை

சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு

தசமி முற்பகல் 11.57 மணிவரை

மகம் பிற்பகல் 4.05 மணிவரை

சுபநேரம் 4.30-6.00மணிவரை

இராகுகாலம் 12.00-1.30 மணிவரை

சித்தாமிர்தம்

வளவன்

**கடகம்:** நன்மைகள் நடைபெறும் நாள், தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றங்கள் வந்து சேரலாம், உங்களின் கருத்துகளுக்கு மரியாதை கிடைக்கும்.

**மகரம்:** சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், பயணத்தின் போது பொருட்களில் கவனம் தேவை, கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**சிம்மம்:** அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், குடும்பச் சுமை கூடும், எடுத்த காரியத்தில் திருப்பங்கள் ஏற்படலாம்.

**தனுசு:** அரைகுறையாக இருந்த பணிகளை மீண்டும் தொடர்வீர்கள், குடும்பத்தினரிடையே நிலவி வந்த மனஸ்தாபங்கள் அகலும், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், பணத் தேவைகள் பூர்த்தியாகும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**துலாம்:** எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், அதிகாரிகள் அனுசரணமாக நடந்து கொள்வர், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கன்னி:** அலைச்சல்கள் ஏற்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

# மரண அறிவித்தல்



மலர்வு
23.04.1956

உதிர்வு
23.04.2018

# நடராசா இராமநாதன்

## (வட்டூர் தவில் வித்துவான், தவில் அரசு, இசைமணி)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா இராமநாதன் நேற்று முன்தினம் *(23.04.2018)* திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் நாகரத்தினம், அமரர் முத்துலட்சுமி, அமரர் முருகானந்தம், சுந்தராம்பாள், இராசேஸ்வரி, அமரர் சரஸ்வதி, லட்சுமி அம்மா, கணேசமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும் தர்சன், தர்சீலன், தர்சணன், தர்சராகவன், சிவசாகித்தியன், குகவர்த்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பஞ்சாயகி, சுமிதா ஆகியோரின் அன்பு மாமனும் பத்மப்பிரியன், பானுப்பிரியன், ராகவர்த்தனி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (25.04.2018) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அடைக்கலம் தோட்டம்**
**கந்தசாமி கோயிலடி,**
**வட்டு தெற்கு, மாவடி, வட்டுக்கோட்டை.**

**தகவல்:-**
**குடும்பத்தினர்**
**தொ.பே: 077 491 4179, 077 935 3185, 077 757 9326**

(3735)

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

**VACANCY**

Applications are invited by me up to 25.05.2018 from suitably qualified persons for the following post.

**BURSAR**

**Qualifications:**

1. (a). Should possess the Membership of the Institute of Chartered Accountants of Sri Lanka(CASL) or its equivalent.

**AND**

(b). Should possess at least six (06) years of experience in accounting and/or auditing in an executive capacity after acquiring the qualifications at 1(a) above.

**OR**

2. A holder of the post of Deputy Accountant/Deputy Bursar/ Deputy Internal Auditor in the University Grants Commission or Higher Educational Institution/Institute with the following;

•Confirmed in that post with three(03) years of satisfactory service in that post of which one (01) year should be after acquiring the qualification at 1(a) above.

**OR**

3.A holder of the post of Senior Assistant Accountant/Senior Assistant Bursar/Senior Assistant Internal Auditor in the University Grants Commission or Higher Educational Institution/Institute with all of the following;

•Confirmed in that post with ten (10) years of experience in accounting and/or auditing in an executive capacity;

•At least eight (08) years of satisfactory service of above ten (10) years should be in the post of Senior Assistant Accountant/Senior Assistant Bursar/Senior Assistant Internal Auditor in the University System;

•Three (03) years of above eight (08) years of experience should be after acquiring the qualification at 1(a) above.

**OR**

4.A holder of the post of Deputy Accountant/Deputy Bursar/Deputy Internal Auditor in the University Grants Commission/Higher Educational Institution/Institute with all of the following;

•Confirmed in that post;

•Possesses the intermediate qualification of the Institute of Chartered Accountants of Sri Lanka (CASL) or its equivalent;

•Possess a Masters' Degree in Accountancy/Finance/ Management * from a recognized University/HEI;

•Twelve (12) years of experience in accounting and/or auditing in an executive capacity after successful completion of the Intermediate qualification of the CASL or its equivalent;

•Ten(10) years of above experience should be in the post of Senior Assistant Accountant/Senior Assistant Bursar/Senior Assistant Internal Auditor or above in the University system.

**OR**

5.A holder of the post of Deputy Accountant/Deputy Bursar/Deputy Internal Auditor in the University Grants Commission/Higher Educational Institution/Institute with all of the following;

•Confirmed in that post with three (03) years of satisfactory service in that post;

•Possess a Bachelor's Degree from a recognized University/HEI;

•Possess Intermediate qualification of the institute of Chartered Accountants of Sri Lanka (CASL) or its equivalent

**Or**

Higher National Diploma in Accountancy (HNDA) conducted by the Sri Lanka Institute of Advanced Technological Education (SLIATE) or its predecessor;

•Fourteen (14) years of experience in accounting and/or auditing in an executive capacity after obtaining the above Intermediate Qualification/HNDA stated above;

•At least five (05) years of such experience should be in the post of Deputy Accountant/Deputy Bursar/Deputy Internal Auditor and/or Senior Assistant Accountant/Senior Assistant Bursar/Senior Assistant Internal Auditor in the University system carrying the salary scale denoted by salary code U-EX2 (I)

**OR**

6.A holder of the post of Deputy Accountant/ Deputy Bursar/ Deputy Internal Auditor in the University Grants Commission/ Higher Educational Institution/Institute with all of the following;

•Confirmed in the post;

•Possess a Bachelor's Degree from a recognized University/HEI;

**or**

the Intermediate qualification of the Institute of Chartered Accountants of Sri Lanka (CASL) or its equivalent

**or**

Higher National Diploma in Accountancy (HNDA) conducted by the Sri Lanka Institute of Advanced Technological Education (SLIATE) or its predecessor;

•Not less than eighteen (18) years of experience in accounting and/ or auditing in the University system;

•Three (03) years above experience should be in the post of Deputy Accountant/Deputy Bursar/Deputy Internal Auditor in the University system

**OR**

7. A holder of the post of Accountant Grade II of the Sri Lanka Accountants' Service with the following;

• Should possess the Membership of the Institute of Charted Accountants of Sri Lanka (CASL) or its equivalent;

**OR**

• Master's Degree in Accountancy/Finance/Management* from a recognized University/HEI.

**NOTE: 'Accounting and/or Auditing'** experience means, experience gained in an executive capacity in Accounting and/or Auditing in a State or Reputed Private Sector Organi zation.

*Term '**Management**' means a Degree in Management/ Public Administration/Business Administration with major component in Accounting & Finance.

**Salary Scale**: U-EX 3(II) Rs.91,830-7x2,020;11x2,520-133,690/- p.m. as at 01.01.2020.
Rs.74,236-7x1,632;11x2,036-108,056/- p.m. as at 01.01.2018

**Selection** :By Structured Interview

**Sabbatical Leave entitlement**: The holder of the above post will be eligible for Sabbatical Leave as per the regulation of the University Grants Commission.

**STATUTORY BENEFITS**

1.Allowances approved by the University Grants Commission Additional monthly allowance – 20% of the basic salaryCost of living allowance of Rs. 7,800.00 p.m. 35% Research Allowance based on research activity. (If applicable) Limited monthly fuel allowance.(If applicable)

2 .Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System

3.Gratuity payment

4.Employment Trust Fund benefits

5.Free medical care

Applications should be on **specified forms** issued by the University. Application forms and particulars for the above post should be obtained from the Office of the Senior Assistant Registrar / Establishments [Non –Academic] of this University on a payment of Rs.100/- for each application form at the Shroff's counter of this University. Those who wish to obtain the forms and details by post are requested to send a Money Order / Postal Order to the value of Rs. 100/- drawn in favour of the Bursar, University of Jaffna together with self addressed Rs.10/- Stamped envelope of 23x10 c.m in size. Only Applications sent on the **specified** form will be accepted. (**Please annexed copies of relevant documents**).

The envelope containing the dully filled application form must bear "**the name of the post applied for**" on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the Office of the Registrar **on or before 25.05.2018.**

Application forms and other details will also be available in the Universit y website **www.jfn.ac.lk.**

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through the Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected.

**REGISTRAR,**
**University of Jaffna,**
**24.04.2018.**

(C-2392)

## புற்றுநோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த குடும்பஸ்தரின் இறுதிக் கிரியைக்கு உதவிய வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர்

(யாழ்ப்பாணம்)

புற்றுநோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த குடும்பஸ்தரின் உடலை உறவினர்கள் பொறுப்பேற்காத நிலையில் வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் பொறுப்பேற்று தகனம் செய்துள்ளார்.

சங்கானை வைத்திய சாலையில் எஸ்.மகேந்திரன் (இன்சக்கன்) (வயது-63) என்ற குடும்பஸ்தர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு கடந்த 21 ஆம் திகதி உயிரிழந்தார்.

உறவினர்கள் இவரது உடலைப் பொறுப்பெடுக்காத நிலையில் அவரது உடல் வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தது. குறித்த தகவலை அறிந்த வலி.மேற்கு பிரதேச சபையின் உறுப்பினரும் சங்கானை பட்டின அபிவிருத்தி சபையின் தலைவருமான கு.குணசிறி குறித்த குடும்பஸ்தரின் உடலை பொறுப்பேற்று தகனம் செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார். (இ-9)

## "வரம் தரும் வைரவர்" சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேச செயலக பிரிவில் திடற்புலம் ஸ்ரீநர சிங்க வைரவர் தேவஸ்தான அலங்கார உற்சவத்தை முன்னிட்டு இந்து கலாசார உத்தியோகத்தர் க.நிஜலிங்கத்தின் ஒழுங்குபடுத்தலில் சமயச் சொற்பொழிவு 15 தினங்கள் இடம்பெற்று வருகின்றது.

இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர் எஸ்.ரி.குமரன் "வரம் தரும் வைரவர்" என்னும் விடயத்தில் சொற்பொழிவாற்றுவார். (இ-7)

## மாக்சிச லெனினிசக் கட்சியின் மேதினப் பேரணியும் கூட்டமும்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் மே முதலாம் திகதி யாழ்ப்பாணத்தில் புத்தூரில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் மேதினப் பேரணியும் பொதுக் கூட்டமும் இடம்பெறவுள்ளது.

குறித்த தினத்தில் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருகைதரவுள்ள வாகனப் பேரணிகள் பி.ப. 3.30 மணியளவில் பருத்தித்துறை வீதி, ஆவரங்கால் சந்தியில் ஒன்றிணைந்து ஊர்வலமாக பருத்தித்துறை வீதி வழியாகப் புத்தூர்-சுன்னாகம் சந்தியை அடைந்து அங்கிருந்து புத்தூர் மேற்கு கலைமதி மைதானத்தைச் சென்றடையவுள்ளது. அங்கு மாலை 6 மணியளவில் மேதினப் பொதுக்கூட்டம் இடம்பெறும்.

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் வட பிராந்தியச் செயலாளரும், வலி.கிழக்குப் பிரதேச சபை உறுப்பினருமான தோழர் கா. செல்வம் கதிர்காமநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இப் பொதுக்கூட்டத்தில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி.கா. செந்திவேல், வன்னி மாவட்டங்களின் செயலாளர் தோழர் என். பிரதீபன், அரசியல் குழு உறுப்பினர்கள் தோழர் க. தணிகாசலம், தோழர் சோ. தேவராஜா, தோழர் ச.தவராஜா, புதிய ஜனநாயக இளைஞர் முன்னணியைச் சேர்ந்த தோழர் த.ஸ்ரீபிரகாஸ், யாழ். பல்கலைக்கழக மாணவன் தோழர் வ.றொபின்சன், பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பைச் சேர்ந்த தோழர் க.வாகினி, தோழர் லதா உதயதீபன், வலி.கிழக்குப் பிரதேச சபை உறுப்பினர் தோழர் சசிநந்தினி தேவன், விவசாயிகள் அமைப்பைச் சேர்ந்த தோழர் பொ.முருகேசு, தொழிற்சங்கப் பிரதிநிதி தோழர் கா.பஞ்சலிங்கம், செம்முகம் ஆற்றுகைக் குழுவின் தலைவர் தோழர் ம. சத்தியசீலன், சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் தலைவர் தோழர் க.ஆனந்தக் குமாரசாமி, வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகளும் உரையாற்றவுள்ளனர்.

மேலும் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் மேதினப் பேரணிகளும் பொதுக் கூட்டமும் வன்னி, வவுனியா நகரத்திலும், மலையகத்தில் இராகலையிலும் இடம்பெறவுள்ளது. இப் பேரணி மற்றும் பொதுக்கூட்டங்களில் அனைவரையும் அணிதிரளுமாறு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி அறைகூவல் விடுத்துள்ளது. (இ-7)




## வடக்கு மாகாண அதிகாரிகள் உரிய கடமையைச் செய்வார்களா?

வடமாகாண ஆளுநரால் அனுமதிக்கப்பட்ட செயற்பாடுகளை வடக்கு மாகாண அதிகாரிகள் அமுல்படுத்துவதில் உதாசீனப் போக்கை கடைப்பிடிக்கிறார்கள்.

மாகாண நிர்வாகத்துக்குப் பொறுப்பாகவுள்ள ஆளுநர் சில அதிகாரங்களை அதிகாரிகளுக்கு கையளித்துள்ளார். அதிகாரிகள் அவ் அதிகாரங்களைப் பயன்படுத்தி மக்களுக்கு சேவைகளைச் செய்ய வேண்டும்.

வடக்கு மாகாண சபையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களில் அதிகமானோர் மன மகிழ்வுடன் கடமையாற்ற முடியாதவர்களாகக் காணப்படுகிறார்கள். காரணம் அவர்களின் பதவி உயர்வு, சம்பள உயர்வு, பொருத்தமான இடமாற்றங்கள், ஒழுக்காற்று செயற்பாடுகள் என்பன உரிய காலத்தில் செயற்படுத்தப்படாமல் காலம் தாழ்த்தப்பட்டு வருகிறது. கோரிக்கைகள் முன் வ்வைத்தால் உரிய நடவடிக்கைகள் எடுப்பதில்லை. அவர்களுக்கு பதிலும் அனுப்புவதில்லை.

உதாரணமாக ஒரு பெண் அதிகாரி ஒருவருக்கு கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக வருடாந்த சம்பள உயர்வு வழங்கப்படாத நிலையில் இவ்வருடம் ஓய்வுபெறவுள்ளார். இவர் சிரேஷ்ட சேவையுடையவர். அவருக்கு உயர் பதவி வழங்க வேண்டும். ஆனால் இவருக்கு அடுத்தபடியாக கீழ்நிலையில் இருந்தவருக்கு உயர் பதவி வழங்கி அவருக்கு கீழ் பணியாற்றும் துர்ப்பாக்கிய நிலையில் அவ் அதிகாரி மன வேதனையுடன் ஓய்வுபெறவுள்ளார்.

அதற்குக் காரணமாக இருந்தவருக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க முடியுமா? இதே போன்ற நிலையில் பெரும்பாலானவர்கள் மிகவும் துன்பியல்நிலையில் வடக்கு மாகாண சபையில் கடமையாற்றும் நிலையில் இருக்கின்றார்கள்.

இதேவேளை வடக்கு மாகாண சபையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தாங்கள் எதிர்நோக்கும் பாதிப்புக்களை வடமாகாண ஆளுநருக்கு மேன்முறையீடு செய்யும் செயற்பாடுகள் அதிகரித்ததற்கான காரணம் ஆளுநர் தமிழ் பேசுபவராக உள்ளதாலும் அனைத்து தனிப்பட்ட செயலாளர்கள் மற்றும் இணைப்புச் செயலாளர்கள் ஆகியோரும் நன்றாக தமிழ் மொழி பேசுபவராக இருப்பதாலும் உத்தியோகத்தர்கள் ஆளுநரின் அலுவலகத்தை நோக்கிச் செல்லும் செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

ஆளுநரின் அதிகாரத்தை கேள்விக்குட்படுத்த முடியாது. ஆனால் வட மாகாண அதிகாரிகள் அதனை கேள்விக்குட்படுத்த கடும் பிரயத்தனப்படுகிறார்கள். காரணம் தங்களால் நிராகரிக்கப்பட்டதை ஆளுநர் அனுமதிப்பது தங்களை அவமதிப்பதாக கருதி அதனை நடைமுறைப்படுத்த பல காரணங்களை முன்வைக்கிறார்கள்.

யாழ்.மாநகர சபையில் நூலகராக கடமையாற்றும் பெண் உரிய தகைமைகளைப் பெற்ற நிலையில் அவருக்கு 2008 ஆம் ஆண்டு பதவி உயர்வு வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

அவ் உத்தியோகத்தர் திணைக்களத் தலைவருக்கு விண்ணப்பித்து அத் தலைவர் மேற்குறித்தவர் தகுதியுடையவர். அவருக்கு பதவி உயர்வு வழங்கலாம் என்பதை சிபாரிசு செய்து அனுமதி வழங்கும் அதிகாரிக்கு அனுப்பி வைத்துள்ளார். ஆனால் உரிய அதிகாரி அதனை வழங்காது இன்றுவரை காலம் தாழ்த்தி வந்துள்ளார். இதனால் அவ் உத்தியோகத்தர் மேன்முறையீட்டை உரிய அதிகாரிகளூடாக ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

ஆளுநர் இதேபோன்ற பல மேன்முறையீடுகள் உள்ளதால் ஓய்வுபெற்ற மூன்றுபேர் கொண்ட உயர் அதகாரிகளைக் கொண்ட குழுவை நியமித்து அவர்களின் மூலம் குறைபாட்டுக்குரிய தீர்வுக்கு அனுமதி அளித்துள்ளதோடு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவின் மூலமும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் அனுமதி வழங்கியிருந்த போதும் இன்றுவரை அதனை நடைமுறைப்படுத்த உரிய அதிகாரிகள் முன்வராது ஆளுநரின் பொதுச் சேவை ஆணைக் குழுவின் அதிகாரத்தை கேள்விக்குட்படுத்தியுள்ளனர்.

இச்செயற்பாட்டினால் பாதிப்புக்குள்ளாகிய உத்தியோகத்தர்கள் செய்வதறியாது மனவேதனையுடன் காணப்படுகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் காரணமாக கடந்த காலங்களில் பாதிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் உயர் நீதிமன்றத்தின் மூலம் உரிய நீதியைப் பெற்றுள்ளனர்.

இந்நிலையில் தற்போது வடமாகாண சபையில் பாதிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் ஜனாதிபதியின் கவனத்துக்கு மேற்படி விடயங்களை தெரியப்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள்

## உயர் தரத்தில் தமிழ் கற்கும் மாணவர்களுக்காக யாழ்.தமிழ்ச்சங்கம் நடத்தும் திருக்குறள் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம், யாழ்.சிவகணேசன் புடைவையகத்துடன் இணைந்து நடத்தும் திருக்குறள் விநாடி வினாப் போட்டியில் பங்கேற்க விரும்பும் உயர்தரத்தில் தமிழ் கற்கும் மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2018 ஆம் ஆண்டில் அல்லது 2019 ஆம் ஆண்டில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் பாடசாலை ரீதியாகப் போட்டிக்கு விண்ணப்பிக்க முடியும். புதிய மற்றும் பழைய பாடத்திட்டத்திற்கு அமைவாக உயர்தர தமிழ்ப் பாடவிதானத்திற்கு உட்பட்ட வகையில் போட்டி அமையும்.

போட்டியில் பங்கேற்பதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் மே 11 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும். போட்டி எதிர்வரும் மே 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை யாழ்.பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ளது என தமிழ்ச் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போட்டியில் வெற்றியீட்டுவோருக்கு பெறுமதியான பரிசில்கள் மே மாத இறுதியில் நடத்தப்படவுள்ள திருவள்ளுவர் விழாவின்போது வழங்கப்படும் எனவும் மேலதிக விபரங்களை www.thamilsangam.org என்ற தமிழ்ச் சங்கத்தின் இணையத்தளத்தில் பார்வையிடலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## சிறந்த நூற் பரிசுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முகமாக வருடா வருடம் நடத்தப்படுகின்ற சிறந்த நூற் பரிசுப் போட்டி இவ்வருடமும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

போட்டிக்கான விண்ணப்பப் படிவத்தினை பிரதேச கலாசார உத்தியோகத்தரிடமிருந்து பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை போட்டிக்கான நூலுடன் இணைந்து தங்கள் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் 04.05.2018 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

நூல்கள் யாவும் 2017 ஜனவரி 01 ஆம் திகதிக்கும் 2017 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கும் இடையில் அச்சில் வெளிவந்தவையாகவும் முதல் பதிப்பாகவும் இருத்தல் வேண்டும் என வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)

## ஊடகவியலாளர் ரூபனின் நினைவேந்தல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஊடகவியலாளர் அமரர் அராலியூர் செ.ரூபனின் எட்டாவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பொன்னாலை வெண்கரம் படிப்பகத்தில் இடம்பெறும்.

கடந்த 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி இவர் சுகயீனம் காரணமாக உயிரிழந்தார்.

இவரது நினைவு தினத்தை முன்னிட்டு வெண்கரம் படிப்பகத்தின் ஏற்பாட்டில் மாணவர்கள் மற்றும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. அதில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் மேற்படி நினைவேந்தல் நிகழ்வில் வழங்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (இ-9)



ஐரோப்பிய ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இலங்கையில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான ஊக்க உதவி எனும் செயற்றிட்டத்தின் கீழ் யுனிசெப் அமைப்பினால் சொண்ட் அமைப்பினூடாக செயற்படுத்தப்படும் மிதிவெடி அபாயக் கல்வி எனும் செயற்றிட்டத்தின் கீழ் மிதிவெடி அபாயம், வீதி பாதுகாப்பு, சிறுவர் பாதுகாப்பு, சுகாதாரமும் போசாக்கும் எனும் கருப்பொருட்களை உள்ளடக்கி 40 நிமிடம் கொண்ட விழிப்புணர்வு தெருநாடகம் ஒன்றை SOND நிறுவனம் வலி.வடக்கு மீள்குடியேற்றப் பிரதேசத்தில் நடத்துவதை படத்தில் காணலாம்.

## கட்டடத் திறப்பும் கண்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

47/2 ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கில் அமைந்துள்ள வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவும் கண்காட்சியும் விற்பனையும் எதிர்வரும் 06.05.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. -(இ)

# அகவை அறுபதில் மனதார வாழ்த்துகின்றோம்

## திரு. கணேசன் சைவ இறைமணி

(ஆசிரியர் B.A., Dip in Edu.)



**அமைதியின் திருவுருவே வாழி**
**ஆரவாரமில்லா ஆளுமை கொண்டே—எம்மை**
**வழி நடத்தும் ஆசானே வாழி—தங்கள்**
**தொழில்நுட்பத் திறனும் கலையார்வமும்**
**கனிவான பேச்சும் கவர்ந்திழுக்கும் சிரிப்பும்**
**காலம் எல்லாம் நிலை பெற வாழி வாழி...**

நேற்றுடன் ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்று இன்று அகவை அறுபது காணும் எமது சித்தப்பாவை நிறைவான ஆரோக்கியத்துடன் நீடூழி வாழ அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

"அமிர்தவாசம்", "அமிர்தபதி",
கரணவாய் வடமேற்கு,
வல்வெட்டித்துறை.

பாசமுள்ள பெறாமக்கள்:
நிமலன், கமல்,
சுகிர்தா, ஜனகன், ரமணன், றொபின்சன்,
ஹெலன், திவ்வியா, சொலமன்.


# பொதுத் தேர்தல் போராட்டத்திற்கு தயார்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேசிய அரசாங்கத்தை வலுப்படுத்திக்கொண்டு ஆட்சியைத் தொடரத் தீர்மானித்துள்ள நிலையில் அரசாங்கத்திற்கு நெருக்கடியினைக் கொடுத்து பொதுத்தேர்தல் ஒன்றுக்கான வியூகத்தை கூட்டு எதிர்க் கட்சி வகுக்கவுள்ளது.

இதனை மையப்படுத்திய விசேட கலந்துரையாடல் இன்று மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெறவுள்ளதாக பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார். (இ-7)


# தந்தை செல்வாவின் 41ஆவது நினைவு நாள்

**26.04.2018**

## அஞ்சலியும் நினைவுரையும்



**காலம்: 26.04.2018 வியாழக்கிழமை**
**மு.ப.9.30 மணி.**
**இடம் : தந்தை செல்வா நினைவிடம்**
**தந்தை செல்வா சதுக்கம்,**
**யாழ்ப்பாணம்.**

**தலைவர்:**
பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் அவர்கள்
தலைவர், தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழு)

### நிகழ்ச்சிகள்

**தந்தை செல்வா சிலைக்கு மலர்மாலைகள் அணிவித்தல்.**
**சமாதியில் மலர் அஞ்சலி செலுத்தல்.**

**அஞ்சலியுரைகள்:** மௌலவி.எ.எம்.எ.அஸீஸ் (ஜே.பி) (காசி.மி)
அருட்தந்தை பேராசிரியர் எஸ்.ஜே.இம்மானுவல் அடிகள்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

**நினைவுப் பேருரை:** கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன
(தலைவர் நவசமசமாஜ கட்சி, தலைப்பு- தமிழ் தேசியத்தின் தந்தை)
Father of the Tamil Nation

தமிழ் தேசியத்தின் தந்தை அவர்களை நினைவுகூரும் இந்த அஞ்சலி நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

—தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழு—

(9090)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூசம்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: O/L/ கட்டார்
தொ.இ: B/7609

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: மூலம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L/சாரதி
தொ.இ: B/7611

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 54 சூரி, செவ் 2இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L/அரச தொழில்
தொ.இ: B/7614

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 26
தகைமை/தொழில்:B.Sc/அரசதொழில்
தொ.இ: B/7616

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 17
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: B.Sc,M.Sc/ பொறியியலாளர்
தொ.இ: G/7666

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 17
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:பல் வைத்தியர்
தொ.இ: G/7667

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: ரோகினி 3ம் பாதம்
கி.பா: 16
உயரம்: 4'11"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/7671

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: விசாகம்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/7672

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# யாழ்.பல்கலை வவுனியா வளாகத்தில் ஒதுக்கப்பட்ட இடத்தில் மதஸ்தலங்கள் அமைக்கலாம்



## சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மாணவர்களிடம் தெரிவிப்பு

(குருமன்காடு)

**யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தில் ஒதுக்கப்பட்ட இடத்திலேயே மதஸ்தலங்களை அமைக்க முடியும் என வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மாணவர்களிடம் தெரிவித்தார்.**

வவுனியா வளாகத்தில் புத்த சிலையை வைப்பதற்கு சிங்கள மாணவர்கள் நேற்று முன்தினம் முயற்சிகளை மேற்கொண்டபோது வளாக நிர்வாகத்தினால் அம் முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டு மாணவர்களால் கொண்டு வரப்பட்ட ஆயை வடிவமொன்றும் கைகப்படுத்தப்பட்டிருந்தது.

இதனையடுத்து வீதியில் வைத்து வளாகத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் பீடாதிபதிகள் விரிவுரையாளர்களுடன் சிங்கள மாணவர்கள் முரண்பாட்டில் ஈடுபட்டிருந்தனர்.

இதன் காரணமாக வவுனியா வளாகம் கால வரையறையின்றி மூடப்பட்டுள்ளதாக வளாகத்தின் முதல்வர் கலாநிதி ரி.மங் களேஸ்வரன் உத்தரவிட்டிருந்ததுடன் விடுதியில் உள்ள மாணவர்கள் அனைவரையும் விடுதியை விட்டு வெளியேறுமாறும் பணித்திருந்தார்.

இந் நிலையில் பூங்கா வீதியில் அமைந்துள்ள வளாகத்தின் நிர்வாக கட்டடத் தொகுதியை சூழ்ந்து கொண்ட சிங்கள மாணவர்கள் உத்தியோகத்தர்களை வெளியேற விடாமல் தடுத்திருந்தனர்.

இதனால் வளாக முதல்வர் பொலிஸாருக்கு அறிவித்து உத்தியோகத்தர்களை பாதுகாப்பாக வெளியேற ஏற்பாடு செய்திருந்தார்.

இதன் தொடர்ச்சியாக நேற்றுக் காலையில் இருந்து நிர்வாக கட்டடத்தொகுதி அமைந்துள்ள பகுதியை சூழ்ந்துகொண்ட சிங்கள மாணவர்கள் தாம் கொண்டு வந்த ஆயை வடிவிலான கூட்டினை தருமாறு கோரி வீதியோரத்தில் அமர்ந்திருந்தனர்.

இதன்போது வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அடங்கிய பொலிஸ் குழுவுக்கும் வளாகத்தின் முதல்வருக்குமிடையில் சுமார் ஒரு மணி நேரமாக சந்திப்பு இடம்பெற்றதன் பின்னர் மாணவர்களைச் சந்தித்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வளாகத்தில் மதஸ்தலங்கள் அமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட இடத்திலேயே வணக்கஸ்தலங்கள் அமைக்க முடியும்.

அதற்கு பல்கலைக்கழக மேலிடத்தில் இருந்து அனுமதி கிடைக்க வேண்டும். அவ்வாறு கிடைக்கப் பெற்றால் அரை ஏக்கர் வீதம் நான்கு மதங்களுக்குமாக ஒதுக்கப்பட்ட இடத்தில் வணக்கஸ்தலங்கள் அமைக்கப்படும். அதுவரை எவ்வித முரண்பாடான நிலைமைக்கும் செல்லக் கூடாது என கூறப்பட்டதுடன் சிங்கள மாணவர்களால் கொண்டு வரப்பட்ட புத்தரை வைப்பதற்கான கூட்டினை பொலிஸார் வளாக நிர்வாகத்திடமிருந்து தமது பொறுப்பில் பெற்றுக் கொண்டுள்ளனர்.

இந் நிலையில் மாணவர்கள் தாம் நீண்ட நாட்களுக்குப் பின்னரே வளாகத்திற்கு வந்துள்ளதால் தாம் மீண்டும் வீடுகளுக்குச் செல்ல முடியாமையினால் விடுதியில் தங்குவதற்கு ஏற்பாட்டினை செய்து தரவேண்டும் என பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பாக வளாக முதல்வருடன் கலந்துரையாடி அவர்களின் கருத்தின் படி செயற்படுமாறு பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

எனினும் மாணவர்கள் மதியம் வரை வளாகத்தின் நிர்வாக கட்டடத்தொகுதியில் இருந்து செல்லாமல் வீதியோரத்தில் நின்றதை அவதானிக்க முடிந்தது. (2-250)






## பொலித்தீன் பாவனை தொடர்பில்
# வியாபார நிலையங்கள், உணவகங்கள் மீது திடீர் பரிசோதனை நடவடிக்கைகள்

(பனிக்கன்குளம்)

வவுனியா வர்த்தக நிலையங்களில் நேற்றுக் காலை உணவகங்கள் மற்றும் வியாபார வர்த்தக நிலையங்களில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் விற்பனை செய்யப்படும் பொலித்தீன் தொடர்பாகவும் அதன் தன்மைகள் குறித்தும் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் பொலித்தீன் பாவனை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதுடன் அதற்கு மாற்றீடாக இலகுவில் உக்கக்கூடியதும் சுகாதாரத்திற்கு தீங்கற்ற பொலித்தீன் பாவனையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன.

இந்நிலையில் உணவகங்கள், வர்த்தக நிலையங்களில் தற்போது விற்பனை செய்யப்பட்டு வரும் பொலித்தீனின் தன்மைகள் தொடர்பாக திடீர் பரிசோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்த வகையில் வவுனியா கந்தசுவாமி ஆயை வீதிகளிலுள்ள உணவகங்கள் மற்றும் வியாபார விற்பனை நிலையங்களில் இச் சோதனை நடவடிக்கை நேற்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அலுவலகர்கள், பொலிஸார் இந்நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

உணவகங்கள், வியாபார நிலையங்களுக்கு விற்பனை செய்யப்படும் பொலித்தீன் அதன் அளவு, தன்மை உணவகங்களில் மேற்கொள்ளவேண்டிய பொலித்தீன் சுகாதாரத்திற்கு தீங்கற்ற விதத்தில் அமையப்பெறுதல் போன்ற அறிவுறுத்தல்கள் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அதிகாரிகளால் வழங்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (2-281)

# இரணை மாதா நகர் மக்களை சந்தித்து வடக்கு மாகாண கல்வி அமைச்சர் ஆதரவு
## இரணைதீவு பாடசாலையையும் பார்வையிட்டார்

(கிளிநொச்சி)

இரணைதீவு மக்கள் போராட்டத்திற்கு மாகாணசபையின் ஆதரவைத் தெரிவித்து கல்வி அமைச்சர் கலாநிதி சர்வேஸ்வரன் கலந்து கொண்டுள்ளார்.

தாம் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்து வந்த வீடுகள் மற்றும் மீன்பிடித்தொழில், விவசாயம், கால்நடைகள் என பல்வகை வாழ்வாதாரங்களுடன் இரணை தீவில் வாழ்ந்து வந்த சுமார் 500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அங்கிருந்து விரட்டப்பட்டு முழங்காவில் பிரதேசத்தில் குடியேறி அவ்விடத்திற்கு இரணைமாதா நகர் எனப் பெயரிட்டு வாழ்ந்து வருகின்றார்கள்.

இரணைதீவு றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலையையும் இரணைமாதா நகரில் உருவாக்கி அவர்களது பிள்ளைகள் கல்வி கற்று வருகின்றார்கள். யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து கடற்படையின் ஆக்கிரமிப்பிலிருக்கும் இரணை தீவில் தமது நிலங்களில் மீள்குடியேற வேண்டும் எனக் கூறி தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அந்த வகையில் நேற்று முன்தினம் கடற்படையின் தடையை மீறி நூற்றுக்கணக்கான மக்கள் தமது மண்ணில் கால்பதிக்கும் போராட்டத்தை நடத்துகின்றனர்.

50 வரையான படகுகளில் 400 இற்கு மேற்பட்ட மக்கள் இரணை தீவுக்கு செல்லும் போராட்டத்திற்கு வடக்கு மாகாணசபையின் ஆதரவை தெரிவிக்கும் வகையில் வடக்கு மாகாண கல்வி அமைச்சரும் பதில் முதலமைச்சருமாகிய கலாநிதி க.சர்வேஸ்வரன் இரணை மாதாநகர் படகுத்துறைக்குச் சென்று கலந்து கொண்டார். சங்கத் தலைவர், செயலாளர் உட்பட படகுத் துறையில் போராட்டத்திலீடுபட்டிருந்த இரணை மாதா நகர் மக்களையும் சந்தித்து தமது ஆதரவையும் அவர் வழங்கியிருந்தார்.

அதனைத் தொடர்ந்து இடம்பெயர்ந்த இரணைதீவு றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அதிகாரிகளுடன் விஜயம் செய்த கல்வி அமைச்சர் பாடசாலையை பார்வையிட்டதுடன் அதன் சேவைகளைக் கேட்டறிந்து அவற்றைச் செயற்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து வலயப் பணிப்பாளர், கோட்டப்பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்கினார். (2-9)

# வதிவிட இளைஞர் முகாம் வேலைத்திட்டம் துணுக்காயில்

(பனிக்கன்குளம்)

தேசிய கொள்கை மற்றும் பொருளாதார நடவடிக்கை அமைச்சு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், இலங்கை இளைஞர் கழக சம்மேளனம் என்பன இணைந்து நாடளாவிய ரீதியில் வதிவிட இளைஞர் முகாம் வேலைத் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள அறுபது இளைஞர், யுவதிகளை தெரிவுசெய்து எதிர்வரும் 28 ஆம் திகதி பிற்பகல் 2 மணி தொடக்கம் 30 ஆம் திகதி வரை மூல்லாவி மத்திய கல்லூரியில் மேற்படி வேலைத் திட்டம் நடைபெறும் என துணுக்காய் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி தெரிவித்துள்ளார். அதனுடன் இணைந்து எதிர்வரும் 30 ஆம் திகதி 2018 ஆம் ஆண்டுக்கான இளைஞர்கழக பிரதேச சம்மேளன புதிய நிர்வாகத் தெரிவுக் கூட்டமும் நடைபெறும் எனவும் தெரிவித்துள்ளார். (2-281)

# உறவுகளைத் தேடும் போராட்டம் தொடர்கின்றது

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்திடம் ஒப்படைக்கப் பட்ட நிலையிலும் மற்றும் ஏனைய வழிகளாலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஒன்றிணைந்து தமக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் தீர்வு கிடைக்கும் வரையிலான கவனயீர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்து நேற்று செவ்வாய்க்கிழமையுடன் 412 ஆவது நாளை எட்டியுள்ள போதும் இது வரை எந்தவிதமான தீர்வும் தமக்கு கிடைக்காத இருப்பதால் தொடர்ந்தும் தமது கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருவதாக தெரிவித் துள்ளனர்.

கடந்த 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலகத் திற்கு முன்பாக முல்லைத்தீவு - பரந்தன் வீதியில் தற்காலிக கொட்டகை அமைத்து அதில் தங்கி யிருந்து தமது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். (2-15)

# 167 குற்றச் செயல்களில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் கைதாகினர்
## முல்லைத்தீவு மாவட்ட மதுவரி நிலையப் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் மதுவரித் திணைக்களத்தின் முல்லைத்தீவு மாவட்ட மதுவரி நிலையத்தின் அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் பரிசோதனை நடவடிக்கைகளின் போது சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மற்றும் உரிமம் பெறாத புகையிலை உற்பத்திப் பொருட்களை பயன்படுத்தி செய்யப்பட்ட புகைத்தல் பொருட்களை உற்பத்தி மற்றும் விற்பனை செய்த வகையில் 167 குற்றச் செயல்களில் ஈடுபட்ட சந்தேக நபர்களை தடயப் பொருட்களுடன் கைது செய்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தியுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட மதுவரி நிலையத்தின் பொறுப் பதிகாரி ரீ.ஏ.டீ.பி. குணரத்னா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோதமான முறையில் நடைபெறும் மது மற்றும் புகை பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனை தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட மதுவரி நிலையத்தின் அதிகாரிகளினால் கிராமங்கள் தோறும் பொது மக்களுக்கும் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கும் இவற்றினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றனர்.

இதன் பயனாக முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேசங்களிலும் பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் ஆகியோர் சட்டவிரோதமான மது பொருட்கள் தொடர்பில் 021 229 0023 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாகவும் மற்றும் நேரடியாகவும் இரகசியத் தகவல்களை வழங்கி வருகின்றனர்.

இதனையடுத்து, திடீர் சுற்றிவளைப்புக்களை முல்லைத்தீவு மாவட்ட மதுவரி நிலைய அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். இதற்கமைய, சட்டவிரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தைக் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

அத்துடன், கசிப்புடை விற்பனை நோக்குடன் தமது உடைமையில் மறைத்து வைத்திருந்த 65 குற்றச் செயல்களையும் உரிமம் பெறப்படாத புகையிலை உற்பத்தி பொருட்களான சிகரெட், பீடி, சுருட்டு ஆகிய பொருட்களை வைத்திருந்த 44 குற்றச் சம்பவங்களும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் உபகரணங்களை தமது உடைமையில் வைத்திருந்த குற்றச் செயல் ஒன்றும், அனுமதிப்பத்திரம் இன்றி புளித்த மதுபானங்களை (கள்ளு) தமது வீடுகளில் வைத்திருந்தமை மற்றும் அதனை விற்பனை செய்த 56 குற்றச் செயல்கள் உட்பட மொத்தம் 167 குற்றச் செயல்களில் ஈடுபட்ட சந்தேக நபர்களை கைது செய்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தியுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட மதுவரி நிலையத்தின் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (2-15)

# குடிநீர் தட்டுப்பாட்டை தெரியப்படுத்துமிடத்து போதுமான அளவு நீரை விநியோகிக்க முடியும்

## கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்படக் கூடிய குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தற்காலிகமாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சினூடாக தீர்வுகளை வழங்க கூடியதாக உள்ளதாக மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பூநகரி ஆகிய பகுதிகளில் தற்போது நிலவும் கடுமையான வரட்சி காரணமாக குறிப்பிட்ட சில பகுதிகளில் குடிநீர்த்தட்டுப்பாடு காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மாவட்ட அரச அதிபர், தற்போது குடிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்கு எந்த விதமான பிரச்சினைகளும் இல்லை. அனர்த்தமுகாமைத்துவ அமைச்சினூடாக எங்களிடம் உள்ள பௌசர்கள், உழவு இயந்திர பௌசர்கள் என்பவற்றை பயன்படுத்தி தற்காலிகமாக தீர்வுகளை வழங்கமுடியும்.

அவ்வாறு பிரச்சினைகள் காணப்படுமாக இருந்தால் பிரதேச செயலாளருடன் தொடர்புகொண்டு அந்தப்பிரதேசங்களில் உள்ள குடிநீர் தட்டுப்பாடுகள் தொடர்பில் தெரியப்படுத்துமிடத்து போதுமான அளவு தண்ணீரை பெற்றுக் கொள்ளக்கூடிய, விநியோகிக்கக்கூடிய வசதிகள் உள்ளன.

இது தற்காலிக ஏற்பாடுகள் தான். நிரந்தர ஏற்பாடுகள் வரும் வரை இதனைச் செய்ய முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# பொன்னகர் கிராமத்தில் குடியேறியவர்களுக்கு காணி ஆவணங்கள் மாற்றி வழங்குவதில் பிரச்சினை

(கண்டாவளை)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பொன்னகர் கிராமத்தில் இந்திய அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்ட வீடுகள் தற்போது சேதமடைந்து மக்கள் குடியிருக்க முடியாத நிலையில் காணப்படுகின்றது.

இதுதொடர்பில் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துடன் தொடர்புகொண்டு வினவிய போது, பொன்னகர் பகுதியில் வழங்கப்பட்ட வீடுகளை விட்டு மக்கள் வெளியேறி வருகின்றனர்.

குறித்த 50 வீடுகளும் தொடர்ச்சியாக மாற்றி வழங்கப்பட்டுள்ள போதும் அங்கு வந்து தங்கியிருப்பவர்கள் யாரும் அங்கு இருப்பதற்கு விரும்பாது வீடுகளை விட்டுச்செல்கின்றனர்.

வீட்டுத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது குடியேற்றியவர்களுக்கே காணி ஆவணங்களை வழங்கியுள்ளதால் அதனை மாற்றி வழங்குவதிலும் பிரச்சினைகள் காணப்படுகின்றன.

இதேவேளை பொன்னகர் பகுதியில் உள்ள மேற்படி வீட்டுத்திட்டத்தில் குடிநீர்ப் பிரச்சினை மற்றும் வீடுகள் தரமானதாக இல்லை போன்ற காரணங்களால் அங்கு மக்கள் வாழ்வதற்கு விரும்புவதில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-315)




# முல்லைத்தீவில் தூர்ந்து போயுள்ள குளங்கள் புனரமைக்கப்படின் மகாவலிநீர் தேவையில்லை

## வடக்கு மாகாண விவசாய அமைச்சர் தெரிவிப்பு





(பனிக்கன்குளம்)

விவசாயத்திட்டங்கள் என்பது தனித்து மாகாண அரசு என்று இல்லாமல் மத்திய அரசும் வடமாகாண அரசும் இணைந்து நடத்துவதன் மூலம் மக்களுக்கு பயனாக இருக்கும் என வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவனேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண விவசாய திணைக்களம் மற்றும் மத்திய விவசாய திணைக்களம் மற்றும் கமநல அபிவிருத்தி திணைக்களம் இணைந்து நடத்தும் "ஒன்றாய் எழுவோம் சிறுபோகத்தை வெல்வோம்" என்ற தலைப்பிலான விவசாய விசேட ஊக்குவிப்பு திட்டத்தின் தொடக்க நிகழ்வு ஒட்டுசுட்டான் விவசாய பயிற்சி நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போது வடமாகாண விவசாய அமைச்சர் க.சிவனேசன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

முத்துஐயன்கட்டு குளத்தில் நீர் இல்லை. இதனை நம்பி வாழ்கின்ற ஆயிரக்கணக்கான மக்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். பொதுவான காலநிலை மாற்றத்தால் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இதனைச் சீர்செய்ய மக்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் அமைச்சராக இருந்தபோது சொன்னார் வடக்கிற்கு மகாவலி நீரினை கொண்டு வருவேன் என்று. ஆனால் இன்று வரை நீர் வரவில்லை. இன்று ஒரு தமிழ்மகனின் நிலத்திலாவது மகாவலி நீரினை பயன்படுத்தி எந்த தொழிலும் செய்யவில்லை.

மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் பணிப்பாளர்களுக்கு நாங்கள் விநயமாக வேண்டுவது மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் மூலம் நீங்கள் நீரை வழங்குங்கள், பிரதேசத்தை வளப்படுத்துங்கள். ஆனால் பிரதேசத்திற்கு சம்பந்தம் இல்லாத மக்களை கொண்டு வந்து குடியேற்றுவதை நிறுத்த வேண்டும் இந்த குடியேற்றத்திற்கு நாங்கள் ஒப்புதல் அளிக்கமாட்டோம்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நீர்முகாமைத்துவத்தை சரியான முறையில் செயற்படுத்துவோமாக இருந்தால் மகாவலி நீர் தேவையில்லை. ஆயிரக்கணக்கான சிறிய குளங்கள் இன்னும் மாவட்டத்தில் புனருத்தாரணம் செய்யப்படவில்லை. அவை தூர்ந்து போய் இருக்கின்றன. பல குளங்கள் வனலாகாவினால் அறிவிக்கப்பட்ட பிரதேசங்களுக்குள் இருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் புகையிலை செய்கையினை நிறுத்துமாக இருந்தால் பலரின் வாழ்வாதார பிரச்சினை மிக மோசமாக இருக்கும். அதற்கு மாற்று பயிர் என்ன என்ற கேள்வி எழுந்துள்ளது. இந் நிலையில் விவசாய போதனாசிரியர்களின் பங்களிப்பு மற்றும் அவர்களின் யோசனைகளுக்கு அமைவாக சரியான ஒரு விவசாயி கொள்கையை எதிர்காலத்தில் உருவாக்க வேண்டிய கடப்பாடு எங்களுக்கு உள்ளது என்றும் வடமாகாண விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார். (2-281)

# சிசு உயிரிழப்பு

(கண்டாவளை)

கடந்த ஜனவரி மாதம் 11ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அருகில் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட சிசு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் பராமரிக்கப்பட்டு வந்த நிலையில் சில வாரத்திற்கு முன்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த சிசுவின் பெற்றோர் அடையாளம் காணப்படாமையால் சிசுவின் சடலத்தினை ஒப்படைக்க முடியாத நிலையில் மேற்படி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்த சிசுவின் சடலத்தை பொறுப்பேற்க பெற்றோர், உறவினர்கள் யாரும் முன்வரும் பட்சத்தில் சடலத்தினைக் கையளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பொலிஸார் குறிப்பிடுகின்றனர். (2-315)

# தந்தை செல்வா நினைவு தினம் போட்டியும் பரிசளிப்பு விழாவும்

(கிளிநொச்சி)

தந்தை செல்வா நினைவு தினப் போட்டி பரிசளிப்பு விழா எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கிளி/ பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தில் சிரேஷ்ட சட்டத்தரணி சா.செ.சந்திரகாசன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக தொல்லியல் இணைப்பாளர் சிரேஷ்ட பேராசிரியர் கலாநிதி ப.புஸ்பரட்ணம் சிறப்புரையாற்றுவார்.

இதன்போது தந்தை செல்வா உருவப்படத்திற்கு மாலை அணிவித்தல், பரிசளிப்பு என்பன இடம்பெறும்.

தந்தை செல்வா நினைவு அறக்கட்டளையினால் எதிர்வரும் 26ஆம் திகதி ஒழுங்குபடுகின்ற தந்தை செல்வாவின் சமாதியில் நடைபெறும் ஞாபகார்த்த நிகழ்வினைத் தொடர்ந்து முற்பகல் 11.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை யாழ்.மத்திய கல்லூரிக்கு அருகாமையில் கட்டப்பட்டு வரும் தந்தை செல்வா அரங்கில் புகைப்படம் மற்றும் குறும் திரைப்படக்காட்சியும் நடைபெறவிருக்கின்றது. (2)

# படையினரை வெளியேற்றி பொது மலசலகூடத்தை அமையுங்கள்



(பனிக்குளம்)

புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதியில் பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான அரச காணியில் நிலை கொண்டுள்ள படையினர், பொலிஸார் ஆகியோரை வெளியேற்றி பொது மலசலகூடத்தை கட்டித்தருமாறு புதுக்குடியிருப்பு வணிகர் சங்கம் எழுத்து மூல கோரிக்கையை வடக்கு மாகாண சுகாதார அமைச்சர், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர், பிரதேச தவிசாளர், பிரதேச செயலர் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளதுடன் கையளித்தும் உள்ளனர்.

இந்த பகுதி நீண்ட காலமாக புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியின் பொது மலசலகூடம் அமைப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ள பகுதி என கடந்த மார்ச் மாதம் 11 ஆம் திகதி இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த பகுதியில் படையினர், பொலிஸாரை அகற்றி பொது மலசலகூடத்தை கட்டித்தருமாறு புதுக்குடியிருப்பு வணிகர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

நகர் பகுதிக்கு வணிக நிலையங்களை நாடிவரும் வெளிப்பிரதேச மக்கள், பயணிகள் மலசலகூடம் இன்மையால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதியில் அமைந்துள்ள அரச காணியில் உள்ள படையினரை வெளியேற்றி அந்த காணியில் பொது மலசலகூடம் அமைப்பதுதான் சிறந்தது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முழுமையான கவனம் எடுத்து பொது மலசலகூடம் அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்று புதுக்குடியிருப்பு பிரதேச வணிகர் சங்கம் விடுத்துள்ள கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-281)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## கொடிவீழி

கொடிவீழி
Botanical name-Cadabafruticosa
Family-Capparidaceae

பல கிளைகளையுடைய பெருஞ் செடி வகையைச் சார்ந்தது. இதன் பட்டை மண்நிறமாகவும் நார்த் தன்மை உடையதாகவும் இருக்கும். இலைகள் 2.5-3.0 செ.மீ.நீளமாகவும் கோளவடிவுமுடையதாகவும் இருக்கும். பூக்கள் மங்கிய வெள்ளைநிறமுடையவை. மஞ்சள் கலந்த சிவப்பு நிறமுடைய பழங்களுள் கறுப்பு நிற விதைகள் காணப்படும்.

பரம்பலும் இன விருத்தியும்

யாழ்.மாவட்டத்தில் நாவற்குழி,கைதடி,மருதனார்மடம்,சரசாலை மற்றும் நெடுந்தீவுப் பிரதேசத்தில் பரம்பல் அதிகம் அவதானிக்கப்பட்டது. இம் மூலிகையை வேர்க் கன்றுகள்



மூலமும் இன விருத்தி செய்யலாம்.

மருத்துவப்பயன்கள்

இதன் உலர்ந்த இலைகளைப் பொடித்து கோப்பி விதைகளுடன் சேர்த்து இடித்து கோப்பி மென்பானமாக பயன்படுத்தினால் இரும்புச் சத்து நிறைந்த மென்பானமாவதுடன். உடலிற்கு நல்ல பலத்தையும் கொடுக்கும்.

இதன் இலைகளை துவையல் செய்து. அல்லது சமைத்து உண்ணின் கரப்பான். வெள்ளை. பசியின்மை, வயிற்றுப்புழு. வெளிக்குக் போகாமை இவைகளை போக்கி உடலிற்கு வன்மையைத் தரும்.

இலையைக் குடிநீர் இட்டு ஆமணக்குநெய் சேர்த்துக் கொடுக்க கழிச்சலை உண்டாக்கி புழுக்களை வெளிப்படுத்தும். வாத.பித்த கபக்குற்றங்களை தன்னிலைப் படுத்தும்.

இலையை வதக்கி கட்டிகளுக்கு வைத்துக்கட்ட கட்டிகளின் வீக்கம் தணியும். அல்லது இலையை நீரிட்டுக் காய்ச்சி வீக்கங்களின் மீது யாதுமொரு தைலத்தையும் பூசியபின் இந்த நீரைவிட்டுக் கழுவ.வீக்கம் குறையும்.

முதிர்ந்த வீழியின் பட்டயை மஞ்சள் கலந்த வெண்ணிறமாகவும் நார்த்தன்மை நிறைந்ததாகவும் சிறிது கடினமானதாகவும் காணப்படும். நார்த்தன்மையான இதன் குச்சிகளை பல் தீட்ட பயன்படுத்தலாம். (Tooth brush) போன்றது.

வீக்கத்துடன் கூடிய மூட்டு வியாதிகளில் இதன் இலைகளை சிறுகச் சிறுக அரிந்து பொட்டணியாகத் துணியில் முடிந்து கட்டி தைலம் பூசிய பின்பு பொட்டணியை சூடு காட்டி ஒத்தடம் கொடுக்க வீக்கம் குறைந்து வலி தணியும்.

குறிப்பு

வீழியின் கிழங்கு பசும் பொன்னிறமாக இருக்கும். வெட்டி சோதித்து நீர்த் தளத்தில் நிற்கும் மூலிகையை வெட்டிப் பார்த்தால் நுனியில் தேங்காயைப் போலிருக்கும். இதை பாக்குபோல் தறித்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு 5 கிராம் கிழங்கையூட்டலோகமெல்லாம் வெள்ளியாகும். வெள்ளியம் கிழங்கை அரைத்து குகை செய்து இரசத்தை அதிலே வார்த்து அள்ளி அயக் கரண்டியினிட்டு அடுப்பேற்றி மணக்காடை நெய்யை ஊட்டதுள்ளியே இரசமது உண்டையாகும். வாயிலிட கவுனம் ஓடும்.

இதன் இலையை வாயில் அடக்கி எவ்வளவு தூரமும் ஓடலாம். நிற்கும் போது ஏதாவது ஒன்றை பிடித்துக் கொண்டு நிற்கவேண்டும். அவ்வளவு சக்தியைக் கொடுக்கக் கூடிய ஒரு மூலிகையாகும். சித்தர்கள் தமது இரசவாதத்தை இம் மூலிகையைப் பயன்படுத்தியுள்ளார்கள்.

இவ்வாறு அரிய செய்கைகளைக் கொண்ட மருத்துவபகுதிகளையுடைய இம் மூலிகையின் சில பகுதிகளை நாம் நமது அன்றாட வாழ்வில் முன்பு கூறிய மருத்துவ குணங்களின் அடிப்படையில் பயன்படுத்தினால் அதில் ஒரு பகுதி ஆரோக்கியத்தையாவது பெறமுடியும் அல்லவா? அத்துடன் மூலிகைகள் சேகரிக்கும் இடங்களும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்



கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையம் மற்றும் குமரன் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் அமரர்கள் சுப்பிரமணியம், நகுலேஸ்வரி ஞாபகார்த்த குட்டிச்சுட்டி முன்பள்ளியின் விளையாட்டு விழா நிலைய முன்றலில் தலைவர் து.சுதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி கலந்து கொண்டார்.

## கோப்பாய்க் கல்விக்கோட்ட புத்தாண்டு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்க் கல்விக் கோட்ட புத்தாண்டு விழா இன்று புதன்கிழமை காலை 9 மணியளவில் அச்சுவேலி மத்திய கல்லூரியில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சிவநேசன் தலைமையில் இடம் பெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகவடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கந்தையா சர் வேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், யாழ்ப்பாணம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. மாணிக்கராசா, கௌரவ விருந்தினராக யாழ்ப்பாணம் கிருபா லேணர்ஸ் அதிபர் அ.கிருபாகரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

## வசமாக மாட்டிய வலயக் கல்விப் பணிப்பாளர்

(நிக்கவரெட்டிய)

விடுமுறை தினங்களிலும் சேவைக்கு வந்ததாக போலியாக கையொப்பமிட்டு சம்பளம் பெற்றுக் கொண்ட நிக்கவரெட்டிய வலயக்கல்விப் பணிப்பாளர் தொடர்பில் விசாரணை செய்யுமாறு அந்த அலுவலகத்தின் பணியாளர்கள் வடமேல் பிரதான செயலாளருக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

நிக்கவரெட்டிய வலயக் கல்விப் பணிப்பாளர் காரியாலயத்தில் சேவையாற்றும் நிர்வாக அதிகாரி எம்.ஜீ. விமலசேனவின் கையொப்பத்துடன் இந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. வலயக் கல்விப் பணிப்பாளர், விடுமுறை தினங்களிலும் சேவைக்கு வந்திருப்பதாக வேறு ஒருவரின் மூலம் கைவிரல் அடையாள இயந்திரத்தில் வரவு பதியப்பட்டுள்ளது.

இதற்காக வலயக் கல்விப் பணிப்பாளரின் கைவிரல் அடையாளத்திற்கு பதிலாக வேறு ஒருவரின் கைவிரல் அடையாளம் அந்த இயந்திரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக தெரிய வந்ததையடுத்து கடந்த பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி முதல் அந்த இயந்திரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

தொடர்ந்து இடம்பெற்ற இந்த முறைகேடு சம்பந்தமாக விசாரணை செய்யுமாறு வலயக் கல்வி காரியாலய மேலதிகாரிகளிடம் அலுவலகப் பணியாளர்கள் கேட்டுக் கொண்ட போதிலும் அதற்கு இதுவரை சரியான பதில் கிடைக்கவில்லை என்று அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. (இ-7)

## அஞ்சல் சேவையாளர்களின் சமர்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை தமிழ் பேசும் அஞ்சல் சேவையாளர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் வடக்கு-கிழக்கு அஞ்சல் சேவையாளர்களின் வெற்றியாளர் சமர் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் அரியாலை சனசமூக நிலையத்தில் அகில இலங்கை தமிழ் பேசும் அஞ்சல் சேவையாளர் சங்க கிளைத் தலைவர் க.ஸ்.பாஸ்கரன் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு அஞ்சல்மா அதிபதி காரியாலய நிர்வாகி வி.விவேகானந்த லிங்கம், கௌரவ விருந்தினராக வடக்கு பிரதி அஞ்சல்மா அதிபதி மது மதிவசந்தகுமார், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் பிராந்திய நிர்வாக உத்தியோகத்தர் ஐ.சின்னப்பு, யாழ்ப்பாணம் அஞ்சல் அத்தியட்சகர் கேபுஸ்பநாதன், யாழ்ப்பாணம் அஞ்சல் பயிற்சிக் கல்லூரி பிரதம போதனாசிரியர் நளினி அபயகரன், யாழ்ப்பாணம் பிராந்திய கணக்காளர் கே. கஜேந்திரவேள், மட்டக்களப்பு பிரதம அஞ்சல் அதிபர் எ.சுகுமார், யாழ்ப்பாணம் பிரதம அஞ்சல் அதிபர் எம்.விஜயகுமார், சுழிபுரம் தபாலதிபர் எப்.ஜெரோமா, அருள் குளோபல் எக்ஸ்பிரஸ் உரிமையாளர் பி.குமரன், நல்லூர் பரியாக் கோபு ஆலய பங்கு தந்தை யாழ். பிராந்திய பணி முதல்வர் என்.எஸ்.ஜெபச்செல்வன், நீர் வழங்கல் வடிகாலமைப்பு சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் பீ.அன்று பிரவீன், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி உப அதிபர் பி.தேவமித்திரன், அகில இலங்கை அஞ்சல் சேவையாளர் சங்க யாழ்ப்பாணக்கிளை தலைவர் எ. சுபாகரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

## இதய அஞ்சலி



அமரர்

நடராசா இராமநாதன்

(வட்டூர் தவில் வித்துவான்,
தவில் அரசு இசைமணி)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா இராமநாதன் அவர்களின் மறைவு வட்டுக்கோட்டை தொகுதி மக்களுக்கு பேர் இழப்பாகும். அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிறப்பு 23 04 1956

இறப்பு 23 04 2018

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி
அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்
வட்டுக் கோட்டைத் தொகுதி

(சி-2390)

## சிறை உத்தியோகத்தர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய ஆட்சேர்ப்பு நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் கடந்த காலங்களில் சிறைச்சாலைகளில் நிலவிய சுமார் 1550 பதவி வெற்றிடங்களை நிரப்பும் முகமாக இவ்வாண்டு முதல் சிறைச்சாலை முறைமையை வலுப்படுத்தும் திட்டத்தை அமுல்படுத்தவுள்ளதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில், கடந்த ஆண்டு முதல் சிறைச்சாலை திணைக்களத்தில் நிலவிய உத்தியோகத்தர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக 2017ஆம் ஆண்டில் 350 சிறைச்சாலை காவலாளிகள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இவ்வாண்டில் 1200 சிறைச்சாலைக் காவலாளிகளை ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்கு தேவையான நேர்முக பரீட்சைகளை நடத்தி ஒகஸ்ட் மாத இறுதிப்பகுதிக்குள் 1200 உத்தியோகத்தர்களுக்கும் உரிய பயிற்சிகளை வழாங்கி சேவைகளில் ஈடுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அதேசமயம் சிறைச்சாலைகளில் இடம்பெறும் முறைகேடுகள், வன்முறைகள், போன்றவற்றை தடுக்கும் முகமாக சிறைச்சாலைகளெங்கும் சிசிரிவி கமராக்களையும், கையடக்க தொலைபேசியூடான செய்திகளை தெளிவற்றதாக்கும் முறைமையொன்றையும் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## மாணவர், பெற்றோர்களுக்கான கூட்டம்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில்2020ஆம்ஆண்டு உயர்தரத்தில் கணித, விஞ்ஞான, தொழில்நுட்ப, கலை, வர்த்தக வகுப்புக்களில் இணைந்துள்ள மாணவர்களும் வேறு பாடசாலையில் இருந்து மகாஜனக் கல்லூரியில் இணைய விரும்பும் மாணவர்களுக்கும் அவர்களின் பெற்றோர்களுக்குமான கூட்டம் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெறுமென பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (இ-105)

## தென் தீபம் சஞ்சிகைக்கு ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

"தீவுகள் தெற்கு வேலணை பிரதேச கலாசாரப் பேரவையால் வெளியிடப்படும் தென் தீபம் சஞ்சிகை இதழ் 05 ற்கான ஆக்கங்கள் வேலணை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த கலைஞர்களிடமிருந்து கோரப்படுகின்றன.


இவ் வருடம் தென்தீபம் சஞ்சிகையானது ஆவணப்படுத்தல் மற்றும் விழிப்புணர்வு சார்ந்த கருத்துக்களை மையமாகக் கொண்டு கவிதை, ஆய்வுக் கட்டுரைகள், சிறுகதைகள், உரையாடல்கள், பல்சுவை ஆக்கங்கள், பிரதேசத்தில் காணப்படும் கிராமங்களின் பெயர்,வரலாறுகள் போன்ற படைப்புக்களாக வேலணை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்தவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே கலைஞர்கள் தமது ஆக்கங்களை 21.05.2018 ற்கு முன்னதாக பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்வதுடன் தபால் மூலம் அனுப்ப விரும்புவோர் செயலாளர், கலாசாரப் பேரவை கலாசாரப் பிரிவு, பிரதேச செயலகம், வேலணை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

தகுதியான ஆக்கங்கள் கலாசாரப் பேரவையின் மலர்க்குழுவின் தீர்மானத்திற்கு அமைவாக தென்தீபம் சஞ்சிகை இதழ் 05இல் உள்ளடக்கப்படும்.

அனுப்பி வைக்கப்படும் ஆக்கங்களின் மூலத் தன்மையினை உறுதிப்படுத்துவதுடன் அவ் ஆக்கங்கள் தொடர்பிலான பொறுப்புக்கள் அனைத்தும் கட்டுரை ஆசிரியரையே சாரும் என்பதையும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்" என தீவுகள்தெற்கு வேலணை பிரதேச செயலரும் கலாசார பேரவையின் தலைவருமான அ.சோதிநாதன் கேட்டுக்கொண்டுள்ளார். (இ)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு:
021 221 7603,
021 567 1532



மதங்களுக்கிடையிலும் கலாசாரங்களுக்கிடையிலும் விழாக்களைக் கொண்டாடுதல் எனும் தொனிப்பொருளில் யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் சிங்கள.தமிழ் புத்தாண்டுக் கொண்டாட்டம் நேற்று யாழ். சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மாகாண கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப்பணிப்பாளர் (நிர்வாகம்) வை.ரவீந்திரன் கலந்து சிறப்பித்தார்.மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகளுடன் பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம் பெற்றது. (படங்கள்: சாவகச்சேரி செய்தியாளர்)

உ
சிவமயம்



அல்லைப்பிட்டி - இனிச்ச புளியடி
ஸ்ரீ முருகன் திருக்கோவில்
புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா - 27.04.2018

முருகப் பெருமான் மெய்யடியார்களே!

இனிய விளம்பி வருடத்தில் முருகப்பெருமான் திருக்கோவிலில் முதன் முதலாக மஹோற்சவம் நடைபெறுகின்ற காலத்தில் முருகப் பெருமானுக்கென்றே முதன் முதல் உருவாக்கப் பெற்ற சித்திரத் தேரில் பெருமான் எழுந்தருளவுள்ளார்.

28.04.2018 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ள தேர்த்திருவிழாவை முன்னிட்டுத் தாவடி துரை சிற்பாலயத்தின் இயக்குநர் சிற்பக் கலையரசு ஜயாத்துரை இலங்கேஸ்வரனால் முருகப் பெருமான் அருள் கொண்டு மிகக் குறுகிய காலத்தில் உருவாக்கப் பெற்ற அற்புதச் சித்திரத் தேர் வெள்ளோட்டம் 27.04.2018 வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. வெள்ளோட்டம் நல்லையாதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் அருளாசியுடன் ஆரம்பமாகும்.

மெய்யடியார்கள் யாவரும் பக்தி சிரத்தையுடன் வருகை தந்து முருகப் பெருமானின் தேர்வடம் பிடித்து அருள் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செ.நடேசபிள்ளை
ஆலய தர்மகர்த்தா.

(சி-2388)

# காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கக்கோரி தமிழகம் முழுவதும் மனிதசங்கிலிப் போராட்டம்





(சென்னை)
காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வலியுறுத்தி தி.மு.க மற்றும் அதன் தோழமை கட்சிகள் சார்பில் தமிழகம் முழுவதும் மாவட்ட தலை நகரங்களில் மனித சங்கிலி போராட்டம் நடைபெற்றுள்ளது.

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காத மத்திய அரசை கண்டித்தும், காலதாமதம் செய்யாமல் காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும் தி.மு.க, காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், இடது சாரி கட்சிகள், விவசாய சங்கங்கள் சார்பில் நேற்று முன்தினம் மனித சங்கிலி போராட்டம் நடைபெற்றது.

அதன்படி, மாவட்ட தலைநகரங்களில் நேற்று முன்தினம் பிற்பகலில் மனித சங்கிலி போராட்டம் ஆரம்பமாக சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி தலைமையில் போராட்டம் நடந்து வருகிறது. தஞ்சையில் வைகோ தலைமையில் மனித சங்கிலி போராட்டம் தொடங்கியது. (7)

## கல்லூரி மாணவிகள் மீது பாலியல் தொல்லை

# நிர்மலாதேவியை தூண்டிய பேராசிரியரிடம் சி.பி.சி.ஐ.டி. பொலிஸார் தீவிர விசாரணை

(விருதுநகர்)
கல்லூரி மாணவிகளை தவறான பாதைக்கு அழைப்பதற்காக நிர்மலாதேவியை தொலைபேசியில் பேசத் தூண்டியதாக தேடப்பட்டு வந்த பேராசிரியர் முருகனை விருதுநகருக்கு அழைத்து வந்து சி.பி.சி.ஐ.டி பொலிஸார் விசாரணை நடத்தினார்கள்.

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை தேவாங்கர் கல்லூரி பேராசிரியை நிர்மலாதேவி அக்கல்லூரியை சேர்ந்த 4 மாணவிகளை தொலைபேசி மூலம் தவறான பாதைக்கு அழைத்ததாக கூறப்பட்ட புகாரின் பேரில் கைது செய்யப்பட்டார். அவர் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கு விசாரணை சி.பி.சி.ஐ.டி பொலிஸாருக்கு மாற்றப்பட்டது.

சி.பி.சி.ஐ.டி. பொலிஸார் சாத்தூர் நீதவான் நீதிமன்ற அனுமதியுடன் நிர்மலாதேவியை 5 நாள் பொலிஸ் காவலில் எடுத்து கடந்த 20 ஆம் திகதி முதல் விசாரித்து வருகின்றனர்.

சி.பி.சி.ஐ.டி. விசாரணையின் போது நிர்மலாதேவி ஏற்கனவே மாவட்ட பொலிஸாரிடம் தெரிவித்தபடியே மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தை சேர்ந்த பேராசிரியர்கள் முருகன், கருப்பசாமி ஆகியோர் தூண்டுதலின் பேரிலேயே மாணவிகளை தொலைபேசியில் தொடர்பு கொண்டதாக தெரிவித்தார்.

அதன் பேரில் சி.பி.சி. ஐ.டி பொலிஸார் அந்த 2 பேராசிரியர்களையும் தேடிச் சென்றபோது அவர்கள் தலைமறைவாகி இருந்தது தெரிய வந்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பேராசிரியர் கருப்பசாமியை அவரது சொந்த ஊரான திருச்சுழி அருகே உள்ள நாடாகுளத்துக்கு தேடிச் சென்றனர். அவர் அங்கு இல்லாததால் அவருடைய மனைவி கனகமணியிடமும், உறவினர்களிடமும் கருப்பசாமியின் இருப்பிடம் குறித்து விசாரித்தனர். அவர்களிடம் கிடைத்த தகவலின் பேரில் அவரை தேடும்பணியை தீவிரப்படுத்தினர்.

இந்தநிலையில் பேராசிரியர் முருகன் நேற்று முன்தினம் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்துக்கு வருகை பதிவேட்டில் கையெழுத்து போட வந்த போது சி.பி.சி.ஐ.டி பொலிஸாரிடம் சிக்கினார்.

தகவல் அறிந்த சி.பி.சி. ஐ.டி. பொலிஸ் அதிகாரி ராஜேஸ்வரி மதுரைக்கு விரைந்து சென்று பேராசிரியர் முருகனிடம் விசாரணை நடத்தினார்.

இதைத்தொடர்ந்து சி.பி.சி. ஐ.டி பொலிஸார் நேற்று முன்தினம் பிற்பகல் பேராசிரியர் முருகனை விசாரணைக்காக விருதுநகர் சி.பி. சி.ஐ.டி. அலுவலகத்துக்கு ஒரு காரில் அழைத்து வந்தனர். அவரிடம் பொலிஸ் அதிகாரி ராஜேஸ்வரி மற்றும் விசாரணை குழுவினர் விசாரணை மேற்கொண்டனர்.

இது தவிர சி.பி.சி.ஐ.டி. அலுவலகத்துக்கு 2 காண்டிராக்டர்கள் வரவழைக்கப்பட்டு அவர்களிடமும் விசாரணை நடத்தப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காமராஜர் பல்கலைக் கழக மனிதவள மேம்பாட்டுத்துறை இயக்குநர் பொறுப்பு வகிக்கும் கலைச் செல்வனிடம் சி.பி.சி.ஐ.டி பொலிஸார் விசாரணை நடத்தினர்.

அப்போது, நிர்மலாதேவி கல்லூரி நிர்வாகத்தால் பணியிடை நீக்கம் செய்யப்பட்ட பின்னரும் அவரை புத்தாக்கப் பயிற்சி தொடர அனுமதித்தது ஏன் என கேட்டபோது பல்கலைக்கழக மானியக்குழு விதிமுறைப்படி புத்தாக்க பயிற்சியின் போது பயிற்சியில் இருக்கும் பேராசிரியர்களுக்கு விடுமுறை அளிக்கக்கூடாது என்றும், பிற காரணங்களுக்காக அவர்களை பயிற்சியில் இருந்து வெளியேற்றக்கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டு இருந்ததால் நிர்மலாதேவி பயிற்சியை தொடர அனுமதித்ததாகவும், இது குறித்து கல்லூரி நிர்வாகத்துக்கு கடிதம் எழுதியதாகவும், விசாரணைக் குழுவிடம் தெரிவித்ததாக விசாரணைக்குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இயக்குநர் கலைச்செல்வன் மீது நடவடிக்கை ஏதும் எடுக்கப்படுமா என்று கேட்ட போது அவர் விதிமுறைப் படிதான் கடிதம் எழுதியதாகவும், பயிற்சியை தொடர அனுமதி அளித்ததாகவும் தெரிவித்ததால் நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இல்லை என்று கூறினார்.

இது குறித்து பல்கலைக்கழக நிர்வாகம் தான் 'விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.


பேராசிரியை நிர்மலாதேவியின் வீட்டில் சோதனையிட்ட போது கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் பொருட்களை சாத்தூர் நீதவான் நீதிமன்றில் ஒப்படைக்க சி.பி.சி.ஐ.டி. பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.


பொலிஸாரால் தேடப்பட்டு வரும் கருப்பசாமியும் விரைவில் பொலிஸாரிடம் சிக்குவார் என உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இவர்கள் இருவரிடமும் விசாரணை மேற்கொண்டால் தான் பேராசிரியை நிர்மலா தேவி கூறிய உயர் அதிகாரிகள் யார்-யார் என்பது தெரிய வரும் என்று விசாரணை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (7)

## தலைமை நீதிபதி பதவி நீக்க விவகாரம்

# துணை ஜனாதிபதியின் நிராகரிப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் முறையிட காங்கிரஸ் முடிவு

(டில்லி)
தலைமை நீதிபதி மீதான பதவி நீக்க தீர்மானத்தை துணை ஜனாதிபதி நிராகரித்துள்ள நிலையில், இதனை எதிர்த்து உச்ச நீதிமன்றம் முறையிட உள்ளதாக கபில் சிபல் கூறியுள்ளார்.





உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ராவை பதவி நீக்கம் செய்ய பாராளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வரக் கோரி காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் சார்பில் மாநிலங்களவை தலைவரான துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு விடம் பிரேரணை அளித்திருந்தனர். மாநிலங்களவையில் இடம் பெற்றுள்ள ஏழு எதிர்க்கட்சிகளை சேர்ந்த 64 எம்.பிக்கள் அதில் கையெழுத்திட்டிருந்தனர்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் வெங்கையா நாயுடு மக்களவை முன்னாள் செயலாளர் சுபாஷ் காஷ்யப், அட்டர்னி ஜெனரல் கே.கே. வேணுகோபாலுடன் ஆலோசனை நடத்தினார். சட்ட அமைச்சக முன்னாள் செயலாளர் பி.கே. மல்கோத்ரா, சட்டசபை முன்னாள் செய லாளர் சஞ்சய் சிங் ஆகியோருடனும் வெங்கையா நாயுடு விவாதித்தார்.

இந்த ஆலோசனைகளுக்குப் பிறகு எதிர்க்கட்சிகளின் பிரேரணையை நிராகரிப்பதாக வெங்கையா நாயுடு தெரிவித்திருந்தார்.

இதனை அடுத்து செய்தியாளர்களை சந்தித்த காங்கிரஸ் மூத்த தலைவர் கபில் சிபல், "வெங்கையா நாயுடு பிரேரணையை நிராகரித்துள்ளது மக்களின் நம்பிக்கையை தகர்ப்பதாக உள்ளது. துணை ஜனாதிபதியின் இந்த முடிவுக்கு எதிராக உச்ச நீதிமன்றில் முறையிட உள்ளோம். உச்ச நீதிமன்றத்தின் இறுதி முடிவுக்கு உடன் படுகிறோம் எனக் கூறினார். (7)

# சீன இர

## 18 பேர் ப

(பீஜிங்)
சீனாவில் இரவுநேர கேளிக்கை விடுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் 18 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

சீனாவின் குவாங்டாங் மாகாணத்தின் குயிங்யு வான் நகரில் இசை

# ஏமன் திரும

# தாக்குதல்; ப

(டுபாய்)
ஏமன் நாட்டில் சவுதி கூட்டுப்படைகள் திருமண வீட்டின் மீது நடத்திய வான் வழித் தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 40 ஆக உயர்ந்துள்ளது.

அரேபிய தீபகற்ப நாடான ஏமனில் கடந்த 3 ஆண்டுகளுக்கும் மேலாக அரசு படைகளுக்கும், சவுதி கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே உள்நாட்டு போர் நடந்து வருகிறது. இதனால் அரசின் இராணுவத்துக்கு ஆதரவாக சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப்படைகள் கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றிய பகுதிகளில் வான்வழித் தாக்குதல் நடத்தி வருகின்றன. இது வரை ஆயிரத்துக்கும் மேற்பட்ட தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை, வடக்கு ஏமனில் உள்ள ஹஜ்ஜா நகர் அருகே ஒரு கிராமத் தில் திருமண நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது. இதற் காக உள்ளூரைச் சேர்ந்த 150 இற்கும் மேற்பட்டோர் அந்த வீட்டில் திரண்டு இருந்தனர். ஆனால் அங்கு சவுதி கிளர்ச்சியாளர்கள் கூடி தாக்குதலுக்கு திட்டமிடுவதாக அரசு படைகளுக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து அடுத்த அரை மணி நேரத்தில் சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப்படைகள் அங்கு விரைந்து சென்று வான்வழித் தாக்குதலை மேற்கொண்டன.

# வேகக் கட்

# 10பேர் உயி




(டொரண்டோ)
கனடாவில் வான் மோதிய விபத்தில் 10 பேர் பலியாகி னர். மேலும் 15 பேர்

# வெளிநாடு

## ...ரவு கேளிக்கை விடுதியில் தீ; பரிதாபமாக உயிரிழப்பு

நிகழ்ச்சியுடன் கூடிய இரவு நேர கேளிக்கை ஒன்று அமைந்துள்ளது. இங்கு திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் 18 பேர் சிக்கி பலியாகி உள்ளனர். 5 பேர் காயமடைந்துள்ளனர். அவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

சீனாவில் பாதுகாப்பு விதிகள் முறையாக கடைப்பிடிக்கப்படுவது இல்லை. அதனை அமுல்படுத்துவதும் முறைப்படுத்தப்படவில்லை. இதனால் அந்நாட்டில் தீ விபத்துகள் அடிக்கடி ஏற்பட்டு வருகின்றன.

சீனாவில் கடந்த 2015 இல் நர்சிங் ஹோம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 38 பேர் பலியான சம்பவத்தினை தொடர்ந்து பாதுகாப்பு நடைமுறைகள் பற்றிய கேள்விகள் எழுந்தன. இந்த தீ விபத்து சம்பவத்தில் தீயணைப்பு வீரர்கள் மற்றும் அரசு பணியாளர்கள் என 21 பேரை சிறையில் அடைக்க கடந்த வருடம் நீதிமன்றம் உத்தரவிட்டது. (7)

## ...மண வீட்டில் சவுதிக் கூட்டுப் படையினர்...; பலியானோர் எண்ணிக்கை 40ஆக உயர்வு



அந்த வீட்டின் மீது போர் விமானங்கள் சரமாரியாக குண்டுகளை வீசின. இதில், ஏராளமான குழந்தைகள் உட்பட 20 பேர் பலியான தாக முதல் கட்ட தகவல் வெளியானது. இந்நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தவர்களில் மேலும் 20 பேர் பலியானதாக தெரிவிக்கப்பட்டது.


இதனால் பலியானோர் எண்ணிக்கை 40 ஆக உயர்ந்துள்ளது. மேலும் இந்த சம்பவத்தில் 30 குழந்தைகள் உட்பட 46 பேர் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

50 இற்கும் மேற்பட்டோர் அதிர்ஷ்டவசமாக எந்த காயமும் இன்றி உயிர் தப்பினர். காயம் அடைந்தவர்கள் அருகில் உள்ள ஹஜ்ஜா நகர வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டனர்.

இந்த தாக்குதல் குறித்து விசாரணை நடத்த உத்தரவிட்டு இருப்பதாக சவுதி கூட்டுப்படை அதிகாரி ஒருவர் தெரி வித்தார். இதுபற்றி அவர் கூறுகையில், சவுதி கூட்டுப் படைகள் ஒருபோதும் பொது மக்களை குறிவைத்து வான் வழியாக தாக்குவதில்லை. இந்த குறி தவறிய தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்த உத்தரவிடப் பட்டுள்ளது என்றார்.

ஏமனில், உள்நாட்டு போர் காரணமாக இதுவரை 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 20 இலட்சம் பேர் வேறு நாடுகளுக்கு புலம் பெயர்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

## மக்கள் போராட்டத்திற்கு அடிபணிந்து அர்மேனியப் பிரதமர் இராஜினாமா



(எரவென்)

ஜனாதிபதியின் அதிகாரத்தை பறிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வந்த அர்மேனியா பிரதமர் செர்ஸ் சர்கிசியான் மக்கள் போராட்டத்துக்கு அடிபணிந்து நேற்று இராஜினாமா செய்துள்ளார்.

ஆசியா-ஐரோப்பா கண்டங்களுக்கு இடையில் அமைந்துள்ள அர்மேனியா நாட்டில் சுமார் 30 இலட்சம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

முன்னர் ரஷ்யா தலைமையிலான சோவியத் யூனியனில் அர்மேனியா நாடும் ஒரு அங்கமாக இருந்த போது ரஷ்ய இராணுவத்தில் பணியாற்றியவர் செர்ஸ் சர்கிசியான். முன்னாள் ஜனாதிபதி அர்மேன் காலத்தில் இரு முறை பிரதமராக பதவி வகித்தார். பின்னர், கடந்த 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

2013 ஆம் தேர்தலிலும் போட்டியிட்டு ஜனாதிபதியாக வெற்றிபெற்ற இவரது பதவிக் காலம் 9-4-2018 அன்று முடிவடைந்த நிலையில், பிரதமராக கடந்த வாரம் பொறுப்பேற்றார். செர்ஸ் சர்கிசியானின் அதிகாரத்தை வலுப்படுத்தவே ஆளும் கட்சியினர் அவரை பிரதமராக தேர்வு செய்ததாக எதிர்க் கட்சிகள் கருதின.

பிரதமர் பதவிக்கு வந்தவுடன் ஜனாதிபதியிடம் உள்ள அதிகாரங்களை எல்லாம் பிரதமருக்கு மாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்ட செர்ஸ் சர்கிசியான், பாராளுமன்ற ஆட்சிமுறையை அர்மேனியாவில் கொண்டு வர முயற்சித்து வருவதாக எதிர்க்கட்சியினர் குற்றம்சாட்டினர்.

பிரதமர் பதவியில் இருந்து அவர் உடனடியாக விலக வேண்டும் என எதிர்க்கட்சியினருடன் பொதுமக்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டக்காரர்களுடன் செர்ஸ் சர்கிசியான் நடத்திய சமரச பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்த நிலையில் இங்கிருக்கும் அரசியல் குழப்பங்களை அண்டைநாடான அசர்பைஜான் சாதகமாக்கி கொள்ளலாம் என மக்கள் கருதினர்.

இந்நிலையில், கடந்த பத்து நாட்களுக்கும் மேல் மக்கள் நடத்திவந்த தொடர் போராட்டத்துக்கு அடி பணிந்த செர்ஸ் சர்கிசியான் (வயது-64) பிரதமர் பதவியை நேற்று இராஜினாமா செய்தார். (7)

## கர்நாடக சட்ட சபைத் தேர்தல்; பொலிஸாரின் சோதனையில் ரூ.34 கோடி பறிமுதல்

(பெங்களூர்)

கர்நாடக சட்டசபை தேர் தலையொட்டி பறக்கும்படை அதிகாரிகள் இதுவரை நடத்திய சோதனையில் ரூ.34 கோடியே 69 இலட்சம் பறி முதல் செய்யப்பட்டது.

கர்நாடக சட்டசபை தேர்தல் அடுத்த மாதம் 12 ஆம் திகதி நடைபெறவுள்ளது. தேர்தலையொட்டி மாநிலம் முழுவதும் பறக்கும் படை அதிகாரிகளும், பொலிஸாரும் இணைந்து வாகன சோதனை நடத்தி வருகிறார்கள்.

நேற்று காலை வரை நடத்தப்பட்ட சோதனையில் இதுவரை 34 கோடியே 69 இலட்சத்து 7 ஆயிரத்து 954 ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என்று கர்நாடக மாநில தலைமை தேர்தல் அதிகாரி சஞ்சீவ் குமார் தெரிவித்துள்ளார்.

இதுதவிர ஒரு கோடியே 77 இலட்சம் மதிப்பிலான 7 கிலோ 74 கிராம் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது. மாநிலம் முழுவதும் 424 தேர்தல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளன.

சுவர் விளம்பரம் செய்த தாக 12 ஆயிரத்து 537 வழக்குகளும், சுவரொட்டி ஒட்டிய தாக 17 ஆயிரத்து 693 வழக்குகளும், பனர் கட்டிய தாக 7 ஆயிரத்து 711 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. (7)

## ஆப்கானில் சகோதரர்கள் மூவரின் தலைகள் துண்டிக்கப்பட்டன

### ஐ.எஸ்.தீவிரவாதிகளின் வெறித்தனம்



(ஜலாலாபாத்)

ஆப்கானிஸ்தானில் அண்மையில் கடத்தி செல்லப்பட்ட 3 சகோதரர்களை ஐ.எஸ். தீவிரவாதிகள் தலை துண்டித்து கொலை செய்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தானை ஒட்டியுள்ள எல்லையோர மாகாணமான நங்கார்கரில் ஐ.எஸ். தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இங்குள்ள சபார்கர் மாவட்டத்தை சேர்ந்த 3 சகோதரர்களை அண்மையில் அவர்கள் கடத்தி சென்றனர்.

இதில் மூத்தவரான நிசார் தரேலிவால் (வயது-27) வைத்தியராகவும், நயீம் (வயது-24) தடுப்பூசி விழிப்புணர்வாளராகவும், அப்துல் வகாப் (வயது-19) மருத்துவ மாணவராகவும் இருந்தனர். இவர்கள் 3 பேரையும் கடந்த 21 ஆம் திகதி இரவில் ஐ.எஸ். தீவிரவாதிகள் தலை துண்டித்து கொலை செய்தனர்.

இவர்களின் தந்தையையும் கடந்த ஆண்டு ஐ.எஸ். இயக்கத்தினர் தலை துண்டித்து கொலை செய்திருந்தனர். அவரும் மருத்துவராக பணியாற்றி வந்தார். இதைப் போல 11 விவசாயிகளையும் ஐ.எஸ். தீவிரவாதிகள் அண்மையில் கடத்தி சென்றனர். பின்னர் அவர்களில் இருவரை மட்டும் அவர்கள் விடுவித்தனர்.

இந்த 2 சம்பவங்களுக்கான காரணம் குறித்து எந்த தகவலையும் ஐ.எஸ். இயக்கத்தினர் வெளியிடவில்லை. இந்த சம்பவங்களால் நங்கார்கர் மாகாணத்தில் அதிர்ச்சியும் பதற்றமும் நிலவி வருகிறது. (7)

## ...கட்டுப்பாட்டையிழந்த வான்; உயிரிழப்பு, 15பேர் படுகாயம்

### கனடாவில் சம்பவம்



படுகாயம் அடைந்தனர்.

கனடாவில் உள்ள டொரண்டோ நகரில் வாடகை வான் ஒன்று சென்று கொண்டிருந்தது. அப்போது எதிர்பாராத விதமாக சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த வான் பாதசாரிகள் செல்லும் கூட்டத்தில் புகுந்தது.

இந்த விபத்தில் சிக்கிய 10 பேர் பலியாகினர். மேலும் 15 பேர் படுகாயம் அடைந்தனர்.

மேலும் இந்த சம்பவம் விபத்து ஏற்படுத்தும் நோக்கத்தில் நடைபெறவில்லை எனவும், இந்த விசாரணை மிகவும் சிக்கலானதாக இருக்கும் என்றும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்த விபத்தில் சம்பந்தப்பட்ட நபரை பொலிஸார் தேடி வந்தனர்.

பின்னர் இந்த விபத்திற்கு காரணமான டொரண்டோவில் புறநகர் பகுதியான ரிச்மாண்ட் ஹில்லில் வசிக்கும் 25 வயதான அலெக்ஸ் மினாசியன் என்பவர் கைது செய்யப்பட்டார்.

இந்த விபத்தில் 10 பேர் இறந்தனர். மேலும் 15 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் இந்த சம்பவம் தொடர்பான விசாரணை நடைபெற்று வருவதாகவும் விரைவில் உறுதியான அறிக்கையை வெளியிடுவதாகவும் அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (7)

# இலங்கையுடன் பரந்துபட்ட பாதுகாப்பு ஒத்துழைப்பை எதிர்பார்க்கும் பாகிஸ்தான்



(இஸ்லாமாபாத்)

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில பாதுகாப்புத் துறையில் பரந்துபட்ட ஒத்துழைப்பை, நிபுணத்துவத்தைப் பகிர்ந்து கொள்வதும் அவசியம் என்று பாகிஸ்தான் பிரதமர் சாஹிட் கான் அப்பாசி தெரிவித்துள்ளார். பாகிஸ்தானுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஷ் சேனநாயக்க நேற்று முன்தினம் பாகிஸ்தான் பிரதமரை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இதன் போதே அவர் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை வலியுறுத்தியுள்ளார். 'பிராந்தியத்தில் அமைதி நிலவுவதை இரண்டு நாடுகளும் விரும்புகின்றன. இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலுள்ள பாதுகாப்பு ஒத்துழைப்பு திருப்தியளிக்கிறது' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது கருத்து வெளியிட்ட இலங்கை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்க, பாதுகாப்புத்துறையில் பாகிஸ்தானுடன் மேலும் உறவுகளைப் பலப்படுத்துவதில் இலங்கை ஆர்வம் கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார். (இ-7)

# கொத்துக் கொத்தாக செத்து மடிந்த உயிர்கள் கண்ணீர் விட்டழுத சிலாபம் மீனவர்கள்



(சிலாபம்)

சிலாபத்திலுள்ள ஏரி ஒன்றில் திடீரென மீன்கள் இறந்து மிதப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

சிலாபம் - மாரவல ஏரியிலுள்ள அனைத்து மீன்களும் திடீரென உயிரிழந்துள்ளன. இதன் காரணமாக சுமார் ஒன்றரைக் கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் கண்ணீருடன் கவலை வெளியிட்டுள்ளனர்.

21ஆம் திகதியில் இருந்து மீன் உயிரிழந்து மிதக்க ஆரம்பித்துள்ள நிலையில் நேற்று அனைத்து மீன்களும் உயிரிழந்துள்ளன. அந்தப் பகுதியிலுள்ள மீனவர்கள் ஒவ்வொருவரும் தலா பத்து இலட்சம் ரூபாவை முதலிட்டு மீன்களை வளர்த்து வந்துள்ளனர்.

ஏரியில் விஷம் கலந்த நிலையில் மீன்கள் உயிரிழந்திருக்கலாம் என மீனவர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இது குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (இ-7)

## வயது முதிர்ந்தவர்கள் விலக வேண்டும்

# ஆட்டமிழந்த பின்னரும் ஆடிக்கொண்டிராமல் சஜித்திற்கும் நவீனுக்கும் வாய்ப்பளியுங்கள்

## ரணிலிடம் ரஞ்சன் வலியுறுத்து



(கொழும்பு)

அமைச்சர் சஜித் பிரேமதாச மற்றும் நவீன் திஸாநாயக்க ஆகியோருக்கு கட்சியில் கூடுதல் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர் இதனைத் தெரிவித்தார்.

"சஜித்துக்கும் நவீனுக்கும் துடுப்பெடுத்தாடுவதற்கான வாய்ப்பை வழங்க வேண்டும். ரணில் விக்கிரமசிங்க பல தடவைகள் துடுப்பெடுத்தாடிவிட்டார். 2002ம் ஆண்டில் ரணில் விக்கிரமசிங்க துடுப்பெடுத்தாடி சதம் பெற்றுக் கொண்டார். எனினும், 2004ஆம் ஆண்டில் அவர் ஆட்டமிழந்தார்.

2010ஆம் ஆண்டு மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் சரத் பொன்சேகா, மைத்திரிபால சிறிசேனா ஆகிய வெளி ஆட்டக்காரர்கள் அணியில் இணைந்துக் கொள்ளப்பட்டனர் எனவும், இப்பொழுது கட்சியின் வீரர்களுக்கு உரிய சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டியது அவசியமானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, தனக்கு தற்பொழுது வயதாகின்றது. ஆகையினால் இனி திரைப்படங்களில் காதலன் வேடத்தில் நடிக்கப் போவதில்லை. இனி அப்பாவாகவே நடிக்கப் போகின்றேன்.

இதனைப்போன்று வயது முதிர்ந்த அரசியல்வாதிகள் இளையவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்" எனவும் அவர் இந்த ஊடக சந்திப்பில் வலியுறுத்தினார். (இ-7)

# எட்டாம் திகதி எதிர்க்கட்சியில் அமர்வது உறுதி-செனவிரத்ன



(கொழும்பு)

அரசாங்கத்திலிருந்து வெளியேறிய 16பேரும் எதிர்வரும் 8 ஆம் திகதி எதிர்க்கட்சியில் அமர்வதாக உறுதியான தீர்மானம் எடுத்துள்ளதாகவும் மகிந்த அணியுடன் சேர்வது தொடர்பில் இது வரையில் எந்தவித கலந்துரையாடலும் இடம்பெறவில்லையெனவும் முன்னாள் அமைச்சர் டபிள்யு. டீ.ஜே. செனவிரத்ன தெரிவித்தார்.

முன்னாள் பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபாலவின் இல்லத்தில் நேற்று முன்தினம் இரவு சுதந்திரக் கட்சியிலிருந்து விலகிய 16 பேரும் மேற்கொண்ட கலந்துரையாடலின் பின்னர் வெளியேறும் போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

தமது தீர்மானம் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் ஸ்ரீ ல.சு.கயின் பொதுச் செயலாளர் ஆகியோருக்கு அறிவித்துள்ளதாகவும் செனவிரத்ன எம்.பி. மேலும் தெரிவித்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

# எதிர்த்துப் பேசுபவர்களை சமாளிக்கும் விதம்

நாம் ஏதாவது சொன்னால், அதை அரச கட்டளை போல் ஏற்று கைகட்டி வாய் பொத்திக் கேட்டுக் கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பு நமக்கு இன்னமும் இருக்கிறது.

இந்த ஒரு நினைப்புத்தான் நம் பிழைப்பைக் கெடுப்பதாக இருக்கிறது.

யாரும் எதிர்த்துப் பேசினால் நமக்கு அப்டி ஒரு கோம் வருகிறது. அந்தாளை எப்படிக் காலுக்கு கீழே போட்டு மிதிக்கலாம் என்று கூட எண்ணத் தோன்றுகிறது.

நமக்குள் இருக்கும் இந்தத் தவறான நினைப்பைத் தூக்கி எறிந்தால் மற்றவர்கள் எதிர்த்துப் பேசினால் கூட அது நம்மைப் பாதிப்பது இல்லை.

கருத்துச் சுதந்திரம், அதை வெளிப்படுத்தும் சுதந்திரம், செயல் சுதந்திரம் ஆகியவற்றை மற்றவர்களுக்கு நாம் தராமல் இருந்தால் புழு பூச்சிகூட நம்மை ஒரு கட்டத்தில் எதிர்த்துப் பேசும்.

ஆக, நம்மைச் சுற்றியிருப்பவர்கள் நம்மை எதிர்த்துப் பேசாமல் இருக்க வேண்டுமானால் முதல் கட்டமாக அவர்களை மதிக்க வேண்டும் அல்லது ஒரு பொருட்டாகவாவது கருத வேண்டும். வெள்ளம் சேர்ந்து அணையை உடைத்துக் கொண்டு கட்டு மீறிப் பாய்வதற்குள் இயன்ற போதெல்லாம் மதகுகளைத் திறந்து அதைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ள வேண்டும். இதைச் சரிவரச் செய்தால் நம்மை எவருக்கும் எதிர்த்துப் பேசத் தோன்றாது.

நம்மீது மனக்குறை உள்ளவர்கள் நிரந்தரக் கோபம் உள்ளவர்களை நமக்கு நல்ல மனநிலை உள்ள போது அழைத்துப் பேச வேண்டும்.

வீட்டிற்கு நான்கு பேர் வந்திருக்கும் நேரம் பார்த்துக் குதிக்கும் மனைவி அல்லது கணவன் அல்லது மகனை, விருந்தினர் போன பின்பு அழைத்து நான்கு பேர் முன்பு இப்படி நடந்து கொள்வதால் என்னைவிட உனக்குத்தான் கேவலம் என்பதைப் புரிய வைக்க வேண்டும்.

எதுவாக இருந்தாலும் நமக்குள் இருக்கட்டும் என்பதைத் தெளிவுபடுத்திவிட்டால் அப்புறம் இப்பிரச்சினை எழாது. விடயம் கைமீறிப் போய் மற்றவர்களின் முன்னால் நம்மை எவரேனும் எதிர்த்துப் பேசிவிட்டால் அதன் மூலம் நாம் ரொம்பவும் கைதேர்ந்த நடிகன், நடிகையைப் போல் பாருங்க இந்தாளு பண்றதை ! என்பதைப் போல் ஒரு புன்னகையை உதிர்த்துவிட வேண்டும்.

இப்படிச் செய்வதில் இரண்டு நன்மைகள் இருக்கின்றன. முதலாவது மற்றவர் முன்னிலையில் நம்மை அவமானப்படுத்திவிட நினைத்த நம்மவரின் செயலுக்குத் தோல்விதான் மிச்சம் என்பது.

அடுத்ததாக மூன்றாவது நான்காவது மனிதர்களிடம் நான் இதனாலெல்லாம் பாதிக்கப்படவில்லை என்றும் என் ஆளை நான் உங்கள் மத்தியில் விட்டுக் கொடுக்க மாட்டேன் என்றும் சொல்லாமல் சொல்லிவிடும் செயலாகும்.

இவையெல்லாவற்றையும் விட ஒரு விடயம் முக்கியம். இவர் சொல்வது நம் நன்மைக்காகத்தான் என்பதை நாம் நம்ப வைத்துவிட்டால் அதையும் அன்பாகச் சொன்னால் நம்மை எதிர்த்து ஒரு பயல் கூடப் பேசமாட்டான் !

**லேனா தமிழ்வாணன்**


# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்

ஆசிரியர் : வி.சத்தியசீலன்

நேரம் : ஒரு மணித்தியாலம்


● *1, 2 ஆகிய வினாக்களில் மிகவும் நெருங்கிய தொடர்பு உள்ள உருச்சோடிக்குரிய அடைப்பைத் தெரிவு செய்க.*

01.



1 2 3


02



1 2 3

● *3, 4 ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள உருக்களுடன் மிக நெருங்கிய தொடர்புடைய சொற்கள் அடங்கிய விடையைத் தெரிவு செய்க*

03.



1. சமாதானம், வெற்றி
2. அதிர்ஷ்டம், சமாதானம்
3. சௌபாக்கியம், அலங்காரம்


04.




1. மழை, வெயில், பாதுகாப்பு
2. துணி, இரும்பு, விலை
3. நிறம், அழகு, கடை

● **5, 6 ஆகிய வினாக்களின் கோலத்திற்கேற்ப அடுத்துவரும் உருவைத் தெரிவு செய்க.**

05.



06.



● **வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

07. நற்செயல்கள் மனதிற்கு இன்பம் தருவது போல தீயசெயல்கள் மனதிற்கு .............................. தரும்.
1. மகிழ்ச்சி 2. பயம் 3. துன்பம்

08. பாடசாலைக்கு அதிபர் போல வங்கிக்கு ..............................
1. முகாமையாளர் 2. ஊழியர் 3. எழுதுநர்

09. கப்பல் துறைமுகம் எனின் ஆகாய விமானம் ..............................
1. தரை 2. விமானநிலையம் 3. நீர்

10. திங்கட்கிழமை, புதன்கிழமை, வெள்ளிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை .........
1. திங்கட்கிழமை 2. செவ்வாய்க்கிழமை 3. புதன்கிழமை

● **பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

*எங்கள் வீட்டு வானொலி*
*எனக்குப் பிடித்த வானொலி*
*செய்தி சொல்லும் வானொலி*
*சிறப்பு மிக்க வானொலி*

11. இப் பாடலில் அதிக தடவை இடம் பெற்றுள்ள சொல் எது?
1. செய்தி 2. வானொலி 3. எங்கள்

12. வானொலியில் சொல்லும் விடயம் எது?
1. சிறப்பு 2. வீடு 3. செய்தி

● *1,2,3 ஆகியவற்றிற்குப் பதிலாக A,B,C என்னும் எண்களைப் பயன்படுத்தி பின்வரும் கணிதச் செய்கைகளுக்குப் பொருத்தமான ஆங்கில எழுத்துக்களைத் தெரிவு செய்க.*

13. A + B = ...................... 1. B 2. C 3. A

14. C - A = ...................... 1. A 2. B 3. C


● 15, 16 ஆம் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

15. தோமஸ் அல்வா எடிசன் -- மின்குமிழ் எனின் லூயிபாஸ்ரர் ...................
1. தொலைபேசி 2. வானொலி 3. விசர்நாய்க்கடி மருந்து


16. மழைவீழ்ச்சி - வெள்ளப் பெருக்கு எனின் கடும் வெயில் ..................
1. வறட்சி 2. குளிர்ச்சி 3. புயற்காற்று

● **அடைப்புக்குள் இருக்கும் இரு கோலங்களையும் ஒன்றின் மீது ஒன்றாக வைக்கும் போது கிடைக்கும் உருக்களைத் தெரிவு செய்க.**

17.




18.




● **கோலத்திற்கு ஏற்ப வினாக்களில் வெற்றிடத்துக்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.**

19.



35 36 32

20.



1. 39
2. 36
3. 48

21. 'இருப்பத்தைந்தாயிரத்து எண்ணூற்று இருபத்தொன்று' என்னும் எண்ணில் உள்ள இலக்கங்களைப் பின்னாலிருந்து முன்னால் எழுதும் போது கிடைக்கும் எண் யாது?
1. 12825 2. 82125 3. 12852

22. ஒரு கடிகாரத்தின் மணித்தியால முள்ளும் நிமிட முள்ளும் செங்கோணத்தில் இருக்கும் இரு சந்தர்ப்பங்களில் உள்ள நேரங்களைக் காட்டும் விடை யாது?
1. 6.15 உம் 12.15 உம் 2. 3.00 உம் 9.00 உம் 3. 3.30 உம் 9.30 உம்

23. 2018 ஆம் ஆண்டு தை மாதம் 1ஆம் திகதி திங்கட்கிழமை எனின் அந்த வருடத்தில் உள்ள திங்கட்கிழமைகளின் எண்ணிக்கை?
1. 52 2. 53 3. 54

24. 2018 ஆம் ஆண்டு தை மாதம் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை எனின் அந்த வருடத்தில் உள்ள செவ்வாய்க்கிழமைகளின் எண்ணிக்கை?
1. 52 2. 53 3. 54

25. 452, 281, 532, 106, 375 இவ்வெண்களை இறங்கு வரிசைப்படுத்தும் போது நடுவில் வரும் எண் யாது?
1. 452 2. 375 3. 281

26. 31 நாட்களைக் கொண்ட மாதங்கள்?
1. தை, சித்திரை 2. தை, பங்குனி 3. பங்குனி, சித்திரை

27. நேற்று புதன்கிழமை எனின் நாளை மறுநாள் என்ன கிழமை?
1. செவ்வாய் 2. திங்கள் 3. சனி


28. சரியான கோவையைத் தெரிவு செய்க.
1. 6 x 5 - 3 = 33 2. 6 x 6 - 6 = 30 3. 4 x 6 ÷ 5 = 30

29. நான்கு மனிதர்கள் 3 நாட்களில் செய்யும் வேலையை இரண்டு மனிதர்கள் எத்தனை நாட்களில் செய்வார்கள்?
1. 12 2. 4 3. 6

30. ஐந்து மனிதர்கள் தமக்கிடையே வாழ்த்து மடல்களைப் பரிமாறிக் கொண்டனர் எனின் அங்கு பரிமாற்றப்பட்ட வாழ்த்து மடல்கள் எத்தனை?
1. 10 2. 20 3. 15

31. பத்தாவது ஒற்றை எண் யாது?
1. 21 2. 20 3. 19

32. உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை?




1. 6
2. 11
3. 18

33. 200 இன் கால்வாசியுடன் 25 ஐக் கூட்டினால் வரும் விடை யாது?
1. 50 2. 75 3. 100

34. 10 தொடக்கம் 20 வரையான எண்களை எழுதும் போது இலக்கம் 1 எழுதப்படும் தடவைகள்.
1. 9 2. 10 3. 11

35. பாடசாலைக்குக் கிழக்குத் திசையில் தபாலகம் உள்ளது. வைத்தியசாலைக்கு மேற்குத் திசையில் தபாலகம் உள்ளது. மத்தியில் இருப்பது எது?
1. தபாலகம் 2. வைத்தியசாலை 3. பாடசாலை

36. 1, 2, 3, 4 ஆகியவற்றிற்கு முறையே ○ □ △ ▭ எனும் தளவடிவங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்கேற்ப விடையாக அமைவது?



37. மெழுகுவர்த்தியொன்று எரிந்து அணைவதற்கு 20 நிமிடங்கள் எடுக்கும் அவ்வாறான 10 மெழுகுவர்த்திகள் ஒரே நேரத்தில் ஏற்றப்படுமாயின் அவை அனைத்தும் அணைவதற்கு எடுக்கும் நேரம் என்ன?
1. 20 நிமிடம் 2. 200 நிமிடம் 3. 10 நிமிடம்

38. என்னிடம் நான்கு பேனைகள் உள்ளன. மாலாவிடம் என்னிடம் உள்ள பேனையைப் போன்று 5 மடங்கு பேனைகள் உள்ளன. இருவரிடமும் உள்ள பேனைகளின் முழுத் தொகையாது?
1. 21 2. 22 3. 24

39. கதிர்காமம் 127853 என எழுதினால் கொடிகாமம் எழுதப்படுவது?
1. 96853 2. 12785 3. 95850

40. முதலாவது எழுத்து கத்தியில் உண்டு மத்தியில் இல்லை.
இரண்டாம் எழுத்து மரத்தில் உண்டு மறத்தில் இல்லை.
மூன்றாம் எழுத்து கம்பியில் உண்டு கப்பியில் இல்லை.
இச் சொல்லாக அமைவது?
1. கத்தி 2. மரம் 3. கரம்

## வினாத்தாள் பகுதி – II

நேரம் : இரண்டு மணித்தியாலம்

*01. பின்வரும் பந்தியை வாசித்து அதிலிருந்து வினாக்களுக்கு விடை எழுதுக.*

**காந்தியடிகள் தமக்கென வாழாது பிறருக்காக வாழ்ந்த உத்தமர்களுள் ஒருவர். இவர் வட இந்தியாவிலுள்ள குஜராத் மாநிலத்தில் போர்பந்தர் என்னும் கிராமத்தில் 1869ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இரண்டாம் திகதி பிறந்தார். பெற்றோர் இவருக்கு மோகனதாஸ் காந்தி என்று பெயரிட்டனர். காந்தி என்பது குடும்பப் பெயராகும். இவர் தனது ஆரம்பக் கல்வியை உள்ளூரிலேயே பெற்றுக்கொண்டார்.**

1. காந்தியடிகள் பிறந்த ஊர் எது? ..........
2. இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் யாது? ..........
3. பந்தியில் தாய், தந்தையரைக் குறிக்கும் சொல் யாது ? ..........
4. இடப்பெயர் ஒன்றை எழுதுக? ..........
5. வெளியூர் என்பதன் எதிர்ச்சொல் எது? ..........
6. உயர்திணை இறந்தகால வினைமுற்று எது? ..........

*02. பின்வரும் சொற்களில் உள்ள உயிர்க்குறிகளின் பெயர்களை எழுதுக.*

1. நுட்பம் ..........
2. சூழல் ..........
3. சுத்தம் ..........

*03. அடைப்புக்குள் உள்ள சொற்களிலே சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லைத் தெரிவு செய்து கோடிடுக.*

1. உணவு உண்ண முன் .......... (சவுக்காரம்/ சவர்க்காரம்) கொண்டு கைகழுவுதல் வேண்டும்.
2. நண்பர்கள் .......... (தேனீர்/ தேநீர்) விருந்தில் கலந்து கொண்டனர்.
2. அடிக்கடி .......... (காச்சல் / காய்ச்சல்) ஏற்படுவது உடல் நலக்குறைவினால் எனலாம்.

*04. பின்வரும் பழமொழிகளின் கருத்துக்களை எழுதுக.*

1. அடாது செய்பவர் படாது படுவர்.
..........
2. ஆற்றிலே போட்டாலும் அளவறிந்து போடு.
..........

*05. பின்வரும் வாக்கியங்களை இலக்கண முறையில் எழுதுக.*

1. ஒவ்வொரு பழமும் சுவையானவை ..........
2. நாட்டார் பாடல்கள் இனிமையானது ..........

*06. சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.*

1. அனாகரீகம் – அநாகரீகம் – அநாகரிகம் – அனாகரிகம்
2. ஆழிப்பேரலை – ஆலிப்பேரலை – ஆழிப்பேறலை – ஆழிப்பேரளை

*07. பின்வரும் பழமொழிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக.*

1. உயர உயரப் பறந்தாலும் ..........
2. அளவுக்கு மிஞ்சினால் ..........

*08. பின்வரும் வாக்கியத்தை எதிர்பாற் சொல்லாக மாற்றி எழுதுக.*

1. முடத்தி கால் இடறி விழுந்தாள்.
..........
2. தம்பி வேலைக்ளை முடித்தாள்.
..........

*09. மரபுத் தொடரின் கருத்தை எழுதுக.*

1. கண்திறத்தல் ..........
2. வாட்சாட்டம் ..........

*10. ஒவ்வொரு படத்துக்கும் பொருத்தமான ஆங்கிலப் பெயரை எழுதுக.*

 ..........  ..........

*11. பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.*

1. Good Morning ..........
2. Please come here ..........

*12. பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.*

பிறந்த நாள் வாழ்த்துக்கள் ..........

*13. ஒவ்வொரு படத்துக்கும் பொருத்தமான சிங்கள உச்சரிப்பைத் தமிழில் எழுதுக.*

 ..........  ..........

*14. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக.*

புத்தகம் தாருங்கள் ..........

- *பின்வரும் வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.*



1. அ ப்பி பாசலட்ட யமு ..........
2. பாடம கியள (Dh) தென்ன ..........


- *பின்வரும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.*

'நான் சென்ற கல்விச் சுற்றுலா' (ஐந்து சொற்களுக்கு குறையாமல் எழுவாய், பயனிலை இயைபாக இருத்தல் வேண்டும்.)

1. ..........
..........
2. ..........
..........
3. ..........
..........

- *தரப்பட்ட வெற்றிடத்தில் விடையை எழுதுக.*

1. ஒன்பதாயிரத்து தொண்ணூற்றொன்பது என்பதை இலக்கத்தில் எழுதுக?
..........
2. அடுத்து வரும் எண்களை எழுதுக.
**3070, 3080, 3090,** .......... , ..........
3. 
இவ்வுருவின் உள்ளே உள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை எத்தனை?
..........
4. 
இவ்வுருவை அமைக்கத் தேவையான சம நீளமான ஈர்க்குகளின் எண்ணிக்கை யாது?
..........
5. பென்சிலின் நீளம் யாது?




.......... CM

6. அண்ணனிடம் 88 எள்ளுருண்டைகள் உள்ளன. தம்பியிடம் 62 எள்ளுருண்டைகள் உள்ளன. தம்பியிடம் உள்ள எள்ளுருண்டைகளின் எண்ணிக்கை சமமாவதற்கு அண்ணா தம்பிக்கு எத்தனை எள்ளுருண்டைகள் கொடுக்கப்பட வேண்டும்.
..........

## லசந்த கொலை! சந்தேக நபர்களுக்கு மே1 வரை மறியல்

# ஆட்சி மாறிய பின் குற்றவாளிக் கூண்டில் ஏற விரும்பவில்லை என்கிறார் விசாரணை அதிகாரி

(கொழும்பு)

சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பிலான விவகாரத்தில் விளக்கமறியலில் உள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரசன்ன நாணயக்கார, முன்னாள் பொலிஸ்மா அதிபர் ஜயந்த விக்கிரமரத்ன, முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் தொடர்புபட்டிருப்பதாக குற்றப் புலனாய்வுப் பிரிவு சந்தேகிப்பதாகவும், அதனால் அது குறித்த விசாரணைகள் தொடர்வதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவு நேற்று முன்தினம் கல்கிசை நீதிவானுக்கு அறிவித்தது.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரசன்ன நாணயக்காரவுக்கு பிணை கோரி நேற்று முன்தினம் அவரது சட்டத்தரணி (ஜனாதிபதி சட்டத்தரணி) அனுர மெத்தகொடவினால் கல்கிசை பிரதான நீதவான் மொஹம்மட் மிஹால் முன்னிலையில் ஒன்றரை மணிநேர வாதம் முன்வைக்கப்பட்ட நிலையில், பிணை கோரிக்கைக்கு எதிர்ப்பு வெளியிட்டு பிரதான விசாரணை அதிகாரியான பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வா நீதவானுக்கு பதிலளிக்கும் போதே மேற்படி விடயம் வெளிப்படுத்தப்பட்டது.

விளக்கமறியலில் உள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரசன்ன நாணயக்காரவுக்கு பிணை வழங்குவதா? இல்லையா? என்பது குறித்து எதிர்வரும் மே முதலாம் திகதி அறிவிப்பதாக கூறிய நீதவான் மொஹம்மட் மிஹால், அதுவரை அவரையும் இவ்வழக்கின் இரண்டாவது சந்தேக நபரான பொலிஸ் பரிசோதகர் திஸ்ஸ சுகந்தபாலவையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

நேற்று முன்தினம் இது குறித்த வழக்கு விசாரணைக்கு வந்த போது, குற்றப் புலனாய்வுப் பிரிவு சார்பில் மன்றில் ஆஜராகியிருந்த குற்றப் புலனாய்வுப் பிரிவின் உதவி பொலிஸ் அத்தியட்சகர் திசேரா, விசாரணைப் பொறுப்பதிகாரியான பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வா ஆகியோர் மேலதிக விசாரணை அறிக்கையொன்றினை மன்றில் சமர்ப்பித்த நிலையில் கொலையாளிகளைத் தேடி பல்முனை விசாரணைகள் தொடர்வதாக நீதவானுக்கு அறிவித்தனர்.

இதன்போது மன்றில் கருத்து தெரிவித்த உதவி பொலிஸ் அத்தியட்சகர் பீ.ஏ. திசேரா, இராணுவத்தின் 112 ஆவது பிரிகேட் தொடர்பிலான விசாரணைகள் தற்சமயமும் தொடர்கிறது. மேலதிகமாக மூன்று இராணுவத்தினரின் வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டது.

இதனைவிட லசந்த விக்கிரமதுங்கவுடன் சேவையாற்றிய நிர்மலா கண்ணங்கர எனும் ஊடகவியலாளரின் வாக்கு மூலத்தை நாம் பதிவு செய்தோம். அதன் போது அவர், லசந்த கொலை செய்யப்பட்ட போது ஸ்தலத்துக்கு தான் சென்றதாகவும் அப்போது அங்கிருந்த லசந்தவின் காருக்குள் அவரது குறிப்புப் புத்தகத்தை அவதானித்ததாகவும், பின்னர் அது தொடர்பில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரசன்ன நாணயக்காரவிடம் வினவிய போது ஒரு செவிமடுக்கும் கருவி மட்டுமே இருந்ததாக கூறியதாகவும் குறிப்புப் புத்தகம் இருக்கவில்லை என பதிலளித்ததாகவும் தெரிவித்தார்.

இதனால் அப்போது இருந்தே சந்தேக நபர் குறிப்புப்புத்தகம் தொடர்பிலான தகவல்களை ஏதோ காரணத்துக்காக மறைக்கின்றார். இந்நிலையில் பிணை சட்டத்தின் விதி விவாதங்களுக்கு அமைவாக சந்தேக நபரின் விளக்கமறியலை நீடிக்கவும் என கோரினார்.

இதனையடுத்து பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரசன்ன நாணயக்கார சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி அனுர மெத்தெகொட விஷேட பிணை கோரிக்கையை முன்வைத்தார்.

"எனது சேவை பெறுநர் கடந்த பெப்ரவரி 13 ஆம் திகதி முழு நாளும் விசாரிக்கப்பட்டு அன்று இரவு 10.45 மணிக்கு கைது செய்யப்பட்டார். மறுநாள் மன்றில் ஆஜர் செய்யப்பட்டமை முதல் இன்றுவரை விளக்கமறியலில் இருந்து வருகின்றார். சுமார் இரண்டரை மாதம் அவர் விளக்கமறியலில் இவ்வாறு காலம் கழிக்கின்றார்.

ஏற்கனவே நான் முன்வைத்த இரு பிணை கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. காரணம் குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகள் நிறைவடையவில்லை எனவும், சாட்சிகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம் எனவும் கூறிய விடயங்களை மையப்படுத்தியே பிணை நிராகரிக்கப்பட்டன. எனது சேவை பெறுநருக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் எவ்வித சாட்சியங்களும் இல்லை. அக்குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை.

லசந்த கொலை உட்பட அக்காலப்பகுதியில் இடம்பெற்ற பல்வேறு கொலைகளை யார் செய்தார்கள் என்பது முழு நாட்டுக்கும் தெரியும். அது இரகசியமல்ல. இது தொடர்பில் அப்போதிருந்த முன்னணி இராணுவ தலைவர்கள் செய்த சதி, நடவடிக்கைகள் தொடர்பில் ஊடகங்கள் எழுதியுள்ளன. எனவே அது குறித்து யாருக்கும் ஊகித்துக்கொள்ள முடியும்.

லசந்தவின் குறிப்புப் புத்தகம் தொடர்பிலும், பொலிஸ் புத்தக பதிவுகள் மாற்றப்பட்டமையும் எனது சேவை பெறுநரின் ஆலோசனைக்கமைய செய்யப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வுப் பிரிவு கூறுகின்றது. எனினும் அது தொடர்பில் பெறப்பட்ட சாட்சியாங்களில் ஒன்றில்கூட எனது சேவை பெறுநரின் பெயர் குறிப்பிடப்படவில்லை.

அத்துடன் லசந்தவின் பிரேத பரிசோதனைகளை முன்னெடுத்த வைத்தியர் சுனில்குமாரவும் எனது சேவை பெறுநரும் உறவினர்கள் என்பதை மையப்படுத்தி சாட்சியங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம் என்கிறது சி.ஐ.டி. ஆம், சுனில்குமார, எனது சேவை பெறுநரின் மனைவியின் உறவினர். அவருடன் எனது சேவை பெறுநர் தொடர்பில் உள்ளார். உறவினர்களுடனான உறவு பிணை வழங்க தடையில்லை.

அத்துடன் தற்போது சுனில் குமார வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை பொய் என நிரூபணமாகியுள்ளது. விஷேட வைத்திய நிபுணர் மொஹான் டி சில்வாவின் அறிக்கை ஊடாகவும், சட்ட வைத்திய அதிகாரி அஜித் தென்னகோன் தலைமையிலான மூவர் கொண்ட குழுவின் அறிக்கை ஊடாகவும் அது உறுதியாகியுள்ளது. எனவே சுனில் குமாரவுடனான தொடர்பாடல் விசாரணைகளுக்கு பாதிப்பாக அமையப்போவதில்லை.

எனவே அடிப்படையற்ற விடயங்களை நிராகரித்து 1997 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க பிணை சட்டத்தின் 14 ஆம் அத்தியாயத்தை அடிப்படையாக கொண்டு சந்தேக நபருக்கு பிணை வழங்குமாறு கோருகின்றேன் என்றார்.

இதனையடுத்து பிணை கோரிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து பிரதான விசாரணை அதிகாரி நிசாந்த சில்வா கருத்துக்களை முன்வைத்தார்.

"லசந்தவின் கொலை இடம்பெற்ற 2009.01.08 ஆம் திகதிக்கும் 2015 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதிக்கும் இடையில் சட்டத்தின் ஆட்சி எந்தளவில் இருந்தது என்பது எலோருக்கும் தெரியும். இக்காலப்பகுதியில் சி.ஐ.டி.க்கு கையளிக்கப்பட்ட விசாரணைகளில் சி.ஐ.டி. லசந்தவை பின் தொடர்ந்த 5 தொலைபேசிகளை தொலைபேசி கோபுர தகவல்களுக்கு அமைய கண்டறிந்தனர். அவை இராணுவ புலனாய்வுப் பிரிவுக்கு சொந்தமானது என்பதையும் அவர்கள் வெளிப்படுத்தினர்.

இவ்வாறான பின்னணியில் அந்த விசாரணைகள் உடனடியாக அப்போதைய பொலிஸ்மா அதிபர் மகிந்த பாலசூரியவுக்கு ஏற்பட்ட சி.ஐ.டி மீதான திடீர் காதலால், சி.ஐ.டி.க்கு வேலை பளு அதிகம் எனக் கூறி, லசந்த, கீத் நொயார், உபாலி தென்னகோன் தொடர்பிலான விசாரணைகள் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவுக்கு அவரால் மாற்றப்பட்டன.

அதன் பின்னர் அது தொடர்பிலான விசாரணைகள் அப்போதைய பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் பிரதானி பிரதிப் பொலிஸ்மா அதிபர் சந்ர வாகிஷ்ட, உதவி பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன அல்விஸ் உள்ளிட்ட குழுவினரால் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது 11 இராணுவத்தினர் அவசரகால சட்டத்தில் கைது செய்யப்பட்டு 6 நாட்களில் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். அது குறித்து நீதிமன்றுக்கு கூட அறிவிக்கப்படவில்லை.

2015 செப்டெம்பரில் நாம் இந்த விசாரணையைப் பொறுப்பேற்ற போது முதலில் ஏற்கனவே செய்யப்பட்ட அனைத்து விசாரணைகளையும் ஆராய்ந்தோம். அதன் பின்னரே விசாரணைகளை ஆராய்ந்தோம். அதன்படியே முதலாம் சந்தேக நபரான பிணையில் உள்ள உடலகமவை கைது செய்தோம். அவர் லசந்தவின் சாரதியை கடத்திச் சென்று, லசந்தவை கோத்தாவே கொன்றார் எனவும் மிக் விமான கொள்வனவு தொடர்பிலான விவகாரம் தொடர்பில் எழுதியமையே காரணம் எனவும் கூறுவதை நிறுத்துமாறு அச்சுறுத்தியுள்ளார்.

நாம் அரசியல் தேவைக்காக விசாரணை செய்யவில்லை. அவ்வாறு செய்தால் அரசாங்கம் மாறியவுடன் நாமும் இந்த சந்தேக நபரான பொலிஸ் அதிகாரிகளைப் போன்று குற்றவாளிக் கூண்டில் நிற்போம் என்பது எமக்கு தெரியும்.

லசந்தவின் குறிப்புப் புத்தகத்தை பொலிஸ் பரிசோதகர் வீரசிங்கவே மீட்டுள்ளார். அதனை அவர் அப்போது கல்கிஸை குற்றவியல் பொறுப்பதிகாரி, தற்போதைய 2 ஆம் சந்தேக நபர் சுகந்தபாலவிடம் விசாரணைகளுக்காக கொடுத்துள்ளார்.

இந் நிலையில் தான் 2009.01.16 விடுமுறையில் இருந்து திரும்பிய 3 ஆவது சந்தேக நபர் நாணயக்கார அந்த புத்தகம் உள்ளிட்ட சாட்சியங்களை மாற்ற அவருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

முன்னாள் பொலிஸ்மா அதிபர் விக்கிரமரத்ன கோரியே லசந்தவின் குறிப்புப் புத்தகம் கைமாறியுள்ளது. அப்போது இது கோத்தாவின் வேலை எனவும் அதனால் விளக்கமறியலில் உள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரசன்ன நாணயக்கார, முன்னாள் பொலிஸ்மா அதிபர் ஜயந்த விக்கிரமரத்ன, முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை, அதனுடன் தொடர்புடைய சாட்சி அழிப்பு உள்ளிட்ட நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டிருப்பதாக சந்தேகிக்கின்றோம்.

அதனாலேயே இந்த விடயத்தில் விடயம் அறிந்தவர்களின் வாக்கு மூலங்களை மையப்படுத்தி விசாரணைகளை முன்னெடுக்கின்றோம்.

மூன்றாம் சந்தேக நபர் உயர் பொலிஸ் அதிகாரியாக இருந்தவர் என்ற ரீதியில் அவருக்கு பொலிஸ் திணைக்களத்துக்குள் செல்வாக்கு உள்ளது. எனவே அவர் பிணையில் இருப்பின் விசாரணைகளுக்கு பாதிப்பு ஏற்படும். எனவே பிணை வழங்க வேண்டாம் என்றார்.

வாதங்களை செவிமடுத்த நீதிவான் பிணை தொடர்பில் எதிர்வரும் மே 1 ஆம் திகதி அறிவிப்பதாக தெரிவித்து அதுவரை சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (இ-7)

# செய்தித்துளிகள்

## சித்திரைத்தேர் வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டி இனிச்ச புளியடி முருகன் திருக்கோவில் புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் அருளாசிகளுடன் ஆரம்பமாகும். மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் தேர்த் திருவிழா இடம்பெறும். (இ)

## இந்தப் பிரதமரின் கீழ் பதவி வகிக்க முடியாது

### -முன்னாள் பிரதமரின் மகன்-

(கொழும்பு)

இந்தப் பிரதமரின் கீழ் பதவி வகிக்க முடியாது என முன்னாள் பிரதமர் டி.எம். ஜயரட்னவின் மகன் அனுராத ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

அண்மையில் பதவிகளை இராஜினாமா செய்த 16 சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களில் சிலர் மீளவும் இணைந்து கொள்ளவுள்ளதாக வெளியான தகவல்கள் குறித்து அனுராத ஜயரட்னவிடம் கொழும்பு ஊடகமொன்று கேள்வி எழுப்பியிருந்தது.

இந்தக் கேள்விக்கு பதிலளித்த போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## போதைப்பொருட்களுடன் 7 பேர் பொலிஸாரால் கைது



(ஹற்றன்)

ஹற்றன் மற்றும் கொட்டகலை பகுதிக்ளில் கேரள கஞ்சா மற்றும் ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்த ஏழு பேர் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டதாக ஹற்றன் கலால் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஹற்றன் குடாகம, கொட்டகலை, டிக்கோயா ஆகிய பகுதிகளில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது கேரள கஞ்சா 5200 மில்லி கிராமுடன் 2 பேரும், ஹெரோயின் போதைப் பொருள் 1220 மில்லி கிராமுடன் 5 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-7)

## க.பொ.த.(சா/த)-விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் இருந்து க.பொ.த. (சா/த)-2018 இல் இரண்டாம் தடவையாக தோற்றும் மாணவர்கள் அதிபர் அலுவலகத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி 2018-05-04ம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

விண்ணப்பதாரிகள் பாடசாலைக்கு சமுகமளிக்கும் போது பின்வரும் விடயங்களை கவனத்தில் கொள்ளவும் என அதிபர் அறிவித்துள்ளார்.

1.தேசிய அடையாள அட்டை

2.க.பொ.த.(சா/த)-2017 இல் தோற்றிய சுட்டெண்

3.பாடசாலைச் சீருடை என்பனவாகும். (இ)

## போலி 5000 நாணயத்தாளுடன் அம்பாறையில் இருவர் கைது!

(கொழும்பு)

போலி 5000 ரூபா நாணயத்தாள்களுடன் அம்பாறை தமன பிரதேசத்தில் நேற்று முன்தினம் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை தமன பிரதேசத்தில் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவர்களிடம் பொலிஸார் மேற்கொண்ட சோதனையின் போது அவர்களிடம் போலி 5000 ரூபா நாணயத்தாள்கள் 14 இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து பொலிஸார் அவர்களை கைது செய்துள்ளனர். இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை அம்பாறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# கயிலாச யாத்திரை

## ஓர் அனுபவப் பகிர்வு 30

பரமசாமி பஞ்சாட்சரம்

வண்டி செல்லச் செல்ல கயிலைக் காட்சி அற்புதமாய் இருந்தது. மெய்சிலிர்க்கப் பார்த்துக்கொண்டே வந்தேன். சிறிது தூரம் சென்றதும் ஒரு குளம் தெரிந்தது.

ஆஞ்சநேயர் குளம் 9.08.14

வெள்ளிக்கிழமை அன்று நாங்கள் பேருந்தில் வரும் போது சூரியனைச்சுற்றி ஆகாயத்தில் இரு வானவில்களைக் கண்டோம். இது அபூர்வமாக இருந்தது. இப்படியான சூரியனைச்சுற்றிய வானவில்லை நாம் முன்னர் பார்க்கவில்லை. ஆகவே இது எந்த இடம் என்று விசாரித்த போது இதுதான் ஆஞ்சநேயர் குளம் என்று சீன வழிகாட்டுபவர் தெரிவித்தார்.

கயிலைக்கு ஆஞ்சநேயர் வரும் வேளை இங்கு நீராடிச் செல்வார் என்று நம்புவதாக பின் அறிந்தோம்.

'சிறிது தூரம் சென்றதும் தர்ச்சன் என்னும் கிராமம் வந்தது. நாங்கள் தர்ச்சன் விருந்தினர் விடுதியில் இரவு தங்கினோம். எங்கள் குழுவில் இருப்பவர்களுக்கு அவர்கள் தங்கும் அறைகள் அருகருகே கிடைக்கும்படி ஒழுங்கு செய்தார்கள். இதனால் நாம் அடிக்கடி சந்தித்துக் கலந்து ஆலோசிப்பதற்கும் சில பொருள்களைப் பகிர்ந்து பாவிக்கவும் வாய்ப்பு இருந்தது.

ஒன்பதாம் நாள் 10.08.14 தர்ச்சன் ஞாயிற்றுக்கிழமை- 4600மீ.

தர்ச்சன் ஒரு சிறிய கிராமம் கயிலாயமலையின் அடிவாரத்திலுள்ள சமதரையில் இருக்கின்றது. இங்குதான் பரிக்கிரமா செல்வதற்கு அனுமதிப் பத்திரம் வழங்குவார்கள். பரிக்கிரமா செல்ல இயலாதவர்களை இங்கு தங்கவைப்பார்கள். எங்கள் குழுவிலிருந்து இருவரை (மற்றவர்கள் பரிக்கிரமாவை நிறைவு செய்து வரும் வரை) இங்கு தங்கவைத்தார்கள்.

தர்ச்சன் விருந்தினர் விடுதியில் ஞாயிற்றுக்கிழமை காலை உணவைநிறைவுசெய்துகொண்டு கயிலாயக் கிரிவலம் (பரிக்கிரமா) செய்வதற்குரிய ஆயத்தங்களுடன் பேருந்திற் புறப்பட்டோம். செல்லும் வழியில் தீர்த்தபுரி செல்லும் பாதையை எங்களுக்குக் காட்டினார்கள்.

தீர்த்தபுரி சுடு நீர் ஊற்று




தீர்த்தபுரி சுடுநீர் ஊற்று தர்ச்சனில் இருந்து 60 கி.மீ. தூரத்தில் உள்ளது.

கயிலாய மலையின் தெற்கு முகம்.

தீர்த்தபுரியிலிருந்து இரண்டு கி.மீ. தெற்கு நோக்கிச் செல்ல கயிலையைத் தரிசனம் செய்யும் இடம் வரும், இங்கு கயிலைநாதரின் தெற்கு முகத்தோற்றம் வெகு அண்மையில் தெரியும். இந்த இடத்திற்கு வாகனத்திலே செல்லலாம்.

இத் தோற்றத்தைக் காண்பதற்குப் பக்தர்கள் வாகனங்களிற் கூட்டம் கூட்டமாக வந்து அங்கு கோமம் வளர்த்துப் பூசை செய்து தரிசனம் செய்கிறார்கள். சிலர் கூட்டுப் பிரார்த்தனை செய்வதையும் காணலாம்.

கயிலை நாதனின் தெற்கு முகத்தின் மேற்பகுதியைப் பார்க்கும் போது இதோ எதிரே கயிலைநாதன் எழுந்தருளி இருக்கின்றார். உனக்கு என்ன வேண்டும் என்று கேட்பது போல இருந்தது. ஏனென்றால் அங்கு சிவன் மிக அருகில் நெற்றிக் கண்ணோடு காட்சி தருகின்றார். அந்தக் கணம் வாழ்வின் மறக்கமுடியாத தருணங்களிலே இதுவும் ஒன்று என நினைத்தேன். இப் பார்வையைக் குறிப்பிடுகையில் சிவன், தட்சணாமூர்த்தியாக (ஆதி குரு) காட்சி தருகிறார் என்கிறார் சுவாமி பிரணவானந்தா.

கயிலாச மலையின் தெற்குப் பக்க முழுப் பார்வையும் அகோரமான அழித்தல் தொழிலைச் செய்யும் சிவனாகக் காட்சி தருகின்றார் என்கிறார் சுவாமி பிரணவானந்தா.

நந்தி தேவரும் நந்தி வீதியும்

சிலாத முனிவருக்கும் சித்திராவதியாருக்கும் நந்தியெம் பெருமான் பிள்ளையாகப் பிறந்த சகல கலைகளையும் கற்று பின் தவமிருந்து சிவ பெருமானிடம் வரங்களையும் சில பொறுப்புகளையும் பெற்றார்.

நந்தி என் றால் மகிழ்ச்சி என்னும் பொருள் படும். இவரின் முதற் பொறுப்பு சிவனுக்கு முன் இருந்து காவல் புரிவதாகும். இவரை நந்திதேவர் என்றும் அழைப் பார்கள். இவர் சித்தர்கள் அனைவருக்கும் தலைவரும் ஆவர்.

(தொடரும்)



யாழ். பிராந்திய மலேரியா தடை இயக்கத்தினால் சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் நேற்றுக் காலை விழிப்புணர்வு வீதி நாடகம் இடம்பெற்றது. (படங்கள்: சாவகச்சேரி செய்தியாளர்)

## பேருந்தில் உயிரிழந்த பயணி

கொழும்பில் இருந்து ராகம நோக்கி பேருந்தில் பயணித்த பெண் ஒருவர் ஆசனத்திலேயே உயிரிழந்துள்ளார். குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கொழும்பில் இருந்து ராகம நோக்கிப் பயணித்த பேருந்து இரவு 7.30 மணியளவில் ராகம பிரதேசத்தை நெருங்கியுள்ளது. எனினும் குறித்த பெண் பேருந்திலிருந்து இறங்காமல் ஆசனத்திலேயே அமர்ந்திருந்துள்ளார். இதனை அவதானித்த நடத்துநர் அவர் உறங்கி விட்டதாக எண்ணி அவரை எழுப்ப முயற்சித்துள்ளார். எனினும் அவர் எழுந்திருக்காத காரணத்தினால் உடனடியாக 119 என்ற அவசர இலக்கத்திற்கு அழைத்து அம்புலன்ஸ் ஒன்றை வரவழைத்துள்ளார். பின்னர் பயணியை பரிசோதித்த வைத்தியர் அவர் உயிரிழந்து விட்டதாகத் தெரிவித்தார். (இ)

# பொலிஸ் நிலையம் மீது தாக்குதல்
# தலைமறைவான மூவரும் பொலிஸில் சரண்

(கதிர்காமம்)

கதிர்காமம் பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டமை தொடர்பாக மூன்று மாத காலமாக தேடப்பட்டு வந்த கதிர்காமம் பிரதேச சபைத் தவிசாளர் உள்ளிட்ட மூவர் திஸ்ஸமஹாராமை நீதவான் நீதிமன்றத்தின் நீதிபதி முன்னிலையில் நேற்று சரணடைந்துள்ளனர்.



சரணடைந்த குறித்த மூவரையும் திஸ்ஸமஹாராமை நீதவான் நீதிமன்ற நீதிபதி உதயங்கனி ராஜபக்ஷ எதிர் வரும் மே மாதம் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார்.

கதிர்காமம் பிரதேச சபைத் தலைவர் சானக்க அமில ரங்கன , பிரபாத் புத்திக்கர, பிரபாத் சன்ஜய ஆகியோரே நீதிமன்றத்தில் சரணடைந்த பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் 21ஆம் திகதி இரவு கதிர்காமத்தைச் சேர்ந்த பதிரனகே நிரோஷன் என்பவர் மோட்டார் சைக்கிளில் செல்லும் போது பொலிஸாரால் மோட்டார் சைக்கிளை நிறுத்துமாறு கோரப்பட்ட போதிலும் பொலிஸாரின் கோரிக்கையை ஏற்காமல் சென்றதால் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இந் நிலையில் குறித்த நபர் ஸ்தலத்திலேயே பலியானார்.

குறித்த சம்பவத்தால் ஆத்திரமடைந்த பிரதேச மக்கள் கதிர்காமம் பொலிஸ் நிலையத்தை தாக்கியதுடன் பொலிஸாருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களையும் மேற்கொண்டிருந்தனர்.

இச் சம்பவத்தையடுத்து பொலிஸாரால் ஏற்கனவே மூவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டமை தொடர்பாக மேலும் மூவர் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த நிலையில் குறித்த மூவரும் தலைமறைவாகியிருந்தனர்.

கடந்த 3 மாத காலமாக தலைமறைவாகியிருந்த மூவருமே இவ்வாறு நேற்று சரணடைந்துள்ளனர். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 40 | 50 | 45 | 60 | 70 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 68 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 50 | 40 | 50 | 45 | 80 | 60 |
| தக்காளி | 30 | 40 | 30 | 15 | 80 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 50 | 35 | 40 | 40 |
| கோவா | 30 | 40 | 50 | 30 | 60 | 60 |
| கரட் | 80 | 100 | 100 | 80 | 160 | 80 |
| பூசணி | 30 | 20 | 40 | 15 | 60 | 50 |
| புடோல் | 80 | 60 | 70 | 30 | 80 | 70 |
| வாழைக்காய் | 40 | 40 | 50 | 40 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 160 | 160 | 150 | 160 | 200 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 60 | 60 | 60 | 80 | 100 |
| பாகற்காய் | 120 | 120 | 100 | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 50 | 35 | 120 | 80 |
| கருணைக்கிழங்கு | 60 | 100 | 40 | - | 80 | 60 |
| பயற்றங்காய் | 100 | 100 | 70 | 80 | 80 | 100 |
| லீக்ஸ் | 150 | 200 | 200 | 110 | 240 | 120 |
| பீற்றூட் | 40 | 40 | 40 | 15 | 60 | 40 |
| கறிமிளகாய் | 100 | 60 | 60 | 20 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 300 | 250 | 250 | 200 | 280 | 500 |
| போஞ்சி | 120 | 200 | 100 | - | 200 | 120 |
| கத்தரித்தும்பிள | 40 | 20 | - | - | 50 | 60 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 50 | 20 | 40 | 35 |
| தேசிக்காய் | 250 | 250 | 280 | 200 | 200 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 75 | 30-55 | 60-75 | 80 |
| இராசவள்ளி | 180 | 200 | 120 | - | 160 | 120 |
| வெங்காயப்பூ | - | - | - | - | - | - |
| முள்ளங்கி | 40 | - | - | 15 | 80 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 10 | 30 | 35 |
| வல்லாரை | 15 | - | 20 | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | - | - | - | - | 80 | - |

# சித்திரை மாத இராசி பலன்கள்

## 14.04.2018-14.05.2018



விளம்பி வருடம் சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி லாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம் தான். அவரோடு 3, 10 ஆகிய இடங் களுக்கு அதிபதியான செவ்வாயும் இணைந்து சஞ்சரிக்கின்றார். சனி விரயாதிபதியாகவும் இருப்பதால் விரயத்திற்கேற்ற இலாபம் வந்து கொண்டே இருக்கும். வீடு வாங்க வேண்டுமானாலும், விவாகம் செய்ய வேண்டுமானாலும், தொழில் தொடங்க வேண்டுமானாலும் நல்ல காரியங்கள் எதைச் செய்வதானாலும் செய்வதற்குரிய பொருளாதாரநிலை முன்னதாகவே கிடைத்துவிடும்..

9 இல் சஞ்சரிக்கும் குரு வக்ரம் பெற்றிருந்தாலும் அதன் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் தாமதப்பட்ட காரியங்கள் தடையின்றி நடைபெறும். சேமிப்பு உயரும். திடீர், திடீரென நல்ல மாற்றங்கள் வந்து சேரும். கல்யாண வாய்ப்புகள் கைகூடும். நீண்ட நாட்களாகப் பேசி, பேசி விட்டுப் போன வரன்கள் மீண்டும் வந்து நிச்சயதார்த்த திகதி வைத்துக்கொள்ள உறுதியளிக்கும். உற்றார், உறவினர்களின் ஒத்துழைப்போடு நல்ல காரியங்கள் பலவும் நடைபெறும். தொழில் வெற்றி நடை போடும்.

12இல் கேதுவும் 6இல் ராகுவும் சஞ்சரிக்கின்றார்கள். மறைந்த ராகுவால் நிறைந்த தனலாபம் கிடைக்குமென்றாலும் 12இல் கேது இருப்பதால் குடும்பச்சுமை கூடுதலாக இருக்கும். நண்பர்களின் அன்புத்தொல்லைக்கு ஆளாகி வீண் பழிகளை ஏற்கும் சூழ்நிலையும் உருவாகலாம். ஞானகாரகன் கேது 12இல் இருப்பதால் ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். முன்னோர்கள் செய்த ஆலயத் திருப்பணிகளை முன்னின்று நடத்த முன்வருவீர்கள்.

பஞ்சம அஷ்டமாதிபதியான புதனோடு சந்திரன் இணைந்து 2 ஆம் இடத்தில் உலா வருவதாலும் சகாய ஸ்தானத்தில் சூரிய சுக்ர சேர்க்கை இருப்பதாலும் விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்திணைவர். வீடு கட்டும்முயற்சியில்இருந்த தடை அகலும். மாமன், மைத்துனர் வழியில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சிகளுக்கு ஒரு தொகையைக் கொடுத்து உதவி செய்வீர்கள். அரசியல் பின்னணியில் உள்ளவர்கள் உங்களுக்கு நண்பர்களாகி முடிவடையாத சில காரியங்களை முடித்துக் கொடுப்பர்.

### ரிஷப சுக்ரனின் சஞ்சாரம்!

ஏப்ரல் 21 ஆம் திகதி ரிஷப இராசிக்குச் சுக்ரன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்ரன் சுக ஸ்தானத்தில் சொந்த வீட்டில் சஞ்சரிக்கும்

## வசதி வாய்ப்புக்கள் பெருகும்!

பொழுது மிகுந்த நற்பலன்களைக் கொடுக்கும். வாகன யோகம் உண்டு. பயணங்களால் பலன் கிடைக்கும். பணியில் இருந்த தொய்வு அகலும். செய்தொழிலை விரிவு செய்யும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். மாற்று மருத்துவத்தால் உடல்நலம் சீராகும். குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். வராது இருந்த பாக்கிகள் வசூலாகி மகிழ்ச்சியை வழங்கும். அடகு வைத்த நகைகளை மீட்கும் வாய்ப்பு உருவாகும்.

### சனியின் வக்ர காலம்!

இராசிநாதன் சனி ஏப்ரல் 25 ஆம் திகதி முதல் தனுசு இராசியில் வக்ரம் பெறுகின்றார். இது அவ்வளவு நல்லதல்ல. உடல் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும். உள்ளத்தில் மகிழ்ச்சி குறையும்.




எதை எந்த நேரத்தில் செய்ய நினைத்தீர்களோ, அதை அந்த நேரத்தில் செய்ய இயலாது. ஒரு கடனை அடைக்க மற்றொரு கடனை வாங்கும் சூழ் நிலை உருவாகும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாக நேரிடும்.

### மகர செவ்வாயின் சஞ்சாரம்!

ஏப்ரல் 30 ஆம் திகதி உங்கள் இராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் மகர இராசியில் உச்சம் பெறப்போகின்றார். எனவே பழைய தொழிலைப் பைசல் செய்து விட்டு புதிய தொழில் தொடங்கும் வாய்ப்பு உருவாகும். பத்திரப் பதிவில் இருந்த தடைகள் அகலும். வீடு, இடம் வாங்கும் யோகம் உண்டு. பூர்வீகச் சொத்துகளை விற்று விட்டுப் புதிய சொத்துகள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். உடன்பிறப்புகள் உங்களை விட்டுச் செல்லாமல் பக்குவமாக நடந்து கொள்வது நல்லது.

### மேஷ புதனின் சஞ்சாரம்!

மே 3 ஆம் திகதி மேஷ இராசிக்கு புதன் செல்கின்றார். பஞ்சம அஷ்டமாதிபதியான புதன் 3 இல் சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதிச்செலவிடும் சூழ்நிலை உண்டு. உடன்பிறப்புகளுக்காக ஒரு தொகையைச் செலவிடுவீர்கள். கடல் தாண்டிச் சென்று கல்வி கற்கும் வாய்ப்புண்டு. அரசியல் களத்தில் உள்ளவர்களின் அனுகூலம் கிட்டும். இம்மாதம் சனிக்கிழமை தோறும் விரதமிருந்து லட்சுமி நாராயணரை வழிபட்டு வருவது நல்லது.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இம்மாதம் குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் பொருளாதாரப் பிரச்சினை அகலும். பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர். காதுகுத்து முதல் கல்யாணம் வரை குடும்பத்தில் சுபகாரியங்கள் ஒவ்வொன்றாக நடைபெறும் வாய்ப்புண்டு. கணவன்-மனைவிக்குள் கனிவும், பாசமும் கூடும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதித் தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். அவர்களுக்கு வெளிநாட்டு யோகமும் அமையலாம். தாய் வழி ஆதரவு திருப்தி தரும். சகோதர ஒற்றுமை பலப்படும். பணிபுரியும் பெண்களுக்கு நினைத்த இடத்திற்கு மாறுதல் கிடைக்கும். எதிர்பார்த்த சலுகைகள் உண்டு. வைரவர் வழிபாடு வளர்ச்சியைத் தரும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



விளம்பி வருடம் சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு வக்ர இயக்கத்தில் இருப்பது மட்டுமல்லாமல், அஷ்டமத்திலும் சஞ்சரிக்கின்றார். எனவே எதிர்மறைச் சிந்தனைகள் அதிகரிக்கும். அவற்றை மாற்றிக் கொள்வது நல்லது. எந்தக் காரியத்தையும் தொடங்கும் முன்னால் நடக்குமோ, நடக்காதோ என்ற சிந்தனை அதிகரிக்கும். மனஉறுதி தளரும். மகிழ்ச்சி குறையும். இராசிநாதன் வக்ர இயக்கத்தில் இருக்கும் பொழுது மிகமிக கவனத்தோடு செயற்படுவது நல்லது.

உடல் ஆரோக்கியத்தில் தொல்லை ஒருபுறம் இருந்தாலும் உள்ளத்தில் தெளிவு இருக்காது. கடன் சுமை அதிகரிக்கின்றதே என்று கவலைப்படுவீர்கள். களைப்பை மறந்து உழைப்பில் ஈடுபட வேண்டுமென்று மற்றவர்களுக்கு எடுத்துரைக்கும் நீங்கள் இம்மாதம் முழுவதும் சோம்பலும், அசதியும் ஆட்கொண்டு பல வேலைகள் பாதியிலேயே நிற்கும் சூழ்நிலை உருவாகப் போகின்றது.

செயல் ஸ்தானத்தில் செவ்வாய், சனி சேர்க்கை இருப்பது அவ்வளவு நல்லதல்ல. ஒருமுறைக்கு இருமுறை காரியங்களைச் செய்தாலும் அவை முழுமை பெறாது. பணியாளர் தொல்லையும் அதிகரிக்கும். பிணியின் காரணமாக சில நாட்களும், பணியாளர்களின் பிரச்சினையின் காரணமாக சில நாட்களும் நீங்கள் ஓய்வெடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். எனவே தேவைக்கேற்ற விதம் பொருளாதாரநிலை இருக்குமா என்பது சந்தேகம் தான். கைமாற்று வாங்கும் சூழ்நிலையும், வீட்டில் உள்ள விலை உயர்ந்த பொருட்களை விற்கும் சூழ்நிலையும் ஒருசிலருக்கு உருவாகும்.

கேது உங்கள் இராசியைப் பார்ப்பதால் திடீர், திடீரென மனமாற்றங்கள் ஏற்படும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்ய இயலாது. பஞ்சம ஸ்தானத்தில் ராகு இருப்பதால் பிள்ளைகளால் விரயங்கள் உண்டு. பூர்வீகச் சொத்துகள் சம்பந்தப்பட்ட வகையில் உள்ள பஞ்சாயத்துகளில் தாமதம் ஏற்படும். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களிடம் அளவாகப் பழகுவது நல்லது.

ஜென்ம இராசியில் புதன் சுக்ரனோடு இணைந்து சஞ்சரிக்கின்றார். தன ஸ்தானத்தில் சூரிய சுக்ர சேர்க்கை இருக்கின்றது. எனவே, ஒருசிலருக்கு இட மாற்றம், ஊர் மாற்றம், உத்தியோக மாற்றங்கள் ஏற்படும். தொழிலில் பெரிய முதலீடுகள் செய்வதைத் தவிர்ப்பது நல்லது.

## நேர்மறைச் சிந்தனைகள் நல்ல பலன் தரும்!

### ரிஷப சுக்ரனின் சஞ்சாரம்!

ஏப்ரல் 21 ஆம் திகதி 3, 8 இற்கு அதிபதியான சுக்ரன் 3 ஆம் இடத்தில் சொந்த வீட்டில் சஞ்சரிக்கப் போகின்றார். எனவே உடன் பிறப்புகளின் உதவி கிடைக்கும். தங்கம், வெள்ளி போன்ற விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். விலகிச் சென்ற சகோதரர்கள் விரும்பி வந்து இணைவர். பெண் வழிப்பிரச்சினைகள் முடிவிற்கு வரும்.

### சனியின் வக்ர காலம்!

ஏப்ரல் 25 ஆம் திகதி முதல் தனுசு இராசியில் சனி பகவான் வக்ரம் பெறுகின்றார். அரசியல் சார்ந்தவர்களின் ஆதரவு கிடைக்கும். உங்கள் திறமைக்குரிய அங்கீகாரமும் பெறுவீர்கள். வி.ஐ.பிக்களின் ஆதரவோடு புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். பணத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும் என்றாலும், விரயங்களும் அதிகரிக்கும். எனவே தொகை கைக்கு வரும்பொழுது பழைய கடன்களை அடைக்கலாம். இல்லையேல் அசையா சொத்துகள் வாங்குவதில் ஆர்வம் காட்டலாம்.




### மகர செவ்வாயின் சஞ்சாரம்!

ஏப்ரல் 30 ஆம் திகதி உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் இலாப ஸ்தானத்தில் உச்சம் பெறப் போகின்றார். இக்காலம் ஒரு பொற்காலமாகும். எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும். கூட்டாளிகள் கூடுதல் இலாபத்தைக் கொண்டுவந்து சேர்ப்பர். தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். வீடு, இடம், வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும்.

### மேஷ புதனின் சஞ்சாரம்!

4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், மே 3 ஆம் திகதி குடும்ப ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். எனவே குடும்ப முன்னேற்றம் கூடும். கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும். கடுமையாக முயற்சித்தும் இது வரை நடைபெறாத காரியங்கள் இப்பொழுது நடைபெறும். வியாபார விருத்தி உண்டு. பயணங்கள் பலன் தருவதாக அமையும். போட்டிக்கடை விரித்தோர் விலகுவர். இம்மாதம் சரபேஸ்வரர் வழிபாடு சகல யோகங்களையும் வழங்கும்.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!


இம்மாதம் அஷ்டமத்தில் குரு சஞ்சரிப்பதால் அதிக முயற்சிக்குப்பிறகே அனைத்துக் காரியங்களையும் முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். வைத்தியச் செலவுகள் வாடிக்கையாகலாம். உறவினர்களால் ஒருசில பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும். குடும்பத் தகவல்களை மூன்றாம் நபரிடம் கூறுவதைத் தவிர்ப்பது நல்லது. எதிர்மறைச் சிந்தனைகள் அதிகரிக்கும். கணவன்-மனைவிக்குள் பிணக்குகள் ஏற்படாமலிருக்க அன்பும், அரவணைப்பும் தேவை. பிள்ளைகளால் விரயம் உண்டு. பெற்றோர்கள் ஆதரவுக்கரம் நீட்டுவர். உடன்பிறப்புகள் ஓரளவு உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். பணிபுரியும் பெண்களுக்கு நீண்ட தூரத்தில் மாறுதல்கள் கிடைக்கலாம். வேலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு அது கிடைக்கும். பௌர்ணமி தோறும் மலை வலம் வருவதோடு பிரதோஷ வழிபாடு பெருமை சேர்க்கும்.


(முற்றும்)

# மலேரியா அற்ற இலங்கைக்காக தொடர்ந்து போராடுவோம்...

## இன்று உலக மலேரியா தினமாகும்




வருடம்தோறும் நாம் உலக மலேரியா தினத்தைக் கொண்டாடியிருந்தாலும் கடந்த 05 ஆம் திகதி செப்டெம்பர் மாதம் 2016 ஆம் ஆண்டுக்குப் பின்னரான மலேரியா தினத்திற்கு ஒரு விசேட அம்சம் உள்ளது. ஆம் அந்த நாளில் தான் இலங்கை "மலேரியா அற்ற நாடு" என உலக சுகாதார நிறுவனம் சான்றுப்படுத்தி இருந்தது. தற்போது இலங்கையில் இந்தநோய் இல்லை என சான்றுப்படுத்தி இருந்தாலும் இந்தக் கால கட்டத்தில் இந்நோய் தொடர்பாக மிக மிக அவதானத்துடனும், விழிப்புணர்வுடனும் நாம் இருக்கவேண்டியது அவசியம். ஏனெனில் மலேரியா தொடர்பான வரலாற்றைப்பார்த்தால் மிகவும் குறைவான நோயாளர்கள் இருந்த காலகட்டத்தில் திடீரென இலட்சக்கணக்கானவர்கள் இந்நோயால் பாதிக்கப்பட்டிருந்தமையைக் காணலாம்.

எனவே இப்போது இலங்கையில் மலேரியா இல்லை என நாம் கவனிக்காது விட்டோமானால் மீண்டும் ஒரு அழிவிற்கு ஆயத்தமாகின்றவர்களாவோம். ஆட்கொல்லி நோயான இந்த மலேரியா நோய் ஆபிரிக்க, ஆசிய மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகள் உட்பட நூற்றுக்கும் அதிகமான நாடுகளில் காணப்படுகின்றது. இது மிகவேகமாக பரவக்கூடிய ஒரு தொற்று நோயாகும். இதை பரப்புவது நுளம்பு ஆகையால் இதன் வேகம் கூடுதலாக உள்ளது. தற்போது இலங்கையில் மலேரியா நோய் இல்லை என உலக சுகாதார நிறுவனம் சான்றுப்படுத்தி இருந்தாலும் மலேரியா நோய் காணப்படும் நாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகை தருபவர்களாலும் இங்கிருந்து மலேரியா காணப்படும் நாடுகளுக்கு சென்று வருபவர்களினாலும் இந் நோய் பரவ வாய்ப்புள்ளது.

உலக சுகாதார நிறுவன அறிக்கையின்படி 1958 ஆம் ஆண்டு இலங்கை உலக சுகாதார நிறுவனத்தின் மலேரியா தடுப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் இணைந்தது இதன் மூலம் 1963 ஆம் ஆண்டு வெறும் 17 நோயாளர்களே இனங்காணப்பட்டனர். இதில் 11 பேர் வெளிநாட்டிலிருந்து வந்தவர்களாகும்.

எனினும் 1967 தொடக்கம் 1969 இல் இந்தத்தொகை திடீரென 1.5 மில்லியனானது. இந்த காலகட்டத்தில் மிக அதிகமான பேருக்கு தொற்று ஏற்பட்டு 80,000 இற்கும் அதிகமாக மக்கள் இறந்தனர். ஆரம்ப காலத்திலிருந்து மலேரியா பேரழிவை ஏற்படுத்தும் ஒரு நோயாக இனங்காணப்பட்டு வந்துள்ளது. 1945 ஆம் ஆண்டு DDT எனும் கிருமி நாசினி அறிமுகம் செய்யும் வரை இந்நோய் கட்டுப்படுத்த முடியாதவாறு பரவியது.

எனினும் 1963 இல் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டு மீண்டும் (1967-1969), (1986-1987), (1990-1991) ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் பேரழிவுகளை ஏற்படுத்தியமையைக் காணலாம்.

எனினும் உலக சுகாதார நிறுவனத்தின் உதவியுடன் மலேரியா தடை இயக்கத்தின் மேற்பார்வையின் கீழ் மலேரியா எனும் கொடிய நோய் தற்போது விரட்டப்பட்டுள்ளது.

எனினும் இந்நோய் மீண்டும் வராமல் தடுப்பதற்கு மலேரியா தடைப்பகுதியினருடன் பொதுமக்களும் கைகோர்த்து செயற்பட வேண்டும். காய்ச்சல் ஏற்பட்டு மலேரியா என சந்தேகிப்பவர்கள் கட்டாயமாக குருதிப்பரிசோதனை செய்துகொள்ளவேண்டும்.

தற்போது மருந்து விசிறல் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு நுளம்புக்குடம்பிகளை அழித்தல், நோயாளிகளை இனங்கண்டு சிகிச்சை வழங்கல் மூலம் மலேரியா நோய் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது.

மலேரியா நோய்க்கு மிகவும் நீண்ட வரலாறு உண்டு. எமது சரித்திர வரலாற்றில் அநுராதபுர இராட்சியம் சரிந்து வீழ்வதற்குக் காரணமாக அமைந்தது இந்த நோயாகும்.

இதன் பின் முழு உலர்வலையமும் மக்களற்ற சூனிய பிரதேசமானதுடன் பல அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் முடங்கியமைக்கு காரணம் இந்நோயேயாகும். 1935 ஆம் ஆண்டு ஏற்பட்ட அந்த தொற்றுகையே இலங்கையில் ஏற்பட்ட அதிக தொற்றுகையாக காணப்படுகின்றது.

மலேரியா நோயானது உலகில் காணப்படும் நோய் வகைகளில் பரவக்கூடிய அல்லது தொற்றுகையடையக் கூடிய நோய் வகைகளில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.

நுளம்பு நோயாளி ஒருவரைக் கடிக்கும்போது ஒட்டுண்ணி நுளம்பை அடைகிறது. நுளம்பில் இவ் ஒட்டுண்ணியில் சில வாழ்க்கைப் படிநிலைகள் விருத்தியடைந்து சுகதேகியொருவருக்கு இந் நுளம்பு கடிக்கும்போது நுளம்பின் உமிழ் நீருடாக பரப்பப்படுகின்றது. இந்த நோய் எந்தவயதினருக்கும் ஏற்படக் கூடியது.

இதன் பிரதான அறிகுறி விட்டு விட்டு குளிர் நடுக்கத்துடன் ஏற்படும் காய்ச்சல் ஆகும். இதனை அடையாளம் கண்டு சிகிச்சை பெறாவிட்டால் இதன் விளைவு மிகப்பயங்கரமாக இருக்கும். கர்ப்பிணி தாய்மார்களிற்கு இந்நோய் ஏற்படும்போது நிறைகுறைந்த பிள்ளைகள் பிறப்பதற்கும் சிசுமரணம் ஏற்படுவதற்கும் ஏதுவாக அமைகின்றது.

தற்போது இலங்கையில் இந்நோய்த்தாக்கம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் ஆபிரிக்கா, இந்தியா போன்ற நாடுகளுக்குச் சென்று வருபவர்கள் மூலமும் அங்கிருந்து எமது நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் மூலமும் பரவக்கூடிய வாய்ப்பு உள்ளது.

எனவே இந்நாடுகளுக்குச் செல்பவர்கள் செல்வதற்கு ஒரு கிழமைக்கு முன்னரே கிழமைக்கு ஒருநாள் மட்டும் குளோரோக்குயின் மாத்திரை இரண்டை (வளர்ந்தவர்கள்) உட்கொள்ளவேண்டும்.

சிறுபிள்ளைகளும் கர்ப்பிணித் தாய்மார்களும் அதிக தாக்கத்திற்கு உட்படுவதால் இவ்வாறான இடங்களுக்குச் செல்வதில் அதிக கவனம் செலுத்தி தடுப்புச் சிகிச்சை பெற்றுக் கொள்வும். தங்கியிருக்கும் நாடுகளில் (வளர்ந்தவர்கள்) வாரத்திற்கு இரண்டு மாத்திரைகள் வீதமும் நாடுதிரும்பியபின் இதேபோல் தொடர்ச்சியாக நான்கு வாரங்களுக்கு உள்ளெடுக்க வேண்டும்.

ஆறுமாதத்திற்கு மேல் மேற்குறிப்பிட்ட நாடுகளில் தங்கியிருக்க வேண்டியிருப்பின் அந்நாட்டிலுள்ள வைத்தியசாலையில் ஆலோசனை பெற்று தடுப்பு மருந்தினைப் பெற்றுக் கொள்ள வேண்டும் நாடு திரும்பிய பின் மலேரியா தொற்று இல்லை என்பதை இரத்தப்பரிசோதனை மூலம் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

இப்பரிசோதனையை சகல அரச வைத்தியசாலைகளிலும் இலவசமாகச் செய்து கொள்ளலாம். நோய்த்தாக்கம் அதிகமுள்ள நாடுகளுக்கு செல்பவர்கள் நுளம்பு கடிப்பதைத் தவிர்ப்பதற்காக நுளம்புவலை, நுளம்பு விரட்டும் கிறீம் வகைகள், எண்ணெய் வகைகளைப் பயன்படுத்தலாம். எவ்வாறாயினும் மலேரியா மீண்டும் பரவாமல் தடுப்பது நம் அனைவரினதும் தலையாய கடமையாகும். இந்நோயை எதிர்ப்பதற்காக வருடம் தோறும் உலக சுகாதார நிறுவனத்தாலும் ஏனைய நிறுவனங்களினாலும் செலவிடப்பட்டு வருகின்றன.

பல நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் நுளம்பு அழிப்பு நடவடிக்கையிலும் குடம்பி ஒழிப்பு நடவடிக்கையிலும் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். இரவு பகல் பாராது மலேரியா தடுப்புப் பணியாளர்கள் விடாது முயற்சித்து மலேரியாவைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளார்கள். தற்போதைய சீரற்ற காலநிலையாலும் பொது மக்கள் சிலரின் பொறுப்பற்ற நடவடிக்கைகளினாலும் இந்நோய் மீண்டும் பரவ வாய்ப்பிருப்பதால் பொதுமக்களாகிய நாம் மலேரியா தடுப்பு இயக்கத்தினருடன் கைகோர்த்து மலேரியா அற்ற இலங்கையை எமது எதிர்காலச் சந்ததியினருக்கு கையளிப்போம்.

தொகுப்பு:- செல்லத்துரை மதியழகன்

இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள்.
~ அல்லை விவசாயி சிரீசன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இளைஞர்களின் அறிவாயுதமே தமிழினத்தைப் பாதுகாக்கும்

எழுமின்! விழிமின்! எண்ணிய கருமம் நிறைவேறும் வரை உழைமின்! என்றார் சுவாமி விவேகானந்தர்.

வீரத் துறவி என்று போற்றப்படும் சுவாமி விவேகானந்தர் மனித சமூகத்தை நேர்வழிப் படுத்த இளைஞர்களே பொருத்தமானவர்கள் எனக் கருதினார்.

அதனால்தான் வீர இளைஞர்களுக்கு! என்று அவர் இளைஞர்களைப் பார்த்து அறை கூவல் விடுத்தார்.

சுவாமி விவேகானந்தரின் பார்வையில், வீர இளைஞர் என்போர் புலனடக்கம் கொண்டவர்கள்; அறிவுப் பிரவாகம் படைத்தவர்கள்; நேரிய சிந்தனை மிக்கவர்கள்; மனித சமூகத்தில் எங்கும் எதிலும் தர்மம் நிறைந்து விளங்க வேண்டும் என நினைப்பவர்களாவர்.

புலனைந்தும் வென்றான் தன் வீரமே வீரம் என்பது ஒளவையார் கூறும் சாட்சியம்.

ஆக, இன்றைய இளைஞர்கள் விழிப்படைந்தால், அவர்கள் கவனம் செலுத்தினால், அவர்கள் நினைத்தால் எதுவும் சாத்தியமாகும்.

ஆகையால் எங்கள் இளைஞர்களை நாம் முன்னிலைப்படுத்த வேண்டும். தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை சர்வதேச சமூகம் திரும்பிப் பார்த்தமைக்கு எங்கள் இளைஞர்களின் தியாகமே மூலகாரணமாகும்.

எங்கள் இளைஞர்களின் தியாகத்துக்கு தீய சக்திகள் தீங்கிழைத்தனராயினும் அந்தத் தியாகத்தின் பெறுமதியைப் பாதுகாக்கின்ற பெரும் பணி எங்கள் ஒவ்வொருவரிடமும் இருக்கிறது.

அதிலும் குறிப்பாக எங்கள் இளைஞர்கள் இது விடயத்தில் அதீத கவனம் செலுத்த வேண்டும்.

இதை நாம் கூறுவதற்காக, மீண்டும் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடுதல் என்று யாரும் வியாக்கியானம் செய்து விடக்கூடாது.

மாறாக எங்கள் இளைஞர்கள் அறிவெனும் ஆயுதத்தால் தமிழினத்தைப் பாதுகாக்க முன்வர வேண்டும்.

அறிவு, மதிநுட்பம், இராஜதந்திரம், சமயோசிதம் என்ற தமிழ்ச் சொற்கள் ஒவ்வொன்றும் இளைஞர்களின் அறிவாயுதமாக எழுந்தால் அதற்கு ஈடுகொடுக்க யாராலும் இயலாமல் போகும்.

எனவே எம் இனம் உரிமையைப் பெற்று எம் இனத்தின் இருப்பை நிலைபேறுடையச் செய்வதற்காக எங்கள் இளைஞர்கள் தமிழரின் வரலாற்றை, எங்கள் ஆட்சி அதிகாரம் இலங்கை மண்ணில் நின்று நிலைத்த காலத்தை, எங்கள் மண்ணில் நடந்த விடுதலைப் போராட்டத்தை, எங்கள் இனத்தின் பலத்தை, எங்கள் இனத்தின் பலயீனத்தை அறிய வேண்டும். இதற்கு தமிழ் மக்கள் பேரவை கூட்டுகின்ற இளைஞர் மாநாடு வழிவகுக்க வேண்டும்.

எம் இளைஞர்களே! இளைஞர் மாநாட்டுக்கு உங்களைத் தயார்படுத்துங்கள். நீங்களே மேடை ஏறி இன்றைய இளைஞர்களின் எதிர்பார்ப்பு என்ன? சிந்தனை என்ன? செயற்படும் வழி என்ன? என்பதை விதந்துரையுங்கள்.

உங்களின் உரைகள், உங்களின் எண்ணங்கள், எங்கள் அன்னைத் தமிழை, எங்கள் தமிழ் உறவை இந்த மண்ணில் வாழவைக் கட்டும்.

## வெலிக்கடையில் படுகொலை செய்யப்பட்ட கைதிகளுக்கு நீதிகோரி ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையில் 2012ம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட சிறைக்கைதிகள் தொடர்பில் இதுவரை காலமும் நீதி நிலைநாட்டப்படவில்லை.

இந்த படுகொலை தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட விசாரணைஆணைக்குழு விசாரணை அறிக்கையினை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு கையளித்துள்ள நிலையிலும் குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தருவதில் பின்வாங்குவது நல்லாட்சி அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு முரணானது என குறிப்பிட்டு நேற்று உயர நீதிமன்றத்தின் முன்னிலையில் கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பினர் ஆர்ப்பாட்டத்தினை மேற்கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட அருட்தந்தை சக்திவேல் தெரிவிக்கையில்,

வெலிக்கடை சிறைச்சாலையில் 2012ம் ஆண்டு நவம்பர் மாதம் 09ஆம் திகதி 27 கைதிகள் படுகொலை செய்யப்பட்டமை ஒரு திடீர் கலவரம் அல்ல அது பாரிய அரசியல் சூழ்ச்சியாக காணப்படுகின்றது.

இந்த தாக்குதலின் போது 27அப்பாவி கைதிகள் கொல்லப்பட்டதுடன், 40ற்கும் அதிகமான கைதிகள் படுகாயமடைந்தனர். அப்போதைய அரசாங்கத்தின் பாதுகாப்புத்துறை இந்த படுகொலை தொடர்பில் முழு பொறுப்பினையும் ஏற்க வேண்டும்.

நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வரும் போது ஊழல்வாதிகளுக்கும் குற்றவாளிகளுக்கும் விரைவில் தண்டனை வாங்கிக் கொடுப்பதாக கூறியே ஆட்சிக்கு வந்தது.

ஆனால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் இன்று வரை பொய்யாக்கப்பட்டு மோசடிக்காரர்களுக்கு பாதுகாப்பினை மாத்திரமே வழங்கி வருகின்றது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்தில் அரசாங்கம் ஒருதலைப்பட்சமாகவே செயற்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இளங்கோ கழகம் நடத்தும் சிலப்பதிகாரவிழா புலோலியில்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இளங்கோ கழகம் நடத்தும் புலமை ஒலி - 2018 சிலப்பதிகார விழா எதிர்வரும் 28,29,30ஆம் திகதிகளில் யாழ்.புற்றளை மகா வித்தியாலய கேட்போர்கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் முதல் நாள் நிகழ்வுகள் 28ஆம் திகதி சனிக்கிழமை மாலை4 மணிக்கு புற்றளை சித்திவிநாயகர் ஆலயத்திலிருந்து ஊர்வலமாக வெல்லவூர்க்கோபாலன் விவசாய அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையின் ஆரம்பமாகும்.

தமிழ்த்தாத்தா கந்த முருகேசனார் அரங்கில் இடம் பெறும் முதல்நாள் நிகழ்வின் பிரதம விருந்தினராக ஓலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைப் பேராசிரியர் க.இரகுபரன் கலந்து கொள்வார்.

இதில் வலம்புரிப் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் நடுவராகப் பங்கேற்கும் "இன்றைய இளைய தலைமுறையின் நடத்தை நாம் பெரிதும் எதிர்பார்த்து நிற்பது - பற்றுணர்வே" என்ற தலைப்பில் த.குருபரன், அ.பிரதாபன், கு.தர்சன் ஆகியோரும் "பண்பாட்டுப் பேணுகையே" என்ற தலைப்பில் சி.பாலமுரளி, க.அருண்பிரசாந், க.ஜசந்தன் ஆகியோரும் "தியாக சிந்தையே" என்ற தலைப்பில் தி.கார்த்திகேயன், திருமதி சு.ஜங்கரன், திருமதி த.ரஜீவன் ஆகியோரும் வாதிடும் விவாத அரங்கு இடம்பெறும்.

"கலைஞானகேசரி" க.பரஞ்சோதி குருபகாரத்த புலமை ஒலி உயர் விருது விரிவுரையாளர் சி.சிவசுப்ரமணியத்திற்கு வழங்கப்படும். (இ-7)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### உள்ளம் கடவுளிடம் இருக்கட்டும்



✦ புலி மற்ற மிருகங்களைக் கொன்று விடும். அதுபோல பக்தி என்னும் புலி காமம் குரோதம் முதலானவற்றைக் கொன்று விடுகிறது. இதயத்தில் பக்தி வளருமானால் காமமும் ஏனைய மிருக உணர்ச்சிகளும் அடியோடு மறைந்துவிடும்.

✦ வெட்டலம் கிழிந்து கடுகு சிதறி விட்டால் அவற்றை ஒன்று சேர்ப்பது மிகவும் கடினம். அதுபோல பல்வேறு திசைகளில் ஓடுகின்ற மனத்தை ஒருநிலைப்படுத்துவது எளிதான செயல் அல்ல. மனதை ஒருமுகப்படுத்துவதற்கு நல்லவர்களுடன் நாடிச் சேர்வது மட்டுமே வழி.

✦ சிறு இழை ஒன்று நீட்டிக் கொண்டிருந்தாலும் ஊசியின் காதுவழியாக நூல் நுழைய முடியாது. உலகப் பொருட்களில் சிறிது பற்று இருந்தாலும் நம்மால் கடவுளை அணுக முடியாது.

✦ மனைவி, மக்கள், பெற்றோர் அனைவருடனும் சேர்ந்து குடும்பமாக வாழுங்கள். ஆனால், உள்ளத்தை மட்டும் கடவுளிடம் இருத்துங்கள்.

✦ முட்செடிகளை விரும்பித் தின்னும் ஒட்டகத்தின் வாயில் இரத்தம் ஒழுகும். அதுபோல, உலகியல் இன்பங்களில் நாட்டம் கொண்டு மனிதன் எத்தனையோ வேதனைகளையும் துன்பத்தையும் அனுபவிக்கிறான்.

## வைத்திய அதிகாரிகள் சங்கம் அரசிற்கு பகிரங்க எச்சரிக்கை

(கொழும்பு)

கொத்தலாவல பாதுகாப்புக் கல்லூரி தொடர்பிலான சட்ட மூலத்தை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் எத்தனிக்குமாயின், சைட்டம் வைத்திய கலலூரிக்கு எதிரான அமைப்புடன் இணைந்து தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கப்போவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

சைட்டம் வைத்திய கல்லூரி மாணவர்களை, கொத்தலாவல பாதுகாப்புக் கல்லூரியில் இணைத்துக் கொள்ளுமாறு தாம் அரசாங்கத்தை கோரியதாகவும், எனினும் அரசாங்கத்தின் அணுகுமுறை பிரச்சினையை மேலும பெரிதாக்குவதாக அமைந்துள்ளதாகவும் அந்த சங்கத்தின் செயலாளர் ஹரித அளுத்கே நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் இந்த முயற்சியானது வைத்திய விதிமுறைகள் மற்றும் பல்கலைக்கழக சட்ட திட்டங்களை மீறுவதாக அமைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

குறித்த சட்டமூலமானது இலங்கை வைத்திய சங்கத்தின் செயற்பாடுகளை சவாலுக்கு உட்படுத்தியுள்ளதாகவும் கொத்தலாவல பாதுகாப்புக் கல்லூரி தொடர்பிலான சட்டமூலமானது, சைட்டம் தனியார் வைத்தியக் கல்லூரியை பாதுகாக்கும் நோக்கில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மொஹான் டி சில்வா மற்றும் சுகாதார அதிகாரிகளால் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் ஹரித அளுத்கே மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## கஜமுத்துக்களுடன் மூவர் கைது

புத்தளம் பிரதேசத்தில் யானையின் கஜமுத்துக்களுடன் மூவரை தம்புள்ளை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

புத்தளம் பிரதேசத்தில் வசிக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு பேரும மற்றொரு நபரும் இணைந்து, யானையொன்றைக் கொன்று சுமார் 70 இலட்சம் ரூபா பெறுமதியான யானைத் தந்த முத்துக்களை கைப்பற்றியுள்ளமை விசாரணையின் போது தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் தேசிய வனப்பகுதியிலிருந்து குறித்த கஜமுத்துக்களைப் பெற்றுக்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மணிவரை கிளிநொச்சி பிரதேசத்தில அக்கராயன்குளம், ஆனைவிழுந்தான், வன்னேரிக்குளம், சோலை, ஜெயபுரம், நாகபடுவான், பல்லவராயன் கட்டு, வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு, குமுழமுனை, கரியாலைபடுவான், அன்புபுரம், முழங்காவில், நாச்சிக்குடா, சமனலங்குளம், குளவிசுட்டான், நெடுங்கேணி, இறம்பைக்குளம், தண்டுவான், ஒலுமடு, சேனைப்புலவு, ஒதியமலை, பட்டிக்குடியிருப்பு, மருதோடை, கற்குளம், கோவில் புளியங்குளம், பெரியகுளம், சின்ன அடம்பன், நைனாமடு, மதியாமடு, நொச்சிக்குளம், பழையவாடி, நெடுங்கேணி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம், நெடுங்கேணி மொபிட்டல் கோபுரம், நெடுங்கேணி நீர்ப்பாசன சபை, தண்டுவன் பழம்பதனிடும் நிலையம், 651 ஆவது படைப்பிரிவு முகாம், 652 ஆவது படைப்பிரிவு முகாம், நாச்சிக்குடா கடற்படை முகாம், இயாஸ்ஜஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில அட்டம்பஸ்கட கிராமம், தவசிகுளம் கிராமம், மதவு வைத்தகுளம், தோணிக்கல், பண்டாரிக்குளம், குட்செட் றோட், உக்குளாங்குளம், பண்டாரிக்குளம் கிராமம், கோவில் குளம், ஆசிகுளம், சமணகுளம், மகா மயிலங்குளம், மருதநகர், எல்லப்ப மருதங்குளம், எல்லப்பர் கூமரசங்குளம், ஆசிகுளம், சிதம்பரபுரம், குருமன் அரிசி ஆலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில முருங்கனிலிருந்து நானாட்டான் வரை, அறுகுக்குன்று, முருங்கனிலிருந்து முள்ளிக்குளம் வரை, சிலாபத்துறை கடற்படை முகாம், முள்ளிக்குளம் கடற்படை முகாம், செம்மண் தீவு நெற்களஞ்சியம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-7)



இலங்கை செஞ்சிலுவை சங்க கிளை ஏற்பாட்டில் யா/முத்துத் தம்பி ம.வி., யா/சிறுப்பிட்டி இ.த.க பாடசாலை ஆகியவற்றுக்கு பாண்ட் வாத்திய கருவிகள் வழங்கும் நிகழ்வுகள் நேற்று இடம் பெற்றன. இதில் யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் சி.மாணிக்கராஜா, நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எவ்.எக்ஸ்.அன்ரன், செஞ்சிலுவை சங்க நிர்வாகிகள் மற்றும் பிரதான அனுசரணை வழங்கிய லாஜர் மைனோ பிற்றி அமைப்பின் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். மேற்படி உபகரணங்கள் யாழ்.கல்வி வல யத்தின் ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திர ராஜாவின் கோரிக்கையின் அடிப்படையில் வழங்கப்பட்டன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# கொக்குவில் மத்திய ச.ச.நிலையத்தின் மாபெரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி

கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில், யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் 30 ஓவர்கள் மட்டுப் படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுபபோட்டியொன்றை வருடாவருடம் நடத்தி வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியின் 25 ஆவது வருடச் சுற்றுப்போட்டி தற்போது கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

1991 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வரும் இந்தச் சுற்றுப்போட்டியில், 1996, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில், நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக போட்டிகள் நடைபெறவில்லை.

இதுவரையில்நடைபெற்ற 24 சுற்றுப்போட்டிகளில், சென்றலைட்ஸ், யாழ்ப்பாண பல்கலைக்கழகம், கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் ஆகிய அணிகள் தலா 4 தடவைகளும், ஜொனியன்ஸ், ஜொலிஸ்ரார்ஸ், பற்றீசியன் அணிகள் தலா 3 தடவைகளும், மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகம் 2 தடவைகளும், திருநெல்வேலி விளையாட்டுக்கழக அணி ஒரு தடவையும் சம்பியனாகின்னத்தைப் பெற்றுக் கொண்டன.

இம்முறையில் சுற்றுப் போட்டியில் மொத்தமாக 24 அணிகள் பங்குபற்றுகின்றன.

**விக்டோரியன்ஸ் அணி ஒரு விக்கெட்டால் வெற்றி**

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் பற்றீசியன் அணியை எதிர்த்து விக்டோரியா அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன் அணி, 27.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் முரளி 51 ஓட்டங்களையும், மொனிக் 49 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் விக்டோரியா அணி சார்பாக, சுகிந்தன் 3 விக்கெட்களையும், சரத்குமார் 3 விக்கெட்களையும், கியோன் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலளித்தாடிய விக்டோரியா அணி, 28.5 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் கதியோன் 43, முகுந்தன் ஆட்டமிழக்காமல் 37 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

**மானிப்பாய் பரிஸை அணி 98 ஓட்டங்களால் வெற்றி**

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் மானிப்பாய் பரிஸ் அணியை எதிர்த்து விங்ஸ் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஸ் அணி, 26.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 235 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் நிதர்சன் 71 ஓட்டங்களையும், வினோத் 45 ஓட்டங்களையும், ஹரிகரன் 42 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் விங்ஸ் அணி சாரபாக, திலக்சன் 5 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பதிலளித்தாடிய விங்ஸ் அணி, 21.1 ஓவர்களில் 137 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் விதுசன் 32, ஜெயந்தன் 31, கொலிசியா 27 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் பரிஸ் அணி சார்பாக, ஹரிகரன், நிதர்சன் தலா 3 விக்கெட்களையும், கிசோக்குமார் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

**சென்றலைட்ஸ் அணி 6 விக்கெட்களால் வெற்றி**

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் ஸ்கந்தா ஸ்ரார்ஸ் அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா ஸ்ரார்ஸ் அணி, 23 ஓவர்களில் 179 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் சங்கி 41, துவாரகன் 33 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்றலைட்ஸ் அணி சார்பாக, அலன்ராஜ் 4 விக்கெட்களையும், சாள்ஸ் 3 விக்கெட்களையும், ஜெரிக்துசாந்த் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலளித்தாடிய சென்றலைட்ஸ் அணி, 21.1 ஓவர்களில் 4 விக்கெட்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் பிரியலக்சன் 62, கௌதமன் 37, ஜேம்ஸ் ஜான்சன் 26 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் ஸ்கந்தா ஸ்ரார்ஸ் அணி சார்பாக துவாரகன் 3 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் 7 விக்கெட்களால் இலகு வெற்றி**

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணியை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் அணி, 26.2 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 145 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

துடுப்பாட்டத்தில் பகீரதன் 29, லவன்ராஜ் 22, தேவானந்த் 21 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி சார்பாக, நிதர்சன் 4 விக்கெட்களையும், துவாரகசீலன் 3 விக்கெட்களையும், லோகதீஸ்வரன் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலளித்தாடிய யாழ்ப்பாணப்பல்கலைக்கழக அணி, 17.1 ஓவர்களில் 3 விக்கெட்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் கஸ்கோவன் 53, கபில்ராஜ் 36, தனுசன் 26 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். (க-26)



2017, 2018ஆம் ஆண்டுக்கான லயன்ஸ் கிளப்பினால் நடததப்பட்ட மென்பந்து துடுப்பாட்ட போட்டியின் இறுதி போட்டியில் சாவகச்சேரி சிவன் விளையாட்டு கழகத்தை எதிர்த்து விளையாடிய மட்டுவில் கண்ணகை விளையாட்டு கழகம் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை தன் வசப்படுத்தியது.

# தன் சாதனையை தானே முறியடித்தார் அனித்தா

தேசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் கோலூன்றி பாய்தலில் மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன அனித்தா 3.55 மீற்றர் உயரம் பாய்ந்து புதிய சாதனை நிகழ்த்தினார்.

கொழும்பு சுகததாஸ விளையாட்டு மைதானத்தில் 23 ஆம் திகதி இடம்பெற்ற மேற்படி போட்டியிலேயே இந்தச் சாதனையை நிகழ்த்தினார். ஏற்கனவே தன்வசம் வைத்திருந்த 3.48 மீற்றர் என்ற தேசிய மட்ட சாதனையையே இவர், முறியடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். (க-26)




# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



## திருமதி துரைராசா சண்முகேஸ்வரி

கடந்த 2018.03.25 ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி துரைராசா சண்முகேஸ்வரி அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நாளை 2018.04.26 வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற உள்ளமையால் தாங்கள் அந் நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

அத்துடன் எமது குடும்பத் தலைவியின் இறுதி நிகழ்வின் போது நேரடியாகக் கலந்து கொண்டும் தொலைபேசி வாயிலாகவும் ஏனைய வழிகளிலும் ஆறுதல் தெரிவித்துத் துயர்பகிர்ந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ் அழைப்பினைத் தங்களுக்கான தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்விற் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

238/2 கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்.

குடும்பத்தினர்

(C-2386)

## பிள்ளையார் கோவில்...

தமான சொத்துக்களையும் விகாரைக்கென இராணுவம் ஆக்கிரமித்து வைத்துள்ளது. கோவிலின் மணிக்கோபுரம் ஆக்கிரமிக்கப்பட்டு விகாரைக்கான மணியாகவும், மடப்பள்ளி பிக்கு தங்குவதற்கான இடமாகவும் இதில் மலசல கூடம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த விகாரைக்கு கமுணு விகாரை என்ற பெயரை இராணுவம் சூட்டியுள்ளது. குறித்த பகுதி இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குள் இருக்கும் போது அப்பகுதியில் சிறிய புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டு தற்போது பௌத்த விகாரையாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது என ஆலய சூழலை சேர்ந்த மக்கள் தெரிவித்துள்ளனர். குறித்த விகாரையை தற்போது காங்கேசன்துறை பொலிஸார் பராமரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட இடங்களில் பல இந்து ஆலயங்கள் அழிந்த நிலையில் காணப்படுவதோடு. சில புத்தர் சிலைகள் புதிதாக முளைத்துள்ளன. இவ்வாறான இராணுவத்தின் நடவடிக்கைகள் இன நல்லிணக்கத்தை ஒருபோதும் ஏற்படுத்த போவதில்லை. மாறாக மதங்களுக்கிடையில் பிரிவுகள் தான் ஏற்படும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-4)

## முல்லைத்தீவில் 15 வயது...

பகுதியில் வசித்துவந்த 15 வயதுடைய சிறுவன் ஒருவனை காணவில்லை என உறவினர்களால் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுதந்திரபுரம் கிராம அலுவலர் பிரிவின் சுதந்திரபுரம் மத்தி 40 ஏக்கர் பகுதியை சேர்ந்த 15 வயதுடைய சத்தியசீலன் கிருஜன் என்பவர் 22ஆம் திகதி உடையார்கட்டு பகுதியில் உள்ள கணனி கற்கை நிலையத்துக்கு சென்று வந்து சுதந்திரபுரம் சந்தியில் அமைந்துள்ள சிறிய தந்தையின் வீட்டில் உணவருந்திவிட்டு 2 மணியளவில் வீடு செல்வதாக தெரிவித்து விட்டு சென்றவர் வீடு வந்து சேரவில்லை என தந்தையார் தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து தந்தையாரால் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்

இதேவேளை இவர் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் தந்தை சத்தியசீலன் அவர்களுடைய 0774769824 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தகவல் தருமாறு கேட்டுக்கொண்டுள்ளார். (ம-281)

## கோத்தாவை கைது...

கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்வதற்கு தயக்கம்காட்டி வரும் அரசாங்கம், அவரை அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவைப்பதற்கான முயற்சியா அதற்கு காரணம் என்றும் அருட்தந்தை சத்திவேல் கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த 2012ஆம் ஆண்டு கொழும்பு வெலிக்கடை சிறையில் இராணுவத்தினரால் நிகழ்த்தப்பட்ட படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பு மேலதிக நீதிமன்ற நீதவான் ராங்க திஸாநாயக்க முன்னிலையில் இடம்பெற்றது.

இந்த வழக்கில் பிரதான சந்தேக நபராக காணப்பட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி நியூமல் ரங்கஜீவ, படுகொலை இடம்பெற்றபோது சிறைச்சாலை ஆணையாளராக இருந்த எமில்ரஞ்ஜன் லமாஹேவா ஆகியோர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது அவர்களுக்கான விளக்கமறியலை எதிர்வரும் மே 8ஆம் திகதிவரை நீடிக்குமாறு உத்தரவிடப்பட்டது.

இந்த நிலையில் வெலிக்கடை படுகொலைக்கு காரணமானவர் என்று குற்றம் சுமத்தப்பட்டுவரும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவையும் கைதுசெய்யும்படியும், படுகொலை காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்குமாறும் கோரி கொழும்பு மேலதிக நீதிமன்றத்திற்கு முன்பாக நேற்று பகல் அமைதிப் போராட்டமொன்றும் முன்னெடுக்கப்பட்டது. (ம)

## மதுபான விற்பனை...

தோடு அபராதமும் விதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 27ஆம் திகதி முதல் மே மாதம் 3ஆம் திகதி வரை அனுமதிப்பத்திரம் அற்ற மது விற்பனை நிலையங்களை மூடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்காக மது வரித்திணைக்களத்தின் சட்டசெயற்படுத்தல் பிரிவின் கீழ் விசேட அதிகாரிகள் கொண்ட குழுவும் நியமிக்கப்படவுள்ளது.

மேலும் இவ் விசேட நடைமுறைகளை மீறி செயற்படுபவர்கள் தொடர்பில் பொது மக்கள் மது வரித்திணைக்களத்திற்கு அறியத்தருவதன் மூலம் இதனை சிறப்பாக முன்னெடுக்க பொது மக்களின் ஒத்துழைப்பும் கோரப்பட்டுள்ளது. சட்டவிரோதமாக மது விற்பனையில் ஈடுபடுபவர்கள் தொடர்பாக தகவல்களை தெரிவிப்பதற்காக 24 மணித்தியால விசேட சேவையும் செயற்படுத்தப்படவுள்ளது.

சட்ட விரோத மதுபான விற்பனையில் ஈடுபடுபவர்கள் தொடர்பாக 011-2045077 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலமும் 011-2877882 என்ற தொலைநகல் இலக்கத்தின் மூலமும் அறியத்தர முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## பௌத்தர்களை கட்டுப்...

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம்சாட்டியுள்ளார்.

மத வழிபாட்டுத் தலங்களை நிர்மாணிப்பதை கட்டுப்படுத்தும் வகையில் அறிமுகப்படுத்தவுள்ள புதிய சட்டத்திருத்தத்தின் மூலம் இதனை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் குருநாகல் பகுதியிலுள்ள பௌத்த விகாரையொன்றில் நடைபெற்ற நிகழ்வொன்றில் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

புதிய மத வழிபாட்டுத் தலங்களை நிர்மாணிப்பது மற்றும் அவற்றை வழிநடத்தி செல்வது தொடர்பான புதிய சட்டமூலமொன்றை தயாரித்து வரும் மைத்திரி-ரணில் அரசாங்கம் அதன் ஊடாக பௌத்த விகாரைகள் நிர்மாணிப்பதற்கு மாத்திரமன்றி அறநெறி பாடசாலைகளை அமைப்பதற்கும் அனுமதி பெற வேண்டும் என்ற நிலையை உருவாக்கவுள்ளது.

வெறுமனே அனுமதி பெறுவது அல்ல, பிரதேசத்திலுள்ள அனைத்துமத தலைவர்கள் அங்கம் வகிக்கும் குழுவின் அனுமதியை பெற வேண்டும் என்று புதிய சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாகவும் மகிந்த தெரிவித்துள்ளார்.

இந்தக் குழுவில் அங்கம் வகிக்கும் ஒருவர் எதிர்த்தாலும் பௌத்த அறநெறி பாடசாலையும் பௌத்தர்களுக்கு இல்லாமல்போய் விடும் என்றும் குறிப்பிட்டும் மகிந்த, பௌத்த விகாரையை அமைப்பதற்கு பௌத்த குடிமகனுக்கு சட்டம் இயற்ற முடியுமா? என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதேவேளை பௌத்த மக்களின் காவல் தெய்வங்களான பௌத்த பிக்குகளை கட்டுப்படுத்துவதற்காக நாட்டில் கொண்டுவரப்பட்ட முதலாவது சட்டமாகவும் மைத்திரி- ரணில் அரசாங்கம் கொண்டுவரவுள்ள புதிய சட்டம் வரலாற்றில் இடம்பிடிக்கவுள்ளதாகவும் மகிந்த மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## சிங்கப்பூர் செல்ல முயற்சித்த...

இளைஞரிடம் இருந்து போலியாக தயாரிக்கப்பட்ட கடற்படையினரால் வழங்கப்படும் அடையாள அட்டையுடன் கூடிய புத்தகம் உள்ளிட்ட ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளுக்காக குறித்த இளைஞர் விமானநிலைய குற்றவிசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## பாடசாலை மாணவன்...

ள்ளது. இதில் யாழ்/புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரியில் தரம் 11இல் கல்வி கற்று வந்த பிரபாகரன் துவாரகன் (வயது 15) என்ற மாணவனே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மாணவனின் சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் நேற்று உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)

## அதிகாரிகளின் பட்டியல்...

குலத்திற்கு எதிரான கொடூரங்களை விசேட அதிரடிப்படை பொலிஸார் மேற்கொண்டுள்ளதாகவும் குற்றம்சாட்டியுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட போரின் போது போர் குற்றங்கள் உட்பட மனித குலத்திற்கு எதிரான கொடூரங்கள் இடம்பெற்றுள்ளதாக உறுதிப்படுத்திய ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையை தயாரிக்கும் குழுவான தாருஸ்மன் குழுவில் இடம்பெற்றிருந்த சர்வதேச சட்டவல்லுநரான யஸ்மின் சூகா தலைமையிலான இலங்கையில் நீதிக்கும் நியாயத்திற்குமான சர்வதேச அமைப்பு நேற்றுமுன்தினம் லண்டன் நகரிலுள்ள பிரித்தானிய நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடத்திய ஊடகவியாளர் சந்திப்பில் புதிய அறிக்கையை வெளியிட்டு வைத்தது.

ஐக்கிய நாடுகள் அமைதிகாக்கும் படையணியில் இணைத்துக்கொள்ளாது தடை செய்யப்பட வேண்டியவர்கள் என்று விசேட அதிரடிப்படை பொலிஸ் சேவையில் பணியாற்றும் ஐம்பதுக்கும் மேற்பட்டவர்களின் பெயர் விபரங்கள் அடங்கிய இரகசிய பட்டியலொன்றையும் ஐக்கிய நாடுகள் சபையிடம் கையளித்துள்ளதாக ஊடகவியலாளர் சந்திப்பில் அந்த அமைப்பு தெரிவித்தது.

இதற்கு முன்னர் இலங்கையின் எஸ்.ரி.எப் என்றழைக்கப்படும் விசேட அதிரடிப் படை பொலிஸ் சேவையில் பணியாற்றிய சிங்கள அதிகாரிகள் மற்றும் அவர்களுடன் இணைந்து செயற்பட்ட துணை ஆயுதக் குழுக்களைச் சேர்ந்த தமிழர்கள் ஆகியோர் வழங்கிய இரகசிய வாக்குமூலங்களை அடிப்படையாகக் கொண்டு விசேட அதிரடிப்படை பொலிஸார் என்ற புதிய அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் ITJP தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கையை தயாரிப்பதற்காக தகவல்களை திரட்டும் போது தெரியவந்த குற்றமிழைத்தவர்களின் பெயர் பட்டியலை ஐக்கிய நாடுகள் அமைதிகாக்கும் படையணிக்கான அலுவலகத்திடமும், ஜெனிவாவிலுள்ள ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்திடமும் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் ITJP தெரிவிக்கின்றது.

எது எவ்வாறாயினும் அமைதிகாக்கும் படையணிக்காக இலங்கை படை அதிகாரிகளையும் படையினரையும் தெரிவுசெய்யும் போது அவர்களின் பின்புலம் குறித்து ஆராயும் முன்கூட்டிய ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய பொறுப்பை ஐக்கிய நாடுகள் சபை சரிவர நிறைவேற்றத் தவறிவிட்டதாகவும் ITJP குற்றம்சாட்டியுள்ளது.

ஆபிரிக்க நாடொன்றில் பணியாற்றும் ஐக்கிய நாடுகள் அமைதிகாக்கும் படையணியில் இடம்பெற்றுள்ள இலங்கையின் STF அதிகாரியொருவர் 2006ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற அப்பாவி தமிழ் மக்களை படுகொலை செய்த சம்பவத்துடன் குற்றம்சாட்டப்பட்டவர் என்று ஐ.ரி.ஜே.பி யின் தலைவர் யஸ்மின் சூகா தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் இலங்கையைச் சேர்ந்த படை அதிகாரிகளை அமைதிகாக்கும் படையணியில் இணைத்துக்கொள்வதற்கு முன்னர் மேற்கொள்ள வேண்டிய அவர்களின் பின்புலத்தை ஆராயும் முன்கூட்டிய ஆய்வை ஐக்கிய நாடுகள் சபை முறையாக மேற்கொள்ளத் தவறியுள்ளதையே உறுதிப்படுத்துவதாகவும் யஸ்மின் சூகா தெரிவித்துள்ளார்.

இன்னமும் மன உளைச்சலில் இருந்து விடுபடாத சிங்கள நபர் ஒருவர் தெரிவிக்கையில், கொழும்பில் இடம்பெற்ற வெள்ளை வான் கடத்தல்களுடன் தொடர்புபட்டிருந்த குழுவில் இடம்பெற்றிருந்த தனது செயற்பாடுகள் திகிலூட்டும் திரைப்படத்தை போன்றது என்று குறிப்பிட்டதாக யஸ்மின் சூகா தலைமையிலான ITJP தெரிவிக்கின்றது.

போரின் இறுதி நாட்களில் பிடிபட்டவர்களின் கழுத்தை அறுத்ததாகவும், கழுத்தை நெரித்து கொலை செய்ததாகவும், கூரிய கத்திகளால் குத்தியும் வெட்டியும் கொடூரமாக படுகொலை செய்ததாகவும் யுத்தத்தின் இறுதி கட்டத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் மற்றுமொரு அதிரடிப்படை பொலிஸ் அதிகாரியொருவர் விபரித்ததாக ITJP கூறுகின்றது.

அதேவேளை தங்களின் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்ட அனைவரும் இறுதியில் படுகொலை செய்யப்பட்டதாகவும் தங்களுக்கு சாட்சியம் அளித்த விசேட அதிரடிப் படை பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்ததாகவும் ITJP தெரிவிக்கின்றது.

இலங்கை ஏனைய படையணிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளும் ஆட்கடத்தல் கள், சித்திரவதைகள் மற்றும் பாலியல் வன்கொடுமைகளில் ஈடுபட்டு வருகின்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ள போதிலும், STF என்ற விசேட அதிரடிப்படை பொலிசார் இன்னமும் இவ்வாறான கொடூரங்களில் ஈடுபடுவதற்கான சான்றுகள் தமக்கு கிடைக்கவில்லை என்றும் ITJP தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் கடந்த காலங்களில் பாரதூரமான குற்றங்களில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்பட்டுள்ள இலங்கை படையணிகளைச் சேர்ந்த அதிகாரிகள் உட்பட படையினரை பாதிக்கப்பட்ட மக்கள் இருக்கும் ஏனைய நாடுகளில் பணிக்கு அமர்த்துவது மிகவும் ஆபத்தானது என்றும் ITJP எச்சரிக்கை விடுத்துள்ளது.

விசேட அதிரடிப்படை பொலிஸாரினால் இழைக்கப்பட்ட மனித குலத்திற்கு எதிராக மிக மோசமான கொடூரங்கள் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களினது சாட்சியங்கள் மாத்திரமன்றி விசேட அதிரடிப்படையில் கடமையாற்றிய பல சிங்கள அதிகாரிகளினதும் சாட்சியங்கள் நிழல்பட ஆதாரங்கள் உட்பட ஏராளமான தகவல்கள் தம்மிடம் இருப்பதாகவும் தெரிவிக்கும் யஸ்மின் சூகா சாட்சியாளர்களுக்கான பாதுகாப்பு என்ற நிபந்தனையின் கீழ் செயற்படத் தயார் என்றும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை யஸ்மின் சூகா தலைமையிலான ITJP வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் தொடர்பான பட்டியலொன்றையும் உள்ளடக்கியிருந்தது. (ம)

## உரிய தீர்வு கிடைக்கா...

கொழும்பு தமிழ் சங்கத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்திய பத்திரிகையாளர் தி.ராமகிருஷ்ணனின் 'ஓர் இனப் பிரச்சினையும், ஓர் ஒப்பந்தமும்' என்ற நூல் அறிமுக விழாவில், சிறப்பு அதிதியாக கலந்துக் கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில், 'நாட்டை பிரிப்பது எமது நோக்கம் அல்ல. ஒருமித்த நாட்டுக்குள் நாங்கள் தனித்த ரீதியில் வாழ்ந்த பகுதிகளில் அதியுட்ச அதி கூடிய அதிகார பகிர்வு மூலமாக எமது உள்ளக சுய உரிமை அங்கீகரிக்கப்பட்டு நாங்கள் மரியாதையாக, சுய மரியாதையுடன் கௌரவமாக, மதிப்பாக வாழ வேண்டும் என்பதே எங்களது கொள்கை.

கடந்த 1987இல் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய கடப்பாடு இந்தியாவுக்கு உள்ளது. இந்த கடமையிலிருந்து இந்தியா விலக முடியாது.

எமது நாட்டுக்குள், எமது மக்களுடன் பேசி நாங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஓர் தீர்வை நாங்கள் ஏற்படுத்த விரும்புகின்றோம், அதற்கான தீர்வு கிடைக்காவிட்டால் அவ் விதமான நியாயமான தீர்வு கிடைக்க எது செய்ய வேண்டுமோ, அதை செய்ய நாங்கள் தயங்க மாட்டோம் என கூறினார். (ம)

## விபத்தில் காயமடைந்த...

என்ற இளைஞன் கடந்த 19.04.2018 அன்று பருத்தித்துறையிலிருந்து நெல்லியடி நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்ற வேளை நெல்லியடி சந்திக்கு முன்பாக துவிச்சக்கரவண்டியுடன் விபத்துக்குள்ளாகியதில் தலையில் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் வீதியால் சென்றவர்களால் மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக கிசிச்சைக்காக அன்றைய தினம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார். பின்னர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

தரம் 10,11 வணிகக்கல்வியும் கணக்கீடும் A/L கணக்கீடு
(தமிழ், ஆங்கில மொழி மூலம்)
பிரத்தியேக மற்றும் குழுவகுப்புக்கள்
இடம் - கந்தர்மடச்சந்தி, கொழும்புத்துறை
தொடர்புகளுக்கு 077 216 8884

A/L-2020
புவியியல் - N-BABU
* ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்
* மாதாந்த பரீட்சை வழிகாட்டல்
* சாதாரண தரத்தில் புவியியல் படித்திருக்க வேண்டிய அவசியமில்லை
* புதிய, தனிப்பட்ட அனுமதிகள் வழங்கப்படும்
DMI ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம்- யாழ்ப்பாணம்.
தொடர்பு - 077 936 5087

உடனடி வேலைவாய்ப்பு
யாழ். நகரிலுள்ள எமது நிறுவனத்துக்கு பல தரப்பட்ட வகையில் பதவி வெற்றிடங்கள் உள்ளன. உங்கள் தகைமைக்கு ஏற்ப பதவிகளை பெற்றுக்கொள்ளலாம். உடன் அழையுங்கள்.
* O/L or A/L விரும்பத்தக்கது * நிரந்தர தொழில்வாய்ப்பு
* வயதெல்லை => 18-35 * 15 பேர் மட்டும்
தங்குமிட வசதி உண்டு (3748)
தொடர்புகளுக்கு: 077 1571699, 021 5679001

சாவகச்சேரியில்....
வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
அருள்ஸ் பிறைவேற் லிமிட்டட் நிறுவனங்களின் இணை நிறுவனம்
அருள்
இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
076 443 1576

CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்களை பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.
CNR World Wide Express
இல.401, மனிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145 077 2931062
follow us cnrworldwideexpress
(க-2374)



நெல்லியடியில்....
வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
அருள்ஸ் பிறைவேற் லிமிட்டட் நிறுவனங்களின் இணை நிறுவனம்
அருள்
இல.01, எரிபொருள் நிரப்பு நிலையம் அருகில், நெல்லியடி.
076 443 1576

# புங்குடுதீவு...

சிவலோகநாதனின் மூத்த சகோதரியான, யாழ்.பல்கலைக்கழக பட்டதாரி நிஷாந்தி சிவலோகநாதனுக்கு அபிவிருத்தி அலுவலர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அவர் தனது நியமனத்தை நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

கடந்த வருடம் ஜனாதிபதி வவுனியாவுக்கு சென்றிருந்த வேளையில் மாணவி வித்தியாவின் வீட்டுக்கும் சென்று அக்குடும்பத்தினரின் நலன்களை கேட்டறிந்தார்.

அப்போது அவர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிக்கு ஏற்ப இந்த நியமனத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-9)

அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
லண்டன், ஜேர்மனி, கனடா மற்றும் சில நாடுகளுக்கு விலை குறைக்கப்பட்டுள்ளது
வெளிநாடு,உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை
021 221 5656 070 330 5500
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | வேலணை | ஊர்காவற்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | வவுனியா | கனகராயன்குளம் | முல்லைத்தீவு


விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK-550*/=Kg
நெதர்லாந்து-700/=Kg (Holland)
DELIVERY IN 3-5 DAYS
தொடர்புகளுக்கு 0768226240
மானிப்பாய் யாழ்ப்பாணம் கிளிநொச்சி சாவகச்சேரி நெல்லியடி பருத்தித்துறை வல்வெட்டித்துறை
V2 TRAVELS



SB Travels and Tours (PVT) Ltd
விமான ரிக்கட்களின் நேரடி முகவராக செயற்படும் SB Travels and Tours (PVT) Ltd தற்போது சென்னை சென்றுவருவதற்கு ஆரம்பவிலையாக 18,800/= இல் இருந்து விமான ரிக்கட்களை வழங்கி வருகின்றது. (இப்போதே எமது நிறுவனத்திற்கு அழைப்பை ஏற்படுத்தி தெரிந்து கொள்ளுங்கள்.)
மற்றும் இந்தியாவிற்கான வீசாவினை நேரடியாக எமது நிறுவனத்தினூடாகவே விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம். (C-2381)
தொடர்புகளுக்கு
021 2228555 } Jaffna 011 2540280 -Colombo 15
021 2229555 011 2333322 -Colombo 13
021 2227666 -Nallur 011 2361711 -Colombo 06

HARI REAL ESTATE
வீடு/காணி விற்பனைக்கு
* தென்மராட்சி கச்சாய் தெற்கு - அம்மன் கோவிலடி பகுதியில் 120ற்கும் மேற்பட்ட பயன்தரு தென்னை மரங்களுடன் 13½ பரப்பு, 05½ பரப்பு மணல்தரையுடன் கூடிய நன்னீர் வளம் மற்றும் அமைதியான சுற்றயலுடன் கூடிய விசாலமான காணிகள் விற்பனைக்குண்டு ...
* வேலணை மேற்கு வங்களாவடி சந்திக்கு மிக அருகில் 04 பரப்பு பழைய வீட்டுடன் கூடிய குடியிருப்பு மற்றும் வனிக நோக்கிற்கு பொருத்தமான காணி விற்பனைக்குண்டு ... (பேருந்து வழித்தட இல 776)
* யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதி வேம்படி சந்திக்கு அண்மித்து வணிகத் தேவைகளுக்கேற்ற 2¼ பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்குண்டு ...
* மண்டைதீவு 05ம் வட்டாரத்தில் 50 பரப்பு வெற்றுக்காணி, நன்னீர் வளத்துடன் விற்பனைக்குண்டு ...
* திருநெல்வேலி கலாசாலை வீதியிலிருந்து 200Mtr உட்புறமாக இரண்டு புதிய வீடுகள் குடியிருப்பதற்கு தயார் நிலையில் விற்பனைக்குண்டு ...
தரகர்கள் தேவையில்லை
'ஹரி றியல் எஸ்டேட்'
இல. 10A, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி +94 021 221 4422
மொபைல் + 94 70 300 4000
முகநூல் harirealestate.lk
POWERED BY HARI
(C-2391)

# மரண அறிவித்தல்



(3728)

## ஏரம்பு ஜெகதீஸ்வரன்

(ஓய்வுபெற்ற உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி)

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஏரம்பு ஜெகதீஸ்வரன் அவர்கள் கடந்த (22.04.2018) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஏரம்பு - மகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், விக்னேஸ்வரி (ஓய்வுநிலை ஆசிரியை - உடுவில் மகளிர் கல்லூரி) அவர்களின் பாசமிகு கணவரும், கோகிலா (லண்டன்), வரதன் (லண்டன்), உத்தமன் (யாழ்.பிராந்திய முகாமையாளர் - அபான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கலாவண்ணன், லக்ஷ்மினி, கோகிலப்பிரியா ஆகியோரின் அன்பு மாமனாரும், தியாகராசா (ஓய்வுநிலை ஆசிரியர்), சண்முகானந்தராசா (பிரான்ஸ்), கணேசானந்தராசா (ஓய்வுநிலை பிரதேச செயலாளர், ஊர்காவற்றுறை), அமரர் முருகானந்தராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், கோபி, தருணி, றாகவி, பிரகாஷ், கருணியா, சிவானியா ஆகியோரின் பாசமிகு பேரனும், அமரர் நடேசலிங்கம் (லண்டன்), யோகேஸ்வரி (வைத்திய கலாநிதி), நாகேஸ்வரி, காலஞ்சென்ற இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2018) புதன்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.30 மணியளவில் உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னை இல்லம்,
ஞான வைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்
021 205 4604, 077 317 9593

# மரண அறிவித்தல்



## திருமதி பொன்னுத்துரை பூபதி

கொக்குவில் கிழக்கை பிறப்பிடமாகவும், உரும்பிராய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை பூபதி அவர்கள் கடந்த (22.04.2018) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - பார்வதி ஆகியோரின் அன்பு மகளும், உதயகுமார், நந்தினி, மகேந்திரகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, சரோஜினிதேவி மற்றும் பரமநாதன், புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயமனோகரி, தேவதவஞானம், சர்மிளா ஆகியோரின் அன்பு மாமியாரும், வாதுசன், காருண்யன், பார்வியன், பரிதாஸ், நிசாந், ஷாமோத், ஒவியா, ஷாகேத் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2018) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

(3749)

தகவல்:
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.04.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.